REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 பெப்ரவரி 8 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 89 இல. 33 | February 08,Monday, 2021 | 20பக்கங்கள் | 30/-

கொரோனா வைரஸ் தொற்று;

## குணமடைந்தோரின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 401 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 68 ஆயிரத்து 576 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை வைரஸ் தொற்றுக்குள்ளான 63 ஆயிரத்து 401 பேர் நேற்று வரை பூரணமாக

06

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் குற்றச்சாட்டு;

# அரசின் எதிர்ப்பு அறிக்கை எழுத்து மூலம் சமர்ப்பிப்பு

### வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம், எம்.ஏ.அமீனுல்லா**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் எதிர்ப்பை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திற்கு எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று சந்தித்து ஆசிபெற்றதன் பின்னர், ஊடகங்கங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏதாவது இடம்பெற்றால் நாட்டின் அரசியலமைப்புக்கு அமைய மாத்திரமே அது குறித்து செயற்பட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை, கொரோனா பரவல் காரணமாக இணையவழி காணொளி முறையில்

06



கேகாலை, தெரணியகல பிரதேச செயலக பிரிவில் உள்ள திக்கெல்லகந்த கனிஷ்ட வித்தியாலய வளாகத்தில் நடைபெற்ற "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சியின் போது டயலொக் நிறுவனம் நன்கொடை அளித்த தொலைக்காட்சிகள் மற்றும் இணைப்புகளை பிரதேச பாடசாலை அதிபர்களிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கையளிப்பதை காணலாம்.

## EPF பங்களிப்பு வயது 14 முதல் 16 வரையானது

### விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தது

Employee's Provident Fund

ஊழியர்சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யக் கூடிய குறைந்த பட்ச வயதெல்லையை மாற்றியமைப்பதற்கான உத்தரவு விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இந்த வயதெல்லையை 14 முதல் 16 வரை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு தற்போதுவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில்

06

கொரோனாவால் உயிரிழந்த

## வைத்தியர் கயானுக்கு வவுனியாவில் அஞ்சலி



கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்த வைத்தியர் கயான் தந்தநாராயணவிற்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர்

06

## சிறு குற்ற கைதிகள் 11,000 பேர் விடுதலை

**வெசாக் தினத்தில் மேலும் ஒருதொகை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் 11,000ற்கும் அதிகமானோர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார். மேலும் ஒரு தொகை சிறைக் கைதிகளை எதிர்வரும் வெசாக் பண்டிகை தினத்தன்று விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை ஏற்ற சமயம் 30,000 சிறைக்கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்ததாக தெரிவித்துள்ள அவர், இதுவரை அதனை 18,000 ஆக மட்டுப்படுத்த முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

கணக்கு உரிமையாளருக்கு தெரியாமலேயே பண அறவீடு;

# வர்த்தக வங்கிகளில் நடக்கும் பண மோசடி



**அஜித் கப்ரால் நடவடிக்கைக்கு தயார்**

வர்த்தக வங்கிகளில் கணக்கு உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தாமல் பணம் அறவிடப்படுவதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சில வங்கிகள் தவறாக எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆதரவளிக்காமல் புதிய சட்ட திட்டங்கள் சிலவற்றை முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வங்கிகளில் வைப்பு வைத்துள்ள கணக்கு உரிமையாளர்களுக்கு அறிவிக்காமல் பணம் அறவிடும் நடவடிக்கை இடம்பெறும் என்றால் அது முழுமையாக தவறான விடயமாகும்.

எந்தவொரு வங்கிகளாலும் கணக்கு உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தாமல் ஒரு சதமேனும் எடுக்க முடியாது.

06

## நாட்டின் உள் விவகாரங்களுக்கு சர்வதேச அனுமதி தேவையற்றது

03



பிக்குமார்களின் பெற்றோர்களுக்கு வீட்டுத்திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று சியம் பலாண்டுவ ரஜமகா விகாரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.பயனாளிகளுக்கான காசோலையை பிரதமர் கையளிப்பதை படத்தில் காணலாம்.



தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க பணியக அங்கத்தவராக இ.தொ.க உப தலைவர் செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை நீதி அமைச்சர் அலி சப்ரி வழங்குவதை படத்தில் காணலாம்.

## வீதி விபத்துக்களில் தந்தை, மகன் உட்பட 7 பேர் நேற்று பலி


**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் உள்ளிட்ட நால்வர் பலியாகியுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. குருநாகல் , எம்பிலிப்பிட்டி, மகாஓய மற்றும் கொபெய்கனே போன்ற பிரதேசங்களிலேயே

06

## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு பிரச்சினை

### 1000 ரூபா குறித்து முக்கிய பேச்சு இன்று



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள உயர்வு தொடர்பான முக்கிய பேச்சு வார்த்தையொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எந்தவித இறுதித் தீர்மானமும் இன்றி முடிவுற்றுள்ள நிலையில் இன்றைய பேச்சுவார்த்தை மிக முக்கியத்துவம் பெறுவதாக கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

06

## யாழில் ரயில் மோதி குடும்பஸ்தர் பலி



யாழ்ப்பாணம் அரியாலையில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று (07) முற்பகல் அரியாலை நாவலடியில் இடம்பெற்றுள்ளது.

06

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி அவசியம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு



நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொவிட்19 தடுப்பூசி திறம்பட வழங்கப்பட வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) சுட்டிக்காட்டுகிறது. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அச்சங்கத்தின் உறுப்பினர்

06

## மேற்குலக நாடுகள், புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு எதிராக சதித்திட்டம்



### ஐ.நாவின் பரிந்துரை அறிக்கை குறித்து அமைச்சர் வீரசேகர

இலங்கைக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மேற்கத்தைய நாடுகள் இணைந்து சதித்திட்டங்களை மேற்கொள்வதாக, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பாதுகாப்பு தரப்பினர் மற்றும் அரச ஊழியர்களை உயர் பதவிகளில் இருந்து நீக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்

06

## கொரோனாவால் 102 வயது மூதாட்டி நேற்று மரணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் ஆகக்கூடிய வயதுடைய கொரோனா வைரஸ் நோயாளியொருவர் நேற்றுமுன்தினம் காலியில் உயிரிழந்துள்ளார். காலி நகர எல்லைக்குட்பட்ட பீற்றர் கிரிங் கொடமாவத்தையைச்சேர்ந்த

06



## 'பொத்துவில் – பொலிகண்டி ' மாபெரும் மக்கள் எழுச்சிப்பேரணி

விபரம் 11 ஆம் பக்கம்

PCR பரிசோதனை இயந்திரங்களுக்கு

## நாட்டில் எத்தகைய தட்டுப்பாடும் இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிசிஆர் பரிசோதனை உபகரணங்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் கிடையாது என ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் கொரோனா கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

06

**விக்கல் வீராச்சாமி**



வடக்கில நடந்த ஆர்ப்பாட்டத்தில தலைவரோட எப்பவும் ஒட்டியபடி படத்துக்கு போஸ் கொடுக்கிற அந்த வெள்ளத்தல உயரமான ஏணி தம்பியை காணல......

அஞ்சு வருசம் எதையும் செய்யாம எந்த முகத்தை வச்சுக் கொண்டு போறது எண்டு உடம்பு சரியில்லை என்று தட்டிக்–கழித்து விட்டாராம்...!!!!

# மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது ஒரு அரசியல் நாடகம் அல்ல



## ஒன்பதாவது "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தல்

மக்களிடம் வந்து பிரச்சினைகளைத் தீர்ப்பது ஒரு அரசியல் நாடகமோ அல்லது ஊடக காட்சிப்படுத்தலோ அல்ல என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.



அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சுமார் நான்கு ஆண்டுகள் உள்ளன. கிராமத்திற்குச் செல்வது அதிகாரத்திலிருந்து செய்ய வேண்டிய பணியை நிறைவேற்றுவதற்காகும். எதிர்க்கட்சியிலிருக்கும் போது சென்றாலும், வேறு எந்த ஜனாதிபதியும் மக்கள் பிரச்சினைகளை தீர்க்க பின்தங்கிய கிராமங்களுக்குச் செல்லவில்லை. கொழும்பில் இருந்துகொண்டு அதிகாரிகளிடம் மட்டுமே கலந்தாலோசித்து மக்களின் பிரச்சினைகளை அடையாளம் காண்பது எனது நடைமுறை அல்ல. யார் இந்த முறைமையை விமர்சித்தாலும் "நான் எனது திட்டப்படி வேலை செய்கிறேன்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் சென்று பணியாற்றியே நான் ஜனாதிபதியானேன். மக்கள் பணியின் மூலமே மக்கள் தலைவராக முடியும்" எனவே மக்கள் மத்தியில் சென்று பணியாற்றுமாறு ஜனாதிபதி இளம் மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தினார்.

நேற்று முன்தினம் (06) கேகாலை மாவட்டத்தில் உள்ள தெரணியகல பிரதேச செயலக பிரிவில் உள்ள திக்கெல்லகந்த கிராம சேவகர் பிரிவில் உள்ள திக்கெல்லகந்த கனிஷ்ட வித்தியாலய வளாகத்தில் நடைபெற்ற ஒன்பதாவது "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சியில் பங்கேற்ற போதே ஜனாதிபதி இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவுகளை சாட்டாக வைத்துக்கொண்டு எந்தவொரு தனிநபரோ அல்லது குழுவோ சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பாரம்பரியமாக பயிர்ச்செய்த நிலங்களில் பயிர்ச்செய்யும் உரிமையை விவசாயிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. இதைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கும் வனத்துறைக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் சிலர் செயற்படுவதாக தெரிய வந்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார். இயற்கையின் சக்தியை மனிதனின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும். பொருளாதாரத்தை வலுப்படுத்தாமல் தேசியத்தை பாதுகாக்க முடியாது என்றும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் ஜனாதிபதி கூறினார்.

"கிராமத்துடன் உரையாடல்" திட்டம் 2020 செப்டம்பர் 25 அன்று பதுளை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மாத்தளை, இரத்தினபுரி, அநுராதபுரம், அம்பாறை, பொலன்னறுவை, களுத்துறை மற்றும் மொனராகலை மாவட்டங்களை உள்ளடக்கி கடந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதுவரை சரியான கவனம் செலுத்தப்படாத நகரத்திற்கு வெளியே உள்ள தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த மக்களை சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளை விசாரித்து, அச்சந்தர்ப்பத்திலேயே அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து தீர்வுகளை வழங்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். தீர்ப்பதற்கு காலம் செல்லும் பிரச்சினைகள் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக குறித்துக் கொள்ளப்படும். கிராம மக்களிடம் சென்று, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அவர்களின் முன்மொழிவுகளில் இருந்து தீர்வுகளைக் காண்பதும் இந்த திட்டத்தின் நோக்கம்.

தெரணியகலை நகரத்திலிருந்து சுமார் 23 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள திக்கெல்லகந்த சிவனொளிபாத பாதுகாக்கப்பட்ட வன எல்லையில் உள்ளது. அஸ்கல, பல்லஹேன, நாமல்வத்த மற்றும் ஊரவனாவ ஆகிய கிராமங்கள் திக்கெல்லகந்த கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவையாகும். 208 குடும்பங்களைக் கொண்ட இந்த கிராமங்களின் மக்கள் தொகை 718 ஆகும். மாலிபொட, பொத்தெனிய மற்றும் மாகல ஆகிய கிராமங்கள் திக்கெல்ல கிராமத்தைச் சுற்றியுள்ள ஏனைய கிராமங்களாகும்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் வலயத்தில் அமைந்துள்ள இந்த கிராமங்களில் உள்ள பலர் தேயிலை செய்கை அல்லது அதனுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். கராம்பு, ஏலக்காய் மற்றும் மிளகு ஆகியவை ஏனைய பயிர்களாகும். கிதுல் தொழிலில் 25 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

வீதி மற்றும் பாலங்கள் அபிவிருத்தி செய்யப்படாததாலும், பொதுப் போக்குவரத்து சேவைகள் பலவீனமடைந்திருப்பதாலும் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வருகைதந்திருந்த மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை ஜனாதிபதி விளக்கினர். வீதி சிரமங்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி பொத்தெனிகந்தவிலிருந்து திக்வெல்லகந்த வரையான வீதி நிர்மாணப் பணிகளை நாளைய தினமே ஆரம்பித்து விரைவாக நிறைவுசெய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாலிபொடயிலிருந்து சிவனொளிபாத வீதியில் பன்தெனிய வரையிலும், தெரணியகலயிலிருந்து நூரிய உடமாலிபொட முதல் திக்கெல்லகந்த வரையிலும், மாலிபொடயிலிருந்து ஊரவனாவ அம்பகந்த வரையிலுமாக பல வீதிகளின் அபிவிருத்திப் பணிகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.



நாடு முழுவதும் கிராமப்புற தோட்டங்களை அண்மித்த சிறிய உள்நுழைவு வீதிகள் மற்றும் சிறிய வீதிகளை இணைக்கும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இப்பகுதியில் உள்ள அனைத்து பாலங்கள் குறித்தும் முறையாக கண்காணித்து அபிவிருத்தி செய்யவும் முடிவு செய்யப்பட்டது. அபிவிருத்திச் செயற்பாட்டில் ஒப்பந்தக்காரர்கள் உரிய முறையில் செயற்படாவிட்டால், அவர்களை விடுத்து பொருத்தமான நிறுவனங்களிடம் அவற்றை ஒப்படைக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இனிமேல், அனைத்து நிர்மாணப் பணிகளும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் மேற்பார்வையில் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், பொல்கஸ்வத்த, பஸ்நாகல ஹொரகஹஹின்ன நீர் திட்டங்களை விரைவுபடுத்தவும் மாவட்டத்தில் உள்ள நீர் மூலங்களை அடையாளம் கண்டு குடிநீர் தேவைகளை வழங்கவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.





மாலிபொட நகரத்தை முறையான விதத்தில் அபிவிருத்தி செய்யுமாறு நகர அபிவிருத்தி அமைச்சுக்கும், புதிய வீட்டுத் திட்டத்தை விரைவுபடுத்துமாறு தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டது.

திக்கெல்லகந்த கனிஷ்ட வித்தியாலயத்திற்கு புதிய கட்டடமொன்றை வழங்கவும் ஆய்வுகூட வசதிகள் மற்றும் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யவும் முடிவு செய்யப்பட்டது. ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு முச்சக்கர வண்டியொன்றை வழங்கவும் ஜனாதிபதி முடிவு செய்தார்.

பொத்தெனிகந்த வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது.



# வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கு கல்வியமைச்சர் விஜயம்









வட்டுக்கோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள 198 வருடங்கள் பழைமை வாய்ந்த யாழ்ப்பாணக் கல்லூரிக்கு நேற்று முன்தினம் (06) கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் நேரில் விஜயம் செய்தார். இவ் விஜயத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதனும் கலந்து கொண்டார். பாடசாலையின் பெருமைகளைப் பற்றி கேட்டறிந்த கல்வி அமைச்சர், பாடசாலை பற்றியும் வடமாகாண கல்வி நிலைமை தொடர்பாகவும் உரையாற்றினார். பெருமைவாய்ந்த அப் பாடசாலையின் வரலாற்று சிறப்பு மிக்க நூலகத்தையும் அவர் பார்வையிட்டார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 பெப்ரவரி 8 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் தை 26

ராகுகாலம் : காலை : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
நட்சத்திரம்: மூலம் மாலை 3.51
திதி: துவாதசி

**தொழுகை நேரம்**

07 முதல் 12 வரை
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.21
இஷா - 07.33





வெளிவிவகார அமைச்சின் கண்டி உதவி தூதரகத்தை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன திறந்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

# 27 அத்தியாவசிய பொருட்களுக்கு இன்று முதல் விலைகுறைப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கம் தீர்மானத்தின்படி 27 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை இன்று முதல் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நாட்டு மக்களின் நலன் கருதி சுப்பர் மார்க்கெட் உள்ளிட்ட பாரிய அத்தியாவசியப் பொருள் விற்பனை நிலையங்கள் இந்த விலைக் குறைப்பை பின்பற்ற முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.


அது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைக்கும் வகையில் மேற்படி விற்பனை நிறுவனங்கள் மக்களுக்கு சலுகை வழங்குமானால் அதனை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அரிசி, மா, பருப்பு, சீனி உள்ளிட்ட

06

# முகக் கவசம் அணியத் தவறிய 3 ஆயிரத்து 22 பேர் கைது

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறிய குற்றச் சாட்டில் கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 3 ஆயிரத்து 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மஞ்சள் தீயிட்டு அழிப்பு

**(புத்தளம் விசேட நிருபர்)**

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கடல் வழியாக இந்நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு கல்பிட்டி அம்மாதோட்டம் கடற்கரை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் புத்தளம் பிரிவின் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட பெருமளவிலான சமையல் மஞ்சள் கல்பிட்டியில் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

சுமார் 1380 கிலோவும் 500 கிராமும் எடையுடைய சமையல் மஞ்சளே இவ்வாறு தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் 50 இலட்சத்திற்கும் அதிகமாகும் என்பதோடு தற்போதைய சந்தைப் பெறுமதி 96 இலட்சம் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை மற்றும் உத்தரவுக்கு அமைவாக இந்த சமையல் மஞ்சள் தீயிட்டு அழிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாகவும் கல்பிட்டி உதவி பொலிஸ் அத்தியட்சகர் டீ. டீ. பீ. வீரசிங்க தெரிவித்தார்.

## பதுளை மக்களுக்கு சுகாதரா பிரிவு எச்சரிக்கை;

# ஒரே நாளில் 197 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## மாவட்டம் ஒன்றில் பதிவான அதிக தொற்றாளர்கள்

நாட்டில் முதன்முறையாக பதுளை மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 200 ஐ அண்மித்துள்ளது.



நேற்று முன்தினம் (06) 197 கொவிட் தொற்றாளர்கள் பதுளை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக கொவிட் 19 பரவல் தடுப்பு செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், மேல் மாகாணத்தை தவிர்ந்த வெளிமாவட்டம் ஒன்றில் அதிகளவான தொற்றாளர்கள் பதிவான முதல் சந்தர்ப்பம் இதுவென கருதப்படுகிறது.

பதுளை மாவட்டத்தில் பதிவாகியுள்ள தொற்றாளர்களில் 185 பேர் ரிதீமாலியத்த பிரதேசத்தின் தொழிற்சாலையொன்றின் ஊழியர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று (07) காலை 06.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 726 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து நாட்டின் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 68,576 அதிகரித்துள்ளதாக கொவிட்19 பரவல் தடுப்பு

06

# மாகாண சபை தேர்தலை பின்போடும் தேவை அரசாங்கத்துக்கு கிடையாது

## கூட்டமைப்பின் குற்றச்சாட்டுக்கு - அமைச்சர் ஜோன்ஸ்டன்

மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கான தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என்று நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார். மக்களின் ஜனநாயக உரிமைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது என்றும் அவர் கூறினார்.

கொவிட்19 வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் பொதுத்தேர்தலை நடத்தியதை போன்று பாதுகாப்பான முறையில் மாகாண சபை தேர்தலையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



வடக்கு, கிழக்கு மாகாணத்தை தவிர ஏனைய மாகாணங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் எனவும் நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "மார்ச் மாதம் மாகாண சபை தேர்தலை நடத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. மார்ச் மாதம் முதல் வாரத்தில் தேர்தலை நடத்த அமைச்சரவை மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. எதிர்பாராத வகையில் கொவிட் 19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் சுற்று தீவிரமடைந்த காரணத்தினால் தேர்தலை தற்காலிகமாக பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபை

06

# பழிவாங்கும் நோக்கில் எவருக்கு எதிராகவும் எமது அரசு செயற்படாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தற்போதைய அரசாங்கம் அரசியல் பழிவாங்கும் நோக்கத்தில் எவருக்கு எதிராகவும்வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கமோ ஜனாதிபதியோ அலலது பிரதமரோ நீதித்துறையில் ஒரு போதும் தலையிடப்போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.



ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் மத்தியவங்கி பிணைமுறி சம்பவம் சம்மந்தமான தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

விசாரணைகள் நடத்தப்பட்டு அதன் அறிக்கைகள் முதலில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அதனையடுத்து முறையான வகையில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான இறுதி அறிக்கை அண்மையில்தான் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

06

## கொரோனா மரணங்கள் தகன விவகாரம்;

# குடும்ப பிரச்சினையை வீட்டிற்குள் தீர்க்க அரசு முன்வர வேண்டும்

கொரோனாவினால் இறப்பவர்களை எரிப்பது தொடர்பான பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்கு செல்ல விடாது குடும்ப பிரச்சினையை வீட்டிற்குள்ளேயே தீர்க்க அரசு முன்வர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.



நேற்றுநடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொரோனாவினால் இறப்பவர்களை தகனம் செய்வது தொடர்பான பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,தொழில்நுட்ப குழுவை விட உயர்ந்த தகைமை உள்ள நிபுணர்குழு புதைப்பதில் பிரச்சினை இல்லை என்று கூறியுள்ளது.

06

# நிபுணர்குழுவின் அறிக்கைக்கமைய சர்வதேசத்திற்கு பதிலளிக்கவேண்டும்

"மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பெறப்பட்ட சர்வதேச போர் குற்ற நிபுணர்கள் ஐவரின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்தினதும் இராணுவ வீரர்களினதும் குற்றமற்ற தன்மை தொடர்பாக சர்வதேசத்திற்கு வாய்மொழி மூல பதிலை முன்வைப்பது சரியான தீர்வாகும்" என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கொடுப்பது தொடர்பான தனது நிலைப்பாட்டை தேசிய சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் கவுன்சில் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள யோசனைகளிலிருந்து வெளியேற அரசாங்கம் எடுத்த முடிவு பாராட்டுக்குரியது என்றும் அத்துடன் நின்றுவிடாமல் இலங்கைக்கு எதிரான போர் குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மெக்ஸ்வல் பரணகம ஆணைக்குழுவை நியமித்தார். சர்வதேச போர்குற்ற நிபுணர்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்தின் முன்னிலையில் வாய்மொழி மூல பிரதிவாதங்களை முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வும் தேசிய சுதந்திர முன்னணியின் பிரசார செயலாளரும்.

# நாட்டின் உள் விவகாரங்களுக்கு சர்வதேச அனுமதி தேவையற்றது

சுயாதீன நாடான இலங்கையின் உள்ளக விவகாரங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்காக சர்வதேச நிறுவனங்களின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியம் கிடையாது என தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க வலியுறுத்தியுள்ளார்.

குறிஞ்சிமலைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தொல்பொருள் அகழ்வுகள் பற்றி அவர் நேற்று ஊடகங்களுக்கு விளக்கமளித்தார். இதற்காக யுனெஸ்கோ அல்லது வேறு சர்வதேச நிறுவனங்களின் அனுமதியைப் பெற



வேண்டிய அவசியம் கிடையாது. தற்சமயம் மேற்கொள்ளப்படும் அகழ்வு நடவடிக்கைகளின் போது காணப்படும் சவால்கள் அநாவசியமானவை என்றும் தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க கூறினார்.

வடபகுதியைச் சேர்ந்த சில அரசியல் வாதிகள் தொல்பொருள் அகழ்வுகள் பற்றி தெரிவிக்கும் கூற்றுக்கள் அடிப்படையற்றவையாகும். எங்கெங்கு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கிறது. கடந்த ஜனவரி மாதம் 18ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அகழ்வின் போது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பொருட்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

06



இந்து கலாசார திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக பணியாற்றிய கர்ஜுன் பதவி உயர்வு பெற்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உதவிச்செயலாளராக பதவியுயர்வு பெற்றுச்செல்கிறார். இதனையொட்டி இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன், முன்னாள் பணிப்பாளர் உடுவில் தில்லை நடராஜா , பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் பாபுசர்மா ஆகியோர் இணைந்து கர்ஜுனுக்கு நினைவுச்சின்னம் வழங்குவதை இங்கு காணலாம்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம்;

# ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட மேலும் 30 பேருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் ஈஸ்டர் ஞாயிறன்று இடம்பெற்ற 8 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை இன்று அமைச்சரவையில்



06

# கஸகஸ்தான் நாட்டிலிருந்து 165 சுற்றுலா பயணிகள் வருகை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

கொவிட் 19 கொரோனா தொற்றினை சிறந்தமுறையில் கட்டுப்படுத்திய நாடு என்ற வகையில் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நாட்டிலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு எமது நாட்டின் விமான நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன. இதனையடுத்து கஸகஸ்



தான் நாட்டின் தேசிய விமானசேவைக்கு சொந்தமான எயார் A 321 LR விமானம் முதல் தடவையாக கஸகஸ்தான் நாட்டின் அல்மாட்டிலிருந்து 165 சுற்றுலாப் பயணிகளுடன் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினை நேற்றுமுன்தினம் (06 ) வந்தடைந்தது.

விமானத்தினையும் சுற்றுலாப் பயணிகளையும் வரவேற்கும் நிகழ்வு சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் தை மாதம் 26ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஜுமாதல் ஆகிறாஃ பிறை 25

### குறள் தரும் சிந்தனை



அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது

ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும், அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால் அதுவே அவனுக்கு நல்லது.

## தோட்டத் தொழிலாளர்களின் மனிதாபிமானக் கோரிக்கை

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி மலையக பெருந்தோட்டங்களில் நேற்றுமுன்தினம் ஏற்பா செய்யப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. உண்மையில் இப்போராட்டமானது எதிர்பார்த்ததை விடவும் வெற்றிகரமாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் மலையக பெருந்தோட்டங்களில் வழமையான பணிகள் நேற்றுமுன்தினம் முழுமையாக முடங்கிப் போனமை ஒருபுறமிருக்க, தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையானது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நேற்றுமுன்தினம் எதிரொலித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இப்போராட்டத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வெற்றியாக மாத்திரமன்றி, தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்திக்குரிய அடையாளமாகவும் கொள்ள முடியும். மலையக பெருந்தோட்டங்களில் பகிஷ்கரிப்பு காரணமாக பணிகள் முடங்கியதுடன் மாத்திரமன்றி, அங்கு நடத்தப்பட்ட கடையடைப்பினால் முழு மலையகமுமே ஸ்தம்பித்துப் போனதென்பதே உண்மை.

அதேசமயம் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களான தங்களது உறவுகளுக்காக நேற்றுமுன்தினம் ஆதரவு ஆர்ப்பாட்டங்களை நடத்தியதையும் காண முடிந்தது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மற்றும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள விவகாரம் தொடர்பாக தொடர்ந்து குரலெழுப்பப்பட்டு வருவதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தம் ஆகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கும் விடயத்தில் தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்கும், அரசாங்க தரப்புக்குமிடையே அண்மையில் நடத்தப்பட்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்காமல் தோல்வியிலேயே முடிந்தது. இதன் காரணமாகவே மலையகப் பெருந்தோட்டங்களில் மாபெரும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தது. தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்துத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றதன் காரணமாகவே மலையகமே முடங்கிப் போனது.

தொழிலாளர்களுக்கிடையே இது போன்ற ஒற்றுமை கடைப்பிடிக்கப்படுவதைப் போன்று, தொழிற்சங்கங்களும் ஐக்கியமாகச் செயற்பட்டால் கோரிக்கையை வென்றெடுப்பது கடினமாக இருக்காதென்ற யதார்த்தத்தை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கங்களுக்கிடையே ஒற்றுமை பேணப்படாததன் காரணமாகவே இதுவரை காலமும் தோட்டத் தொழிலாளர்களுக்கான நியாயமான கோரிக்கைகள் வென்றெடுக்கப்படவில்லை என்பதே உண்மை. ஆயிரம் ரூபா விடயத்தில் அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஓரணியில் திரள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இது இவ்வாறிருக்கையில், ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பள விவகாரம் தொடர்பாக இன்று மீண்டும் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது. தொழிற்சங்கங்கள், அரச தரப்பு, முதலாளிமார் சம்மேளனம் ஆகிய மூன்று தரப்புகளும் இன்றைய பேச்சுவார்த்தையில் மீண்டும் பங்கேற்கின்றன. இன்றைய பேச்சுவார்த்தை வெற்றியளிக்குமென்று இ.தொ.கா வட்டாரங்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த போதிலும், இப்பேச்சுவார்த்தை முடிவு எவ்வாறிருக்குமென்பது இன்றுதான் தெரியவரும். பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று, தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளக் கோரிக்கை வென்றெடுக்கப்பட வேண்டுமென்பதே பொதுவான எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்கையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாட்சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்ற விடயத்தில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. இன்று எந்தவொரு தொழிலாளியின் மாதாந்த வருமானத்தையும் எடுத்துக் கொள்வோமானால் முப்பத்தையாயிரம் ரூபாவுக்கு மேலான சம்பளத்தைப் பெறுபவர்களாகவே உள்ளனர். இன்றைய வாழ்க்கைச் செலவை நோக்குகையில் 35 ஆயிரம் ரூபா சம்பளமென்பது போதுமானதல்ல.

ஆனால் மலையக தோட்டத் தொழிலாளர்கள் மாதாந்தம் பெறுகின்ற சம்பளமானது 35 ஆயிரம் ரூபாவை விடக் குறைவானதாகும். அவர்கள் தினமும் சுமார் 750 ரூபாவையே சம்பளமாகப் பெறுகின்றனர். இன்றைய வாழ்க்கைச் செலவில் அந்தத் தொகை கொஞ்சமும் போதுமானதல்ல. அவர்களது வாழ்க்கைத் துன்பத்தை நீக்க வேண்டுமானால் சம்பள அதிகரிப்பு கட்டாயம் வழங்கப்பட்டே ஆக வேண்டும்.

நாட்டின் ஏனைய துறைகளைச் சார்ந்த தொழிலாளர்களைப் போல தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் சுமை உள்ளதென்பதை மறந்து விட முடியாது. அவர்கள் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ வேண்டும். தங்களது பிள்ளைகளின் கல்விக்கான செலவும் அவர்களுக்கு உள்ளது. ஏற்கனவே வறுமைப் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்ற அவர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவாவது வழங்கப்பட வேண்டும் என்பதே பல்வேறு தரப்பினரும் முன்வைக்கின்ற கோரிக்கையாக உள்ளது.

இந்திய வம்சாவளியினரான அம்மக்கள் சமூகம் இலங்கையில் இரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாறு கொண்டதாக உள்ளது. ஆனால் அவர்கள் மற்றைய சமூகங்களுக்கு நிகரான வாழ்க்கைத் தரத்தில் இல்லையென்பதை ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது. போதிய வருமானமும், அடிப்படை வசதிகளும் இல்லாதவர்களாகவே அவர்கள் இன்னும் வாழ்கின்றனர். இவ்வாறான நிலையில் ஆயிரம் ரூபா வென்றெடுக்கப்பட வேண்டுமென்பது மனிதாபிமானம் நிறைந்த கோரிக்கை ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# பன் புல் கைவினைப் பொருட்கள் உற்பத்தியை மேம்படுத்த ஏற்பாடு

## ரஜரட்ட பிரதேச தொழிலாளர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்த இராஜாங்க அமைச்சர்



ரஜரட்ட பிரதேசத்தில் பன் புல் கைத்தொழில்துறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவுள்ளது. கிராமப்புற மக்களின் நீண்டகால பிரச்சினைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படாமையினால், கிராமப்புற உற்பத்தியாளர்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இதன் காரணமாக அவர்களது வருமானமும் கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டது.

அம்மக்களின் குறைகளை அடையாளம் காணவும், அப்பிரச்சினைகளை அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கவும் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக கிராம மக்களிடமிருந்தும் பரிந்துரைகளைப் பெற்று அத்துறையை அபிவிருத்தி செய்வதே இதற்கான தகுந்த நடவடிக்கை ஆகும். இதன் மூலம் கிராமிய கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.



அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மிஹிந்தலை குணுராகம பிரதேசத்தை மையமாகக் கொண்டு பன் புற்களில் இருந்து கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அக்கிராமத்தில் பன் புற்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடங்களுக்கு இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க நேரில் சென்று அம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தங்களின் படைப்புகளுக்கு சந்தை வாய்ப்பு இல்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இதன் விளைவாக மேற்படி தொழிலாளர்களின் பிள்ளைகள் இத்தொழிலில் ஈடுபட தயங்குகின்றனர்.

பன் புல்லில் இருந்து கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடும் பெண்களின் கைவினை படைப்புகள் சிறப்பாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. அதனுடன் தொடர்புடைய கைவினை பொருட்களின் உற்பத்தியை மேலும் மேம்படுத்தி, புதிய வடிவமைப்புகளை உருவாக்குதற்கும், அவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்குவதற்கும், சந்தை வாய்ப்பை உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாரம்பரிய மக்களின் கைத்தொழில் மூலப்பொருளாக பன் என்ற புல் இருந்து வருகின்றது. நீர்நிலைகளின் அருகே வளர்ந்து வரும் பன் என்ற புல்லை பயன்படுத்தி பாய், பெட்டிகள், கைப்பைகள், நாட்காட்டிகள், தண்ணீர் போத்தல்களுக்கான பைகள் மற்றும் அழுக்கு பொருட்கள் போடும் கூடைகள் என்பன தயாரிக்கப்படுகின்றன.

அதேசமயம் பனை ஓலை பொருட்களும் இக்கிராமத்தில் தயாரிக்கப்படுகின்றன. கடந்த காலத்தின் நினைவுச் சின்னங்களுக்கு இப்போது அதிக மதிப்பு இருந்தாலும் தற்போது பிலாஸ்ரிக் பொருட்களின் வருகையால் பன் புல் உற்பத்தித் தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

பன் புற்களில் இருந்து கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலை மேம்படுத்த தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதார் தம்பி ஆரிப்
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## பனிப்பாறைகள் சரிந்து வீழ்ந்ததால் திடீர் வெள்ளம்

# உத்திரகாண்ட் மாநிலத்தில் 150 பேரை காணவில்லை!

இந்தியாவின் உத்திரகண்ட் மாநிலம் சமோலியில் பனிப்பாறைகள் நேற்றுமுன்தினம் சரிந்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் 150 பேர் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகிறது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்பு படை ஈடுபட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் ஏற்பட்ட பனிச்சரிவால் தொளிகங்கா ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளப்பெருக்கிலேயே 100 முதல் 150 பேர் வரை பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

நந்திதேவி பனிக்குன்று உடைந்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆற்றின் கரையோர மக்களை பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

பனிப்பாறையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கிய சம்தோலி கிராமத்தைச் சேர்ந்த சிலரது உடல்கள் மாத்திரம் நேற்று வரை மீட்கப்பட்டன.

உத்தரகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் நந்தா தேவி எனும் பனியாறு உருகியது. இதையடுத்து அலக்நந்தா நதிப்பாலம் சேதமடைந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்கு ரிஷிகங்கா மின்திட்டத்திற்காக பணியாற்றி வந்த 100 முதல் 150 தொழிலாளர்களின் நிலை என்னவென தெரியவில்லை.



மின் திட்டப்பணிகள் நடைபெறும் இடத்தை சுற்றி அந்த 150 பேரையும் தொடர்பு கொள்ள முடியாததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்பு பணிகளை துரிதப்படுத்தி வருகிறார்கள். சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

வெள்ளப் பெருக்கு காரணமாக ரைனி கிராமத்தில் தவுலி கங்கை நதிக்கரையில் இருந்த பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. மாநில பேரிடர் மீட்பு படையைச் சேர்ந்த 200 பேர் மீட்புப் பணிகளை மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளப் பெருக்கு காரணமாகச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, மேலும் விஷ்ணுபிரயாக், ஜோஷிமத், கர்ன்பிரயாக், போன்ற பகுதிகளில் மக்கள் ஆற்றின் அருகே வர வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ரிசிகேஷ் பகுதியில் படகு போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கங்கை நதிக்கரையில் உள்ள மாவட்டங்களில் கண்காணிப்பு துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

# வெள்ளாமைச்சேனை கிராமத்துக்கான வீதியை அமைத்து தருமாறு கோரிக்கை

## 450 குடும்பங்களின் அவலம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெள்ளாமைச்சேனை பிரதேச விவசாயிகள் தங்களுக்கு சீரான போக்குவரத்து பாதையை அமைத்துத்தருமாறு தெரிவிக்கின்றனர். வெள்ளாமைச்சேனை வயல் பிரதேசம் மட்டக்களப்பு_ கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடி நாவலடி சுற்றுவட்டத்தில் இருந்து உள்ளே பல கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

பிரதான வீதியில் இருந்து இக்கிராமத்துக்குச் செல்லும் பாதையில் உள்ள நான்கு கிலோ மீற்றர் வீதி எந்தவித பராமரிப்பும் இல்லாமல் குண்டு குழியுமாக காட்சியளிக்கின்றது. மக்கள் பயணம் செய்வதற்கு மிகவும் சிரமமான பாதையாகவும் காணப்படுகின்றது.

வெள்ளாமைச்சேனை விவசாய கிராமத்துக்கு செல்வதற்கான பாதையை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் அரசியல்வாதிகளிடமும், அரச திணைக்களக்கள அதிகாரிகளிடமும் பல தடவை கோரிக்கை விடுத்தும் பலன் ஏற்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.



470 விவசாயிகளின் 1410 ஏக்கர் வயல் நிலங்களையும், இரு நூறு ஏக்கர் மேட்டு நில பயிர்ச் செய்கைக்குரிய காணிகளையும் கொண்டதாக வெள்ளாமைச்சேனை உள்ளது.

விவசாயிகள் தங்களுக்கான நீண்ட நாள் கோரிக்கையாகவுள்ள அவர்களுக்கான போக்குவரத்து பாதையை அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

எஸ்.எம்.எம்.முர்ஷித்
(கல்குடா தினகரன் நிருபர்)

# நாட்டின் வளங்களை அந்நியருக்கு வழங்க அரசாங்கம் தயாரில்லை!

## அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவுடன் சந்திப்பு

நாட்டின் எந்தவொரு வளத்தையும் வெளிநாட்டவருக்கு பெற்றுக் கொடுக்க நாம் தயாரில்லை என்று கூறுகின்றார் வனசீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் **சி.பி.ரத்நாயக்க.**



**கேள்வி: தற்போது நாட்டில் நிலையற்ற தன்மை உருவாகியுள்ளதாக எதிர்க் கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள் அல்லவா?**

**பதில்:** இந்நாட்டை யார் நிலையற்ற தன்மைக்குக் கொண்டு வந்தார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இந்நாட்டை பாதிப்புக்கு உட்படுத்தியவர்கள், நாட்டை அழித்தவர்கள் எங்களிடம் நாட்டை நிலையற்ற தன்மைக்கு ஆக்கியுள்ளீர்கள் என்று கூறுகிறார்கள். அது திருடனின் தாயாரிடம் சாத்திரம் கேட்பது போன்றதாகும். எதிர்க் கட்சிகள் எம் மீது சுமத்த குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை என்பதால் இதனை கூறுகின்றன. நல்லாட்சி அரசாங்கமே நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றது. நாட்டின் வளங்களை விற்று, மக்களை பல்வேறு வகையில் துன்புறுத்தி, நாட்டின் பாதுகாப்பை அழித்து இந்நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றவர்கள் தற்போது எதிர்க் கட்சியில் உள்ள நபர்களே ஆவர்.

பல பில்லியன் ரூபா கணக்கான பணம் கொள்ளையடிக்கப்பட்ட பிணைமுறி போன்ற மோசடிகளை மேற்கொண்டதுடன், இந்நாட்டில் எந்தவொரு அபிவிருத்தி திட்டத்தையும் மேற்கொள்ளாது, புலனாய்வுப் பிரிவினரை சிறைகளில் அடைத்து, எங்களுடைய குரலை ஒடுக்கி பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். அப்போதைய எதிர்க் கட்சி உறுப்பினர்களை கைது செய்து, சஹ்ரான் போன்றோர் நூற்றுக்கணக்கான உயிர்களை அழிக்கும் வரை நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது போனவர்கள், இன்று நாம் நாட்டை நிலையற்ற தன்மைக்கு கொண்டு வந்துள்ளோம் என்று குற்றம் சுமத்துகிறார்கள். இது பற்றி மக்கள் நன்கு அறிவார்கள் என்பதை நாம் தெளிவாக அறிவோம்.

தற்போது முழு உலகமுமே கொவிட்19 தோற்றால் பாதிக்கப்பட்டுள்ள வேளையில், பொருளாதாரத்தை நலிவடைய விடாமல் மக்களின் உயிர்களையும் பாதுகாக்க சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு அரசாங்கமாக மக்களுக்கு பூரண சலுகைகளை வழங்கி வருகின்றோம். அத்துடன் மக்களின் எம் மீது வைத்த நம்பிக்கையை பாதுகாத்து அவர்களுக்கு பணியாற்றி வருகின்றோம்.

**கேள்வி: கொவிட்19 தொற்றை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யவில்லை என எதிர்க் கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள் அல்லவா?**

**பதில்:** எம் மீது அவர்கள் குற்றம் சுமத்துவதற்கு முன்னர் அவர்களின் நடவடிக்கைகள் எவ்வாறு இருந்தன என்பதை நினைத்துப் பார்க்கும்படி நான் அவர்களுக்கு கூறுகின்றேன். தற்கொலைக் குண்டுத் தாக்குதல் எவ்வாறு நடந்தது என்பதை மக்கள் அறிவார்கள். அதே போல் புலிகளுக்கு எதிராக எமது வீரர்கள் போரிட்டு தாய்நாட்டை பயங்கரவாதிகளிடம் இருந்து காப்பாற்றிய சந்தர்ப்பத்தில், அனைவரும் மகிழ்ச்சியாக கொண்டாடிய வேளையில், அதைப் பற்றி விமர்சனம் செய்த பலர் இன்று எதிர்க் கட்சியில் உள்ளார்கள். ஆனாலும் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாம் பயங்கரவாதத்தை தோற்கடித்தோம். அதன் பலனை இன்று நாட்டு மக்கள் அனைவரும் பெற்றுள்ளார்கள்.

## ‘துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு ஒப்படைக்கவோ, விற்பனை செய்யவோ மாட்டோம்’

கொவிட்19 தொற்றுக்கு நாம் வெற்றிகரமாக முகம் கொடுத்து முன்னேறி வருகின்றோம். நல்லாட்சி அரசாங்கம் இருந்திருந்தால் மக்கள் வாழ்வதற்கே சிரமப்பட்டு இருப்பார்கள். உலகில் பலம் வாய்ந்த நாடுகள் கூட பொருளாதார சரிவை எதிர்நோக்கியுள்ளன. நாம் தொற்றிலிருந்து நாட்டை காப்பாற்றுவதுடன் நாட்டின் அபிவிருத்தியையும் மக்களின் தேவையையும் நிறைவேற்றி வருகின்றோம்.

கேள்வி: கொவிட்19 சமூக தொற்றாக நாட்டில் பரவியுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் அரசாங்கம் அவ்வாறு இல்லை என கூறுகின்றது. இதில் எது சரியானது?

பதில்: ஊடகங்கள் தேவையற்ற விதத்தில் இதற்கு பிரசாரங்களை வழங்குகின்றன. தற்போது டெங்கு நோயாளிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் தெரியுமா? அவர்களில் எவ்வளவு பேர் மரணம் அடைகிறார்கள் என மக்களுக்கு தெரிவிக்குமாறு ஊடகங்களிடம் கேட்கிறோம். சமூகத் தொற்றாக மாறியுள்ளதா என்பதை எம்மால் கூற முடியாது. அதனை வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரக் குழுவினரே கூற வேண்டும். அடுத்த விடயம் நாட்டை மூடி வைக்க முடியாது. நாட்டை மூடுமாறு சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் கூறுகின்றார்கள். அவ்வாறு செய்தால் நாம் மேலும் பின்னடைவை சந்திப்போம். அதனால் நாம் பலவிதமான உபாயங்களை மேற்கொண்டு அதற்கு முகம் கொடுக்க வேண்டும்.

**கேள்வி: கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு பெற்றுக் கொடுக்க உள்ளதாக கூறப்படுகின்றது அல்லவா?**

**பதில்:** அரசின் அமைச்சராகவும் மக்களின் பிரதிநிதியாகவும் நான் ஒன்றை தெளிவாக கூற விரும்புகின்றேன். துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு கொடுக்க மாட்டோம். விற்பனையும் செய்ய மாட்டோம். இது விடயமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் துறைமுக ஊழியர்களுக்கு கூறியுள்ளார்கள். இன்னொரு விடயம், நாம் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நபர்களும் கூறும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை நாம் தனியான அரசாங்கமாகவே முடிவு எடுக்கிறோம். நல்லாட்சி அரசாங்கம் செய்தது போல் நாட்டு வளங்களை அந்நியருக்கு பெற்றுக் கொடுக்க நாம் தயாரில்லை என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவாக கூற வேண்டும். துறைமுகம் உள்ளிட்ட நாட்டின் பொருளாதார மத்திய நிலையங்களை நல்லாட்சி அரசாங்கம் வெளிநாட்டவர்களுக்கு விற்கும் வேளையில், இன்று எம் மீது பொய்யாக குற்றம் சாட்டும் தொழிற்சங்கங்கள் எங்கே இருந்தன என்பதை அறிய விரும்புகின்றோம்.

**கேள்வி: நீங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசாங்கம் பயணித்த பாதை தொடர்பாக என்ன நினைக்கின்றீர்கள்?**

**பதில்:** நாம் இந்த தொற்று குறித்து மனதில் கூட எண்ணியிருக்கவில்லை. ஒரு அரசாங்கமாக பல அபிவிருத்தித் திட்டங்களுடனேயே மக்களிடம் வாக்குகளை கேட்டு வெற்றி பெற்றோம். சட்டம் ஒன்றில்லாத நாட்டையே நாம் பொறுப்பேற்றுக் கொண்டோம். நினைத்த நேரத்தில் நபர்களை கைது செய்யும், கண்ட கண்ட இடங்களில் சுட்டுக் கொல்லும் பாதாளக் கோஷ்டியினர், அடிப்படைவாத பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகள் இருந்தனர். நாட்டின் பாதுகாப்பை சீர்குலைத்து பொருளாதாரத்தை சரிவை நோக்கி இட்டுச் சென்றனர். அரசியல் மற்றும் கலாசார ரீதியாக பாதிப்பு அடைந்திருந்த சந்தர்ப்பத்திலேயே நாம் நாட்டை பொறுப்பு ஏற்றோம். நாம் இவ்விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் தீர்வினைக் கண்டு வரும் வேளையில் தான் கொவிட்19 தொற்றுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. நாம் அதற்கும் சரியான முறையில் முகம் கொடுத்து வருகின்றோம். நாட்டு மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வர பல உபாயங்களை மேற்கொள்கின்றோம். வெளிநாடுகளில் உள்ளவர்களை ஆயிரக்கணக்கில் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளோம். நாம் விரைவில் அனைவரையும் இந்த பாதிப்பில் இருந்து மீட்போம்.

**கேள்வி: முத்துராஜவெல, சிங்கராஜ போன்ற மலைப் பிரதேச காடுகள் அழிக்கப்படுவதாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. அந்த அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சராக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில்:** இந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கிறேன். இந்நாட்டில் எந்த ஒரு இடத்திலாவது காடுகள் அழிக்கப்படுமானால் அவர்களை தராதரம் பாராது கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்போம். இன்னுமொரு விடயம் அரசு அல்லாத அமைப்புகள் உள்ளிட்ட பல வெளிநாட்டு சக்திகள் நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு எதிராக பல வகைகளிலும் செயல்பட்டு வருகின்றன. விலங்குகளுக்கு சொந்தமான காடுகளை அழித்து வீட்டுத் திட்டங்களை அமைக்கும் போது இப்போது குரல் கொடுப்பவர்கள் எங்கே இருந்தார்கள் எனக் கேட்கிறேன். நாம் தாய்நாட்டை நேசிக்கின்றோம். எமதுவருங்காலசந்ததியினருக்கு சுவாசிக்க நாம் காடுகளை மட்டுமல்ல, வன விலங்குகளையும் பாதுகாக்க வேண்டும். அதற்காக ஒரு அரசாங்கமாக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

பக்தி தர்மபிரிய மெண்டிஸ்
தமிழில்: வயலட்

# நீண்ட கால வீழ்ச்சியிலிருந்து மீண்டெழும் சுற்றுலாத்துறை

## 165 உல்லாசப் பயணிகளுடன் கஸகஸ்தானில் இருந்து மத்தலவில் தரையிறங்கிய விமானம்

கொவிட்19 தொற்றை பாரியளவில் பரவ விடாமல் சிறந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள நாடு என்ற வகையில், கடந்த மாதம் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நாட்டிலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு எமது நாட்டின் விமான நிலையங்கள் திறந்து வைக்கப் பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் எமது நாட்டுக்கு வருகை தருகின்றனர்.

கஸகஸ்தான் நாட்டின் தேசிய விமான சேவைக்குச் சொந்தமான எயார் அஸ்டானா A321LR விமானம் தனது வெள்ளோட்ட பயணத்தை ஆரம்பித்து முதல் தடவையாக அந்நாட்டின் அல்மாட் நகரிலிருந்து 165 சுற்றுலாப் பயணிகளுடன் நேற்றுமுன்தினம் முன்னர் இலங்கை வந்தடைந்தது. அதிகாலை 5.00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த அவ்விமானம் மு.ப. 10.50 மணியளவில் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. இது எமது நாட்டின் சுற்றுலாத் துறைக்கும், மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் மிகவும் முக்கியதுவம் வாய்ந்த சிறப்பம்சமாக அமைந்து காணப்பட்டது.



விமானத்தையும் சுற்றுலாப் பயணிகளையும் வரவேற்கும் நிகழ்வு சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் சாம்பிரதாய முறைப்படி இடம்பெற்றது.



அந்நிகழ்வில் விமான சேவைகள், ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி. வீ. சானக, விமான நிலைய, விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜீ. ஏ. சந்திரசிறி, சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாஸ, எயட்கன்ஸ் ஸ்பென்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் நளின்ஜயசுந்தர மற்றும் லங்கா ஸ்போட்ஸ் ரேஸன் நிறுவனத்தின் தலைவர் பீ. டி. வீரசிங்க ஆகியோருடன் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

நேற்று தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை இவ்விமான சேவை அல் மாட்டிலிருந்து மத்தல வரை நடைபெறவுள்ளது. இதனூடாக இலஙகையின் சுற்றுலாத் துறை மற்றும் விமான நிலையம் என்பன பாரியளவில் பயன் பெறவுள்ளன.

இலங்கை அரசாங்கம் சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப சுற்றுலாப் பயணிகளை எமது நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதோடு இவ்வாறு வருகை தருவோர் இத்திட்டத்தில் ஏற்கனவே பதிவு செய்த ஹோட்டல்களில் தங்க வைக்கபட்டு அதனூடாக சுற்றுலாவில் ஈடுபடுவதற்கான சந்தாப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் இதனூடாக நிவர்த்திக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எயார் அஸ்டானா விமான சேவை கஸகஸ்தான் நாட்டின் தேசிய விமான சேவையாகும். அண்மையில் ஆரம்பிக்கப்பட்டாலும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் தற்பொழுது இவ்விமான சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சியின் பயனாக எயார் அஸ்டானா விமான சேவை எமது நாட்டிற்கும் தமது சேவையினை ஆரம்பித்துள்ளது. வாரத்தில் ஒரு நாள் அல் மாட்டிலிருந்து மத்தல வரையும், மத்தலயிலிருந்து அல்மாட் வரையும் இந்நிறுவனம் தனது விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.

இந்த விமான சேவை நடவடிக்கைகளை லங்கா ஸ்போர்ட்ஸ் ரேஸன் நிறுவனம் முன்னெடுக்கவுள்ளதோடு, இரு நாடுகளினதும் ஒத்தழைப்புடன் இச்சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு எமது நாட்டின் சற்றுலாத் துறை மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் வரலாற்றில் ஒரு வரலாற்று சிறப்பு மிகுந்ததாகும். இதனூடாக வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை எய்ட்கன்ஸ் ஸ்பென்ஸ் நிறுவனத்தினர் பொறுப்பேற்று வழிகாட்டவுள்ளதனால் சுற்றுலாத் துறையினர் எமது நாட்டின் சிறப்பம்சங்களை அறிவதற்கான வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.



ஏம். இர்பான் ஸகரியா...
(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# ஊழல் குற்றமிழைத்தவருக்கு மகுடம் சூட்ட முற்படும் விநோதம்!

## இன்று சென்னை வருகிறார் சசிகலா

ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்டு நான்கு வருட சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையான சசிகலா இன்று சென்னைக்கு வருகிறார். இந்நிலையில் அவரது வருகை சம்பந்தமாக முதல்வர் எடப்பாடி பேசிய பேச்சு, பெரும் பரபரப்பை அ.தி.மு.க வட்டாரத்துக்குள் ஏற்படுத்தி வருகிறது. சசிகலா அ.தி.மு.கவில் இணைய 100 சதவீதம் வாய்ப்பே இல்லை என்று ஏற்கனவே டெல்லியில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.



இப்போது "உங்களுக்கு எல்லாம் இந்த 4 வருஷம் சுதந்திரம் தந்திருக்கேன். எனக்கு துரோகம் செய்துடாதீங்க. நம்ம கட்சிக்கு மக்கள் மத்தியில் நல்ல பேர் இருக்கு. வரப்போகிற தேர்தலில் கடுமையாக உழைக்கணும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று சசிகலா சென்னை திரும்பும் நிலையில், அவர் வருகைக்கு பிறகு அ.தி.மு.கவில் ஒரு சலசலப்பு ஏற்படும் என்று தெரிந்த நிலையிலும், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அமைச்சர்களிடம் மாவட்ட செயலாளர்களிடமும் இது குறித்து பேசியுள்ளார்.

எடப்பாடி, பன்னீர்செல்வம் ஆகிய இருவரும் பேசும் போது, "கட்சியில் இப்போது நாம் ஒற்றுமையாக செயல்பட வேண்டும்.

புரட்சித் தலைவர் தொடங்கிய கட்சி இது. அவர் தொடங்கிய காலத்திலும் சரி, தொடர்ந்து அம்மா வழியில் ஆட்சியை நடத்திய போதும் சரி, அனைவரும் ஒற்றுமையாக இருந்து உள்ளோம்.இடையில், நம்மால் விலக்கப்பட்ட டி.டி.வி தினகரன் தனியாக கட்சி ஆரம்பித்து இப்போது கட்சிக்கு கெடுதல் நினைத்துக் கொண்டு இருக்கிறார். அதனால், எந்தவித வேற்றுமைக்கும் இடம் கொடுக்கக் கூடாது. தனிக்கட்சியை தொடங்கி விட்டு, இப்போது நமது கட்சி கொடியை கார்களில் பறக்க விட்டுக் கொண்டு ஏதோ நமது கட்சிக்காரர்கள் நிறைய பேர் அங்கு இருப்பது போன்று மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்" என்றனர். முதல்வரும், துணை முதல்வரும் இப்படி பேசிய போது சசிகலா என்ற பெயரை எங்குமே பயன்படுத்தவில்லை. ஆனால், மதுசூதனன், கேபி முனுசாமி ஆகியோர் மட்டும், "சசிகலாவையும், அவரது குடும்பத்தையும் ஒருபோதும் கட்சியில் சேர்க்க மாட்டோம்" என்று ஆவேசமாக சொன்னார்கள்.

அதன் பிறகு எடப்பாடியும், பன்னீரும் பேசும் போது "சசிகலா குறித்து யாரும் கவலைப்பட வேண்டாம்.அதை, நாங்களே பார்த்துக்கறோம்.நீங்கள் யாரும் கவலைப்படாமல், தேர்தல் வேலைகளை கவனியுங்கள்.அடுத்த ஆட்சியும் நாம்தான். சசிகலா குடும்பத்தினரை, கட்சியில் சேர்க்கும் எண்ணமே இல்லை" என்றனர்.

அன்று டெல்லியில் எடப்பாடியார் என்ன நிலைப்பாட்டில் இருந்தாரோ, அதில்தான் தற்போதும் உறுதியாக இருக்கிறார் என்பது தெளிவாகி உள்ளது.

50 எம்.எல்.ஏக்கள் உட்பட, அமைச்சர்கள் பலரும் சசிகலாவுக்கு ஆதரவு தர தயாராக இருக்கிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கும் நிலையில், ஆதரவு சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டப்பட்டு வரும் நிலையில், முதல்வரின் இந்த துணிச்சலும், தன்னம்பிக்கையும் மக்களுக்கு மலைப்பைத் தருகின்றன.

இதேசமயம் அ.தி.மு.க நிர்வாகி ஒருவர் 'தமிழக அரசியலை மாற்றும் சக்தியே' என சசிகலாவுக்கு ஆதரவாக கட்அவுட் வைத்துள்ளதால் பரபரப்பு எழுந்துள்ளது.

கொரோனா பாதிப்பால் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்பட்டு அவர் பண்ணை வீட்டில் தங்கியிருந்த போது, பண்ணை வீட்டின் படலையை பக்தியுடன் வணங்கும் சசிகலா ஆதரவாளர்கள் 'ராஜமாதா' என்று சசிகலாவை குறிப்பிட்டு சுவரொட்டிகள் ஒட்டி வருகின்றனர்.

அவர்களை அ.தி.மு.க தலைமை நீக்கியும் வருகிறது. இந்த நிலையில் முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்கள் உள்ளிட்டோர் தங்கியிருக்கும் வீடுகளுக்கு அருகேயும் 'ராஜமாதாவே' எனக் குறிப்பிட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில் இன்று சசிகலாவுக்கு ஆதரவாளர்கள் மகத்தான வரவேற்று அளிக்கின்றனர். சசிகலாவுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரவு பெருகி வருவதால் அவரது சென்னை வருகையின் போது அவர் நிச்சயம் விஸ்வரூபம் எடுப்பார் என்றே தெரிகிறது.

## நிபுணர்குழுவின்... (03ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் சுட்டிக்காட்டியுள்ளார். போர் குற்ற நிபுணரான டெஸ்மன் த சில்வா 23.02.2014 ஆம் திகதி முன்வைத்த அறிக்கையில் இலங்கைப் படைக்கு எதிராக போர் குற்றம் சுமத்தியுள்ள தருஸ்மான் அறிக்கை பொய்யானது என உறுதி செய்ப்பபட்டுள்ளதாகவும் இலங்கை பாதுகாப்பு படையினர் சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு அமைய செயல்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளதாக மொஹமட் முஸாம்மில் அதனை எடுத்துக் காட்டித் தெரிவித்துள்ளார்.

இந்த அனைத்து சர்வதேச போர் குற்ற நிபுணர்களின் அறிக்கைகளில் இலங்கை பாதுகாப்புப் படை போர் குற்றங்களை புரியவில்லை என்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறவில்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளதால் அதனை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்தின் முன்னிலையில் வாய்மொழி பிரதிவாதத்தை முன்வைத்ததாலே அரசாங்கம் எடுக்கக்கூடிய சரியான நடவடிக்கையென தேசிய சுதந்திர முன்னணியின் பிரசார செயலாளர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## கஸகஸ்தான் நாட்டிலிருந்து ... (03ஆம் பக்கத் தொடர்)

தலைமையில் இடம் பெற்றது.

அதில் விமானசேவைகள்,ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி. வீ.சானக,விமானநிலைய,விமானசேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு ) ஜீ. ஏ. சந்திரசிரி,சிவில் விமானசேவைகள்அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாஸ உட்பட முக்கிய நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இவ் விமான சேவை கடந்த சனிக்கிழமை(06) முதல் ஏப்ரல் மாதம் வரை அல்மாட்டிலிருந்து மத்தலை வரை விமான சேவையினை முன்னெடுக்கவுள்ளது. இதனூடாக இலங்கையின் சுற்றுலாத் துறைமற்றும் விமானநிலையம் என்பன பாரியளவில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைஅரசாங்கம் சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப BIO BUBLE முறையில் ஏற்கனவேபதிவுசெய்த ஹோட்டல்களில் சுற்றுலாப் பயணிகள் தங்கவைக்கபட்டு அதனூடாக சுற்றுலாவில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றுலாப் பயணிகளக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 27 அத்தியாவசிய... (03ஆம் பக்கத் தொடர்)

27 பொருட்கள் மூன்று மாதங்களுக்கு விலைக் குறைப்பு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதுள்ள நிலையில் அவற்றை சதொச, கூட்டுறவு விற்பனை நிலையம் மற்றும் கியூசொப் ஆகியவற்றில் கொள்வனவு செய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்;

அதற்கிணங்க 106 ரூபாவாக இருந்த சிவப்பு பச்சை அரிசி 93 ரூபாவுக்கும் 105 ரூபாவாக இருந்த வெள்ளைப் பச்சை அரிசி 93 ரூபாவாகவும் 109 ரூபாவாக இருந்த நாட்டரிசி 96 ரூபாவாகவும் 120 ரூபாவாக இருந்த சம்பா அரிசி 99 ரூபாவாகவும் நாளை முதல் விலைக்குறைப்பு செய்யப்பட்டு விற்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அதற்கிணங்க விலைக் குறைப்பு செய்யப்படும் பொருட்கள் பின்வருமாறு;

கீரி சம்பா 1kg : புதிய விலை 125 ரூபா தற்போதைய விலை 140 ரூபா, கோதுமை மா 1kg : புதிய விலை 84 ரூபா தற்போதைய விலை 105 ரூபா, வெள ்ளை சீனி 1kg : புதிய விலை 99 ரூபா தற்போதைய விலை 110 ரூபா ,சிகப்பு சீனி 1kg : புதிய விலை 125 ரூபா தற்போதைய விலை 140 ரூபா ,தேயிலை 100g : புதிய விலை 95 ரூபா தற்போதைய விலை 130 ரூபா ,பருப்பு அவுஸ்திரேலியா 1kg : புதிய விலை 165 ரூபா தற்போதைய விலை 188 ரூபா, பெரிய வெங்காயம் இந்தியா 1kg : புதிய விலை 120 ரூபா தற்போதைய விலை 140 ரூபா, உருளைக்கிழங்கு உள்நாடு 1kg : புதிய விலை 180 ரூபா தற்போதைய விலை (216 220) ரூபா, உருளைக் கிழங்கு பாகிஸ்தான் 1kg : புதிய விலை 140 ரூபா தற்போதைய விலை 190 ரூபா, கடலை 1kg : புதிய விலை 175 ரூபா தற்போதைய விலை 225 ரூபா, காய்ந்த மிளகாய் 1kg : புதிய விலை 495 ரூபா தற்போதைய விலை 550 ரூபா, ரின் மீன் உள்நாடு 425g : புதிய விலை 220 ரூபா தற்போதைய விலை 240 ரூபா, ரின் மீன் இறக்குமதி 425g : புதிய விலை 265 ரூபா தற்போதைய விலை 280 ரூபா, நெத்தலி தாய்லாந்து 1kg : புதிய விலை 545 ரூபா தற்போதைய விலை 700 ரூபா, தோலுடன் கூடிய கோழி 1kg : புதிய விலை 400 ரூபா தற்போதைய விலை 430 ரூபா, கட்டி உப்பு 1kg : புதிய விலை 43 ரூபா தற்போதைய விலை 55 ரூபா, பால்மா 400g : புதிய விலை 355 ரூபா தற்போதைய விலை 380 ரூபா, சோயா எண்ணை 500ml : புதிய விலை 310 ரூபா தற்போதைய விலை 470 ரூபா, சவர்க்காரம் (BCC) 115g : புதிய விலை 43 ரூபா த ற்போதைய விலை 53 ரூபா, சவர்க்காரம் 650g : புதிய விலை 260 ரூபா தற்போதைய விலை 325 ரூபா, வாசனை சவர்க்காரம் 100g : புதிய விலை 56 ரூபா தற்போதைய விலை 63 ரூபா,கை சுத்தீகரிப்பு (Hand sanitizer) 100ml : புதிய விலை 250 ரூபா தற்போதைய விலை 350 ரூபா, முகக்கவசம் (SLS தரச் சான்றிதழுடன் கூடிய) : புதிய விலை 14 ரூபா தற்போதைய விலை 25 ரூபா எனவும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். (ஸ)

## மாகாண சபை... (03ஆம் பக்கத் தொடர்)

தேர்தலை நடத்துவதை விட பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது முக்கியமானதொன்றாக கருதப்பட்டது .

மேலும் தேர்தலை கண்டு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. 2018ஆம் ஆண்டு இடம் பெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அப்போதைய அரசாங்கம் அடைந்த தோல்வி மாகாண சபை தேர்தலை காலவரையறையின்றி பிற்போடுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எதிர்க்கட்சி பதவியில் இருந்துக் கொண்டு முழு ஆதரவையும் வழங்கினார்கள். கொவிட்19 வைரஸ் தாக்கத்தினால் சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்ட செயற்திட்டங்கள் தாமதிக்கப்பட்டுள்ளன. தற்போது முன்னெடுக்கபபடும் அபிவிருத்தி பணிகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு அனைத்து தரப்பினருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது” என மேலும் தெரிவித்தார்.

## பழிவாங்கும் நோக்கில்.. (03ஆம் பக்கத் தொடர்)

அது தொடர்பில் இன்னும் அமைச்சரவையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை. அமைச்சரவையில் அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அதன் பின்னர் அது சட்டமா அதிபருக்கு கையளிக்கப்படும்.

எவ்வாறெனினும் எந்த நிலையிலும் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ, அரசாங்கமோ நாட்டின் நீதித்துறையில் தலையீடு செய்வதற்கு முனையப் போவதில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## ஒரே நாளில் 197 பேருக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவர்களில், கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த 116 பேரும், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 197 பேரும், கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த 101 பேரும், கண்டி மாவட்டத்தை சேர்ந்த 63 பேரும், குருணாகலை மாவட்டத்தை சேர்ந்த 88 பேரும் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த 51 பேரும் மற்றும் மாத்தறை மாவட்டத்தை சேர்ந்த 22 பேரும் அடங்குவதாக கொவிட்19 பரவல் தடுப்பு செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் சுமார் 1,133 பேர் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளனர். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 62,594 ஆக உயர்வடைந்துள்ளது.

## குடும்ப பிரச்சினையை... (03ஆம் பக்கத் தொடர்)

அதனை ஏற்று செயற்பட வேண்டும். சிறுபான்மைக்கு அநீதியாக செயற்படுவதாக உலக நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.நாமாக ஏன் பிரச்சினையில் சிக்க வேண்டும். சர்வதேசம் வரை இந்த பிரச்சினையை செல்ல விடாது குடும்ப பிரச்சினையை வீட்டிற்குள்ளேயே தீர்க்க வேண்டும்.ஆட்சியாளர்கள் பொறுப்பாக செயற்பட வேண்டும்.பல்இன மக்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார். மேலும் குறிப்பிட்ட அவர்,

இலங்கை பிரிவினைவாத யுத்தங்களுக்கு முகங்கொடுத்தது.வரலாற்றிலிருந்து பாடம் கற்று காயங்களுக்கு மருந்து போட வேண்டும்.காயங்களை மேலும் பெரிதாக்க நாம் தயாரில்லை. எமது நாட்டு பிரச்சினைகளை மட்டுப்படுத்தாவிடின் நாட்டிற்கு தலைதூக்க முடியாது.அரசியல் லாபம் பெறும் நோக்கில் செயற்பட கூடாது என்றார்.

தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்கிய நிலையில் அவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க யோசனை முன் வைக்கப்பட்டது. அதனை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ நிராகரித்தார். (பா)

## ஜனாதிபதி ஆணைக்குழு... (03ஆம் பக்கத் தொடர்)

சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியட் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளுக்கமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர், அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக செயற்பட்ட சிசிர மெண்டிஸ் ஆகியோருக்கெதிராகவும் குற்றவியல் குற்றச்சாட்டை தாக்கல் செய்யுமாறு மேற்படி விசாரணைக்குழு தமது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் தகவல்கள் கிடைத்திருந்த நிலையில் எந்தவித அறிவிப்பையும் விடுக்காமை மற்றும் மேற்படி தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றம் தொடர்பில் மேற்படி குற்றவியல் குற்றத்தை தாக்கல் செய்வதற்கு ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

2019 ஏப்ரல் ஈஸ்டர் தினத்தன்று சில கத்தோலிக்க தேவாலயங்கள், சுற்றுலாத்துறை ஹோட்டல்கள் சிலவற்றிலும் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் 270க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## நாட்டில் எத்தகைய...

பரிசோதனைகள் மேற்கொள்பவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்வது குறைவடைந்துள்ளதே தவிர பிசிஆர் பரிசோதனை உபகரணங்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் கிடையாது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அன்றாடம் நாட்டில் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகள் கடந்த சில தினங்களாக குறைவடைந்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் முதல் பகுதியில் 18 ஆயிரமாக இருந்த பிசிஆர் பரிசோதனை கடந்த சில தினங்களாக 15 ஆயிரமாக குறைவடைந்துள்ளன.

இரசாயன கூட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். அத்துடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஆறு இரசாயன கூட ஊழியர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அங்குள்ள இரசாயன கூடத்தில் பெருமளவு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன எனினும் தற்போது அவை குறைவடைந்துள்ளன. அதேவேளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகளும் குறைவடைந்துள்ளன. ஏனெனில் அந்த பல்கலைக்கழகத்தின் இரசாயன பிரிவினர் வேறு ஆராய்ச்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் அந்த நிலையை சீர் செய்வதற்கு ஏனைய இரசாயன கூடங்கள் ஊடாக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நாளாந்தம் பரிசோதனைக்கான மாதிரிகள் அதிகரித்து செல்கின்ற நிலையிலும் பிசிஆர் பரிசோதனை அறிக்கைகள் வினியோகத்தில் சிக்கல்கள் எழுந்துள்ளன. அந்த நிலை தற்போது சீர் செய்யப்பட்டு வருகிறது என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## அரசின் எதிர்ப்பு...

முன்னெடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கண்டியில் வெளிவிவகார அமைச்சின் கண்டி உதவி தூதரகத்தையும் நேற்று அமைச்சர் திறந்து வைத்தார். இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றும், அவை நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை ஒவ்வொன்றாக விளக்கி, அவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு தங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்ததாக கூறினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த மாதம் 22 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தாலும், கோவிட் காரணமாக பிரதிநிதிகள் ஒன்றுகூடாமல் முதல் முறையாக இலக்ரோனிக் ஊடகங்கள் மூலம் மாநாட்டை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த அறிக்கை இலங்கைக்கு மட்டுமல்ல, மேலும் 10 நாடுகளுக்கும் தண்டனை வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைகுழு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அத்தகைய முறையில் செயல்பட ஆணைகுழுவிற்கு அதிகாரம் இல்லை எனவும் இது, "ஐ.நா பொதுச் சபை மூலமே செயற்படுத்தப்பட வேண்டியதொன்றாகவும் அவர் வலியுறுத்தினார் .

மேலும் இதனை எதிர்கொள்ள இலங்கை தயாராக இருப்பதாகவும், அதனுடன் இணைந்த நாடுகளுடன் தற்பொழுது கலந்துரையாடி வருவதாகவும் அவர் கூறினார்.

பயங்கரவாத கட்டுப்பாட்டுக்குள் இருந்த மூன்று இலட்சம் அப்பாவி பொது மக்களை விடுவித்த பின்னர், அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் மேலும் எல்.ரீ.ரீ.ஈ இராணுவத்தினருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு , அவர்கள் இப்போது சொந்த கிராமப்புறங்களில் நன்றாக வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிவித்த அமைச்சர் , இலங்கை அரசாங்கம் எந்தவொரு இனத்தினரையும் பழிவாங்கவில்லையெனவும் பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் அவர்களின் அபிலாசைகள் வடக்கு மக்களால் தோற்கடிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

ஒரு இறையாண்மை கொண்ட நாடு என்ற வகையில், நாட்டிற்குள் நடக்கும் எதையும் தொடர்பாக நாட்டின் அரசியலமைப்பின் படி செயல்பட அதிகாரம் உள்ளது. முந்தைய அரசாங்கம் வெளிநாட்டு நீதிபதிகளை அழைத்து வந்து ஆவணங்களில் கையெழுத்திட ஒப்புக் கொண்ட போதிலும், இது முற்றிலும் அரசியலமைப்பிற்கு முரணான செயல். இந்த விவகாரம் தொடர்பாக உள் விசாரணை நடத்த உச்சநீதிமன்ற நீதிபதியால் ஒரு ஆணைகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை , கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வசந்தயாப்பா பண்டார. எம்.பி , வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல், பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே, பணிப்பாளர் ஜெனரல் விஸ்வநாத் அகேஷ்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தோட்டத் தொழிலாளர்...

அதேவேளை, இன்றைய பேச்சு வார்த்தையில் சாதகமான முடிவு எட்டப்படாதவிடத்து ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொள்வதற்கான போராட்டம் மிக பலமானதாக தொடரும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி இ.தொ.காவின் ஏற்பாட்டில் மலையகம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட அடையாள வேலை நிறுத்தப்போராட்டம் பெரும் வெற்றி பெற்றுள்ள நிலையில் அது முதலாளிமார் சம்மேளனத்திற்கு தோட்டத் தொழிலாளர்களின் ஒற்றுமை விடுக்கும் எச்சரிக்கையாக அமைந்துள்ளது என இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை கிடையாது என சிந்தித்தே முதலாளிமார் சம்மேளனம் தமது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக உள்ளது. அடையாள வேலை நிறுத்தம் தொழிலாளர்களின் ஒற்றுமையை உறுதி செய்துள்ளது என்றும்

ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் சம்பள நிர்ணய சபை மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டு எப்போது சம்பள உயர்வு வழங்கப்படும் என்ற தீர்மானமும் வெளியிடப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் பல கட்ட பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன.

தொழில் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவின் தலைமையில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனம் ஆகியன அந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்தன.

அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா என தொழிற்சங்கங்களினால் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் முதலாளிமார் சம்மேளனம் தொடர்ந்தும் அதனை நிராகரித்து வருகின்றது.

அந்த நிலையில் சம்பள நிர்ணய சபையின் ஊடாக அதற்கு தீர்வை பெற்றுக்கொள்ளும் வகையில் தொழில் அமைச்சர் மற்றும் தொழில் ஆணையாளர் ஆகியோரின் தலையீட்டோடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கிணங்க இன்றைய தினம் நடைபெறும் பேச்சுவார்த்தை மூலம் இறுதி தீர்வொன்றுக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அது தொடர்பில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மற்றுமொரு தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவிக்கையில்;

கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாகவோ சம்பள நிர்ணய சபை ஊடாகவோ அல்லது அரசாங்கத்தின் நேரடி தலையீட்டுடனோ எந்த வழியானாலும் சரி தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா அடிப்படைச் சம்பளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வேறு ஏதாவது கொடுப்பனவுகள் அதனோடு இணைக்கப்பட்டு ஆயிரம் ரூபா வழங்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அடிப்படைச் சம்பளம் 1000 ரூபா என்பதே தோட்டத் தொழிலாளர்களதும் தொழிற்சங்கங்களினதும் உறுதியான நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பெரும் இழுபறி நிலையில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் இன்றைய பேச்சுவார்த்தை பெரும் எதிர்பார்ப்புக்குள்ளாகியுள்ளது.

இன்றைய பேச்சு வார்த்தையில் சாதகமான தீர்வு எட்டப்படாவிட்டால் மலையகம் தழுவிய தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு தொழிலாளர்கள் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## நாட்டின் உள்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் முல்லைத்தீவு பிரதேசத்தில் இருந்த மிகப் பெரிய பௌத்த விஹாரை அமைந்த பகுதியாகவும் இது அறியப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரும்பாலான தொல்பொருள் தளங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது சொற்ப அளவிலான குழுவினரின் எழுச்சியேயன்றி இதனை பொதுமக்களின் எதிர்ப்பாகக் கருதமுடியாது என்றும் தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க மேலும் தெரிவித்தார்.

## EPF பங்களிப்பு...

இடம்பெற்றதொழில் அமைச்சின் ஆலோசனைகுழுக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் ரயில் மோதி ...

மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர், ரயில் பாதுகாப்பற்ற கடவையை கடக்க முற்பட்ட போது, ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார். உடுவிலைச் சேர்ந்த விஸ்வநாதன் பாலரூபன் (வயது42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

## வர்த்தக வங்கிகளில்....

சில இடங்களில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாக எனக்கு தெரியும். அந்த விடயங்கள் தவறானவைகளாகும். கடந்த வாரம் 3 வீதம் வட்டி அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. எனினும் அப்படி ஒன்றும் இல்லை. இதனால் புதிய சட்ட திட்டங்களை அறிமுகப்படுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார்.

## குணமடைந்தோரின்...

குணமடைந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மேலும் 8 வைரஸ் தொற்று நோயாளிகள் மரணமடைந்துள்ளனர். அதற்கிணங்க வைரஸ் தொற்று காரணமாக மரணமடைந்துள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 351 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது.

நேற்றைய தினம் மேலும் 807 வைரஸ் தொற்று நோயாளிகள் குணம டைந்துள்ளனர். அதற்கிணங்க இதுவரை 63,401 வைரஸ் தொற்று நோயாளிகள் பூரணமாக குணமடைந்துள்ளனர்.மேலும் 4824 வைரஸ் தொற்று நோயாளர்கள் நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்தது. (ஸ)

## மேற்குலக நாடு, ...

ஆணையாளர் மிச்சேல் பெச்சலட் பரிந்துரைத்திருந்தார் .

அத்துடன், பொறுப்புக்கூறலை பலப்படுத்தி உறுதிப்படுத்தும் வகையில், பாதுகாப்பு விடயத்தில் மறுசீரமைப்புகளை அமுல்படுத்துமாறும் சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்றாற் போன்ற புதிய சட்டம் மாற்றீடு செய்யப்படும் வரை கைது நடவடிக்கைகளில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்த தடை விதிக்குமாறும் பரிந்துரைத்திருந்தார்.

இது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இலங்கைக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மேற்கத்தைய நாடுகள் இணைந்து சதித்திட்டங்களை மேற்கொள்வதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

## வைத்தியர் கயானுக்கு...

சந்திரகுமார் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உயிரிழந்த வைத்தியரது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

குறித்த அஞ்சலி நிகழ்வில் அரச அதிபர் சமன் பந்துலசேன, வைத்தியர்களான சுதாகரன், மதுரகன், நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், சிறுவர் நன்னடத்தை அதிகாரி கெனடி, சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த வைத்தியர் காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் கடந்தவாரம் உயிரிழந்தார்.

இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த முதலாவது மருத்துவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவால்...

102 வயதான மூதாட்டியொருவரே கொரோனா வைரஸ் பாதிப்பினால் உயிரிழந்துள்ளதாக விசேட நீதிமன்ற மருத்துவர் யு.சி.பி. பெரேரா தெரிவித்துள்ளார். மேற்படி மூதாட்டி கடந்த 6 ஆம் திகதி தமது வீட்டில் உயிரிழந்துள்ளதுடன் அதனையடுத்து அவர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் மரணமடையும் போது அவருக்கு தொற்று இருந்துள்ளதாகவும் குறித்த ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சுகாதார முறைகளைப் பின்பற்றி அவரது சடலத்தை தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 20 நாள் குழந்தையொன்றும் கொரோனா வைரஸ் நோயாளியாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீதி விபத்துக்களில்...

மேற்படி வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. எம்பிலிப்பிட்டிய மித்தெனிய வீதியில் கெப் வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் மேலும் இருவரும் பலியாகியுள்ளனர். தந்தையும் மகனும் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளதுடன் மற்றும் காயமடைந்த 11 வயது மற்றும் 40 வயதுடைய இருவரும் எம்பிலிப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை குருநாகல் தம்புள்ளை வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து லொறி ஒன்றுடன் மோதியதில் 66 வயதான மோட்டார் சைக்கிள் நபர் மரணமடைந்துள்ளார். அத்துடன் கொபய்கனே பகுதியில் வேகமாக பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் 25 வயது இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## சிறுகுற்ற கைதிகள்...

தற்போது சிறைச்சாலைகளில் 12,000 கைதிகளையே தடுத்து வைத்திருக்க முடியும். கடந்த சுதந்திர தினத்தன்று 167 சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர். அதேவேளை இந்த செயற்பாடுகளுக்காக 5 வருட மீளாய்வு என ஒரு சட்டம் உள்ளது அந்த சட்டம் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தாமல் நிறுத்தப்பட்டிருந்தது. அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க உள்ளோம். அதற்கிணங்க மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் ஆயுள் கைதிகளாக தண்டனையை குறைப்பதற்கும் ஆயுள் கைதிகளாக உள்ள சிறைக்கைதிகளை இருபது வருடங்களுக்கு தண்டனை காலத்தை குறைக்கவும் அந்த நான்கு வருட மீளாய்வு சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அதற்கிணங்க சிறைக்கைதிகளின் நடத்தைகளை கண்காணித்து சுமார் பதினைந்து பதினாறு வருடங்கள் தண்டனையை அனுபவித்து வருபவர்கள், அதேவேளை 65 வயதிற்கு மேற்பட்ட சிறைக்கைதிகள் ஆகியோரையும் அதன்மூலம் விடுதலை செய்ய முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர் வரும் வெசக் பண்டிகைக்கு முன்னதாக மேற்படி நான்கு ஆண்டு மீளாய்வு சட்டத்தை மீள பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை உண்டு என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 60 வயதுக்கு...

டொக்டர் ஹரித அளுத்கே, கொவிட் 19 இறப்புகளில் 70 வீதமானவை தொற்றுக்குள்ளான 60 வயதுக்கு மேற்பட்ட வயதானவர்களிடமிருந்தே பதிவாகிறது என்றார். தற்போது 60 வயதுக்கு மேற்பட்ட 10 வீதமானோரே கொவிட் 19 வைரஸால் பாதிக்கப்படுகின்றனர். எனவே 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நெறிப்படுத்த வேண்டும். ஏனெனில் இறப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்றார்.

குறித்த வயதில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்தால் இறப்புகளின் எண்ணிக்கை அசாதாரணமாக அதிகரிக்கக்கூடும் என்றும் மருத்துவர் அளுத்கே கூறினார்.

இந்த வேளையில் திருமணங்கள் மற்றும் விருந்துபசாரங்களில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்வதால் இந்நோய் வேகமாகப் பரவுகிறது என்றார். கொவிட்19 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பில் அதிகாரிகள் நிலையான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதுடன் சிகிச்சை நிலையங்களில் வசதிகளை அதிகரிக்க வேண்டும் என்றார்.

கொவிட்19 காரணமாக அண்மையில் உயிரிழந்த ராகம வைத்தியசாலை மருத்துவர் கயான் தந்தநாராயண, தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை வசதிகள் இல்லாததால் கராப்பிட்டி போதனா வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது என்றும் மருத்துவர் அளுத்கே மேலும் கூறினார்.

# நாட்டின் பல இன பன்மைத் தன்மையை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்

**விஜயரத்தினம் சரவணன்**

இலங்கை சிங்கள பௌத்த நாடு மாத்திரமல்ல. தமிழ், முஸ்லிம், இந்து, கத்தோலிக்கம் என எல்லா இன மதங்களை உள்ளடக்கிய நாடாகும். இந்த பன்மைத் தன்மையை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதை விடுத்து ஜனாதிபதி சொல்வதைப்போல ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே இனம், ஒரேமொழி, ஒரே மதம் என்றால் எங்களால் சிரிக்கவே முடியும். ஆகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பார்த்து நான் சிரிக்கின்றேன். இச் சிரிப்பு எக்காள, ஆணவச் சிரிப்பல்ல. உண்மையான சிரிப்பு. நியாயமான சிரிப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு துணுக்காய், கல்விளான் பகுதியில் "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை" என்னும் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,



இலங்கை பல மொழிகள் பேசப்படும் பல மதங்கள் கடைப்பிடிக்கப்படும், பல இனங்கள் வாழுகின்ற பன்மைத்தன்மை வாய்ந்த நாடு. இந்த கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் ஒரே நாடு, ஒரே சட்டம் எனக் கூச்சல் எழுப்புகின்றது.

இவ்வாறு கூச்சல் எழுப்பும் போது ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம் என்று நீண்டுபோயிருக்கின்றது. அதை எக்காலத்திலும் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம். இந்த நாட்டில் எமக்கு வரலாற்று ரீதியாக சொந்தம் இருக்கின்றது. உரிமை இருக்கின்றது.

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு மாத்திரமல்ல, தமிழ், முஸ்லிம், இந்து, கத்தோலிக்கம் என எல்லா இன மதங்களை உள்ளடக்கிய நாடாகும். ஆகவே இந்தப் பன்மைத் தன்மையை இந்த அரசாங்கம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அதை விடுத்து ஒரு இனத்திற்கும், ஒரு மதத்திற்கும் மாத்திரம் சொந்தமான நாடு என்ற நிலையினை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த நியாயத்தினை நாடு முழுக்க எதிரொலிக்க வைக்கும் ஒரு ஜனநாயக நடைப் பயணம்தான் பொத்துவில் முதல் பொலிகண்டிவரை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அன்றும், இன்றும், எப்போதும் நான் எங்கள் கட்சி சார்பாக எப்போதுமே அநீதிக்கு எதிராக குரல் கொடுத்துக்கொண்டேயிருக்கின்றேன். குரல் கொடுத்துக்கொண்டேயிருப்பேன் என்றார்.

# துர்நாற்றம் வீசிய வடிகால் சுத்தப்படுத்தல்

**சுண்டுக்குளி நிருபர்**

யாழ்.நகர் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பிரதான வடிகாலில் இருந்து கடந்த பல நாட்களாக துர்நாற்றம் வீசுவதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவ் இடத்திற்கு உடன் சென்ற மாநகர முதல்வர் குறித்த வடிகாலினை உடனடியாக தூய்மைப்படுத்துமாறு விடுத்த பணிப்புரைக்கமைய வடிகால் தூய்மைபடுத்தப்பட்டது.



மத்திய பேருந்து நிலையம் மலசல கூடத்தில் இருந்து குழாய் மூலம் குறித்த வடிகாலினுள் மலக்கழிகள் விடப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது யாழ் மாநகர சபை வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

# பருத்தித்துறை – கொழும்பு இ.போ.ச சேவை ஆரம்பம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் இ.போ.ச பேருந்து சேவை கொவிட் 19 அச்சம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினத்திலிருந்து இச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இ.போ.சபையின் பருத்தித்துறை டிப்போ பொறுப்பதிகாரி தெரிவித்தார். தினமும் இரவு 8 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இ.போ.ச பஸ் வண்டி நெல்லியடி கொடிகாமம் வவுனியா அநுராதபுரம் புத்தளம் ஊடாக கொழும்பைச் சென்றடையும். அங்கிருந்து இரத்மலானை வரை இச் சேவை நீடிக்கும். அதேவேளை தினமும் இரவு 8 மணிக்கு வெள்ளவத்தை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் இ.போ.ச பஸ் வண்டி கொழும்பு மத்திய பஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து இரவு 9 மணிக்கு பருத்தித்துறை நோக்கிப் புறப்படும்.

# பராமரிக்க யாரும் இல்லாததால் முதியவர் சுருக்கிட்டு தற்கொலை

**புசல்லாவை தினகரன் நிருபர்**

கண்டி பன்விலை பொலிஸ் பிரிவில் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பன்விலை பொலிசார் தெரிவித்தனர்.

நெல்லிமலை தனியார் தோட்டத்தில் 75 வயதான நடேசன் என்பவரே இவ்வாறு சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர். இவரது. வழமையான நடமாட்டத்தைக் காணாத பொலிசார் வீட்டினுள் தேடிப்பார்த்தபோதே இவர் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

இவரது வீட்டிற்கு முன்பாகவே பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டே இவர் சுருக்கிட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தன்னைப் பராமரிப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால் தாம் இந்த முடிவிற்கு வந்ததாகவும் தனக்கு வாழ்ந்தது போதுமென்றாகிவிட்டது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

---

**2021.02.05 மற்றும் 2021.02.06 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 1,399,393**

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 95,483,740.00**

ரூ. 39,995,570.00 பரிசுகள் 1 | ரூ. 2,000,000.00 பரிசுகள் 1 | ரூ. 1,000,000.00 பரிசுகள் 3 | ரூ. 100,000.00 பரிசுகள் 52

www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

## Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம்: 756 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 2021.02.05

உங்களை வெற்றியாளர்களாக்கும் உங்களின் நம்பிக்கை

ஆங்கில எழுத்து: W | சுப்பர் இலக்கம்: 09 | வெற்றி இலக்கங்கள்: 16 40 67 75

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 87 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 195 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4,831 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,181 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 80,114 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 14,720 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 65,048,652.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 19,848,640.80 | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 31,780,213.60

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,991,520.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

## Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம்: 757 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 2021.02.06

ஆங்கில எழுத்து: K | சுப்பர் இலக்கம்: 04 | வெற்றி இலக்கங்கள்: 03 44 61 74

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 79 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 187 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4,673 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,086 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 76,054 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13,832 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 65,199,468.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 19,999,456.80 | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 31,931,029.60

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,760,960.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

## ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1094 | திகதி: 2021.02.06

ஆங்கில எழுத்து: P | வெற்றி இலக்கங்கள்: 5 8 0 7 6 1

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| 01 பரிசு | 5 8 0 7 6 1 | ரூ. 2,000,000.00 | - |
| 02 பரிசு | 8 0 7 6 1 | ரூ. 100,000.00 | 03 |
| 03 பரிசு | 0 7 6 1 | ரூ. 10,000.00 | 26 |
| 04 பரிசு | 7 6 1 | ரூ. 1,000.00 | 261 |
| 05 பரிசு | 6 1 | ரூ. 50.00 | 2,608 |
| 06 பரிசு | 1 | ரூ. 20.00 | 24,968 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| 07 பரிசு | 5 8 0 7 6 | ரூ. 10,000.00 | 02 |
| 08 பரிசு | 5 8 0 7 | ரூ. 1,000.00 | 32 |
| 09 பரிசு | 5 8 0 | ரூ. 100.00 | 285 |
| 10 பரிசு | 5 8 | ரூ. 50.00 | 2,634 |
| 11 பரிசு | P | ரூ. 20.00 | 11,457 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | 212 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 1,934,500.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டுழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 14,296,978.50

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416 Web: www.nlb.lk

## கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2684 | சீட்டிழுப்பு திகதி: 05/02/2021

ஆங்கில எழுத்து: D | வெற்றி இலக்கங்கள்: 04 71 75 76

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 180 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 414 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,011 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,594 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 164,767 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29,996 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 211,969

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,534,120.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,304,086.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2685 | சீட்டிழுப்பு திகதி: 06/02/2021

ஆங்கில எழுத்து: M | வெற்றி இலக்கங்கள்: 15 26 74 77

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 164 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 377 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9,562 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,237 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 157,437 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 28,558 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 202,342

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,230,580.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,584,524.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4389 | உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 05-02-2021

வெற்றி எழுத்து: B | வெற்றி இலக்கங்கள்: 6 7 8 1 8 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B 6 7 8 1 8 2 | ரூபா. 39,995,570/- | 01 |
| 1ஆம் பரிசு | 6 7 8 1 8 2 | ரூபா. 2,000,000/- | - |
| 2ஆம் பரிசு | 7 8 1 8 2 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 8 1 8 2 | ரூபா. 10,000/- | 129 |
| 4ஆம் பரிசு | 1 8 2 | ரூபா. 1,000/- | 1,275 |
| 5ஆம் பரிசு | 8 2 | ரூபா. 100/- | 12,783 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா. 20/- | 126,200 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 6 7 8 1 8 | ரூபா. 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | 6 7 8 1 | ரூபா. 1,000/- | 127 |
| 9ஆம் பரிசு | 6 7 8 | ரூபா. 100/- | 1,273 |
| 10ஆம் பரிசு | 6 7 | ரூபா. 50/- | 12,779 |
| 11ஆம் பரிசு | | ரூபா. 20/- | 50,268 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 49,571,480.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

## மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 4390 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 2021-02-06

வெற்றி எழுத்து: Y | வெற்றி இலக்கங்கள்: 4 2 4 3 1 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 4 2 4 3 1 0 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 2 4 3 1 0 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 4 3 1 0 | ரூபா. 10,000/- | 121 |
| 4ஆம் பரிசு | 3 1 0 | ரூபா. 1,000/- | 1,196 |
| 5ஆம் பரிசு | 1 0 | ரூபா. 100/- | 12,013 |
| 6ஆம் பரிசு | 0 | ரூபா. 20/- | 119,050 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 4 2 4 3 1 | ரூபா. 10,000/- | 13 |
| 8ஆம் பரிசு | 4 2 4 3 | ரூபா. 1,000/- | 125 |
| 9ஆம் பரிசு | 4 2 4 | ரூபா. 100/- | 1,201 |
| 10ஆம் பரிசு | 4 2 | ரூபா. 50/- | 11,938 |
| 11ஆம் பரிசு | Y | ரூபா. 20/- | 47,560 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,111,500.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,990,797.00

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

## உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா



சீட்டிழுப்பு திகதி: 05/02/2021 | சீட்டிழுப்பு இலக்கம்: 1572

சுப்பர் இலக்கம்: 08 | வெற்றி இலக்கங்கள்: 14 29 47 55

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 01 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 112 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 332 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4,768 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4,250 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 59,835 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 15,042 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 3,042,740.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,713,315.60

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

## தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2021/02/05 | சீட்டிழுப்பு இலக்கம் - 426

ஆங்கில எழுத்து: G | வெற்றி இலக்கங்கள்: 12 27 30 74

| | கட்டமைப்பு | பரிசுகள் | ntw;wpahsu;fs; vz;zpf;if |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 07 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 106 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 260 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 6,395 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 4,232 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 106,383 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 20,028 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,699,640.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 137,411

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 80,257,237.20

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

## தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2021/02/06 | சீட்டிழுப்பு இலக்கம் - 427

ஆங்கில எழுத்து: E | வெற்றி இலக்கங்கள்: 17 35 42 72

| | கட்டமைப்பு | பரிசுகள் | ntw;wpahsu;fs; vz;zpf;if |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 01 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 81 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 240 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,564 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,775 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 94,468 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 17,572 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,606,700.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 121,702

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 80,391,742.80

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

# தேசிய மரபுரிமைகள், நிகழ்ச்சிக் கலை மற்றும் கிராமியக் கலை நுட்பங்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு

## இலங்கையின் தேசிய மரபுரிமைகளை இனங்காணுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்பாக பொது மக்களிடம் இருந்து கருத்துக்களை கேட்டறிதல்

இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசினது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமாகிய "நாட்டைக் கட்டியெழுப்பும் சௌபாக்கிய தூரநோக்கு எனும் திட்டத்தின்" கீழ் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ள "சட்டத்தை மதிக்கும் பண்பும் ஒழுக்கமும் உடைய சமூகத்தை" கட்டியெழுப்பும் உன்னத நோக்கில் சமூக நல்லிணக்கம், சமாதானம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்தும் அபிலாஷையுடன் இலங்கையின் புகழையும் மற்றும் அதன் தனித்துவத்தையும் ஊக்குவிக்கும் பொருட்டு எமது தேசிய தேசிய மரபுரிமை சார்ந்த சொத்துக்களை பாதுகாப்பது மிகவும் முந்துரிமை அளிக்கக் கூடிய ஒரு அத்தியாவசியமான கரும விடயமாகும்.

ஆகையால், இலங்கையில் காணப்படுகின்ற தேசிய மரபுரிமை சார் சொத்துக்களை சரியாக தீர்மானிப்பதற்கும் மற்றும் அவற்றை இனங்காணுவதற்கும் பொருத்தமான ஒரு திட்டத்தை முன்வைக்கும் நோக்கில் அமைச்சரவையினால் கல்விமான்கள் / நிபுணர்கள் உள்ளடங்கிய பதினாறு (16) உறுப்பினர்களை கொண்டவொரு குழு தாபிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் மூலம் தேசிய மரபுரிமைகள் தொடர்பாக பின்வரும் தலைப்புகளின் கீழ் பிரேரணைத் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. குறித்த அந்தத் தலைப்புகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள குறித்த தகவுதிறன்களின் நிமித்தம் பொது மக்களிடம் இருந்து கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது. இந்தத் தகவுதிறன்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களையும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட செயலாளர் அலுவலகங்கள் என்பவற்றில் இருந்து www.lotuspond.lk மற்றும் www.towerhall.lk இணையத்தள வசதிளின் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவுதிறன்கள் தொடர்பான உங்களது கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் என்பவற்றை 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 22 ஆம் திகதிற்கு முன்னர் எழுத்துமூலமாக, ஆள்ரீதியில் நேரடியாக மற்றும் தபால், மின்னஞ்சல், தொலை நகல் மூலமாக கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நீங்கள் தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்
தேசிய மரபுரிமைகள், நிகழ்ச்சிக் கலை மற்றும் கிராமியக் கலை நுட்பங்கள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு
4-வது மாடி, செத்சிறிபாய கட்டம் II

பத்தரமுல்ல.
தொலைபேசி இலக்கம்: 0711655973
தொலைநகல் இலக்கம்: 0112187121
மின்னஞ்சல் முகவரி: secminnh@gmail.com / kodi0210@gmail.com

### தேசிய மரபுரிமைகள்

எந்த ஒரு மக்கள் சமூகமும் தமது தனித்துவத்தை கட்டியெழுப்புவது அவர்கள் வசமிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரபுரிமைகளின் அடிப்படையிலாகும். வரலாற்றின் மூலம் உண்மையாக கலாசாரம் பிரதிபலிக்கப்படுகின்றது. இயற்கை சூழலில் மக்கள் தமது அதிவிஷேடத்துவம் வாய்ந்த கலாசார பண்பியல்புக்கு பரிவர்த்தனையாகும் ஒரு மாதிரி அமைப்பு கலாசாரம் என அழைக்கப்படுகின்றது. ஆகையால், இயற்கை மற்றும் கலாசாரம் முதலிய பிரபஞ்சங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைவதன் பயனாக வருகின்ற விழுமியம் நிறைந்த சொத்துக்கள் தேசிய மரபுரிமைகளாக கருதப்படுகின்றன. எதாவது ஒரு மக்கள் சமூகத்திற்கு பாரம்பரிய ரீதியில் அருளாக கிடைத்த இயற்கை சூழல் தேசிய மரபுரிமைகளின் இன்றியமையாத ஒரு அங்கமாக விளங்குகின்றது. முன்னோர்கள் தமது அனுபவம் மற்றும் சிந்தனைகள் என்பவற்றின் மூலமாக பரம்பரை பரம்பரையாக சந்ததியினருக்கு உரித்தாக்கிக் கொடுத்துள்ள சொத்துக்கள் இன்று தேசிய மரபுரிமைகளாக மதிக்கப்படுகின்றன. ஆகையால் தேசிய மரபுரிமைகள் என்பது மக்கள் வசமிருக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உன்னத சொத்துக்களாகும். இத்தகைய மரபுரிமை சொத்துக்களை அனுபவிப்பது, பயனுள்ளதாக்கிக் கொள்வது மற்றும் வேறு ஏதாவது வழிகளில் அத்தகைய மரபுரிமை சொத்துக்களை அணுவது முதலியன ஒரு பிரஜைக்கு இருக்கின்ற மறுக்க முடியாத இயற்கை உரிமைகளாகும்.

பரம்பரையாக எமக்கு கிடைத்த இந்த மரபுரிமை சார் சொத்துக்கள் அருகாகிச்செல்வதால் இன்றைய சமூகத்தில் வாழுகின்ற நாம் இவற்றை மதித்து, பராமரித்து, பேணிப் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினருக்கு உரித்தாக்கி கொடுப்பது எமது கடமையாகும். சமூகத்தின் செயற்பாடுகளை பிரதிபலிப்பதற்கும் மற்றும் தனித்துவத்தை நிர்ணயிப்பதற்கும் பயனுள்ள சாதனமாகவும், மக்கள் மதிக்கும் மற்றும் ஸ்தல உணர்வை தூண்டுகின்ற ஒரு வெளியீட்டு சாதனமாகவும் எதாவது சமூகத்தில் மரபுரிமை சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. மக்கள் சமூகம் பல தொடர்பாடல் முறைமைகளின் ஊடாக மரபுரிமைகளை பரம்பரை பரம்பரையாக தமது எதிர்கால சந்ததியினருக்கு கட்டிக்காத்து வந்துள்ளனர். ஆகையால், எதிர்கால சந்ததியினருக்கு மரபுரிமை சொத்துக்களை பாதுகாத்துக் கொடுப்பதும் மற்றும் அத்தகைய சொத்துக்களுடன் தொடர்புடைய உன்னத அறிவை போஷிப்பதும் சமூகத்தின் பொறுப்பாகும். இங்கு செயன்முறைாகவும் மதிக்கக் கூடியதாகவும் பயனுள்ளதாகவும் மரபுரிமைகளை புரிந்து கொள்ள வேண்டும். பல நபர்கள் பல விதத்திலும் மரபுரிமைகள் பற்றிய கருத்தை கடந்த காலத்துடன் தொடர்புபடுத்துவதால் அத்தகைய மரபுரிமைகளின் கருப்பொருள் அவற்றுக்கே பிரத்தியேகமான ஒரு அமைப்பில் பிரதிபலிக்கப்படுகின்றது.

தேசிய மரபுரிமை என்பது இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் சொந்தமான கலாசார ரீதியிலும், வரலாற்று ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை விழுமிய மதிப்புடைய நிலையான நிரந்தர சொத்தாகவும் மற்றும் அசையா சொத்தாகவும் மக்களிடம் காணப்படும் அவர்களுக்கே பிரத்தியேகமான இனியமையான மாதிரிகளாகும். இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் இரண்டாம் அத்தியாயத்தின் ஒன்பதாவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய கட்டளைகளின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சமயம் என பொருள் கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்க இவ்வுலக அர்த்தத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தூபிகள், தொல் பொருள் ஸ்தலங்கள், கட்டக்கலை அல்லது வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள், கட்டிடத் தொகுதிகள், கலைப் பொருட்கள், கையெழுத்துக் குறிப்புகள் / கையெழுத்துப் பிரதிகள் / நூல்கள் மற்றும் கலை சார்ந்த அல்லது வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வேறு பொருட்கள், கலாசார ரீதியான நிலக்காட்சிகள், கூட்டு நினைவுச் சின்னங்கள், விஞ்ஞானம் அல்லது தொழில் நுட்பம் சார் திறன்களை குறிக்கும் தொகுப்புகள், அறிவு சார்ந்த சின்னங்கள், கருத்துரைகள், பிராந்திய மொழி இலக்கண அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்ற பாரம்பரிய மரபுரிமைகளுடைய செயற்பாடுகள் மற்றும் கலாசார பல்லினத்துவம் என்பவற்றுக்கு மத்தியில் சமூக சமாதான நல்லிணக்க விழுமியங்களை பாதுகாப்பதற்கு நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தாக்க மாதிரிகள் என்பனவாகும்.

### தேசிய மரபுரிமை சொத்துக்களை நிர்ணயிப்பதற்கான தகவுதிறன்கள்

இந்தத் தகவுதிறன்கள் என்பது இலங்கையில் தேசிய மரபுரிமைகள் என இனங்காணப்படும் அல்லது எதிர்காலத்தில் அவ்வாறு இனங்காணப்படுவதற்குள்ள சாத்தியமான ஏதாவது ஒரு சொத்தை, தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தும் பொருட்டு வழிகாட்டத் துணையாக அமையும் வழிகாட்டிகளாகும். ஏதாவது ஒரு சொத்து தேசிய மரபுரிமை என ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எவரேனும் ஆள் ஒருவரினால் அல்லது நபர்கள் குழு ஒன்றினால் பெயர் குறிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுமாயின், அந்த நோக்கத்தின் நிமித்தம் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த உரிய தகவுதிறன்கள் அடிப்படையாகக் கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

**1. மொழி இலக்கண நினைவுச் சின்னங்கள்**

1.1 இலங்கையின் கலாசாரத்திற்கு பிரத்தியேகமான அறிவு, திறன் மற்றும் ஆக்கத்திறன் நிபுணத்துவம் என்பவற்றை பிரதிபலிக்கின்ற ஒரு நினைவுச் சின்னமாக இருத்தல்.

1.2 குறிப்பிட்டவொரு காலப் பகுதியில் மனித விழுமியங்களை பரிமாறிக் கொள்ளல், பகிர்ந்து கொள்ளல் மற்றும் அனுபவித்தல் என்பவற்றை பிரதிபலிக்கின்ற மொழி இலக்கண மாதிரியில் அமைந்துள்ள, தொழில் நுட்ப, அழகியல் பண்பியல்புகள் உடைய நினைவுச்சி ன்னமாக, நகரத் திட்டமாக அல்லது நிலக்காட்சி மாதிரியாக இருத்தல்.

1.3 இலங்கை மக்களுக்கு சொந்தமாக தற்பொழுது உள்ள அல்லது பழங்காலத்தில் இருந்த விஷேடமான கலாசாரத்திற்கு அல்லது நாகரீகத்திற்கு இணையான கூற்றை வெளிப்படுத்தும் ஒரு சின்னமாக இருத்தல்.

1.4 இலங்கை சமூக கலாசார பரிணாம வளர்ச்சியினுள் மிகவும் முக்கிய ஒரு காலப் பகுதியை அல்லது ஒரு யுகத்தை பிரதிபலிக்கின்ற ஒரு சின்னமாக அல்லது ஒரு மேட்டுநில ஸ்தலமாக அல்லது ஒரு நிலக்காட்சி ஸ்தலமாக இருத்தல்.

1.5 நேரடியாக அல்லது மறைமுகமாக இலங்கை மக்களின் கலாசார பாரம்பரிய மற்றும் சமய மரபுரிமைகளை பிரதிபலிக்கின்ற தனித்துவமான ஒரு ஜீவமானமாக அல்லது ஒரு எண்ணக்கருவாக, மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற ஒரு விஷேட சின்னமாக இருத்தல்.

**2. தொல்பொருள் ஸ்தலங்கள்**

2.1 இலங்கை மக்களின் கலாசார பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்ற ஒரு பாரம்பரிய குடியிருப்பு இருந்த ஒரு இடமாக, நிலப் பாவனையை சுட்டிக் காட்டுகின்ற ஒரு இடமாக, கடலை அண்மித்த ஒரு நிலக்காட்சி ஸ்தலமாக அல்லது சுற்றாடலுடன் பரஸ்பர தொடர்பு காணப்படுவதை உறுதிப்படுத்துகின்ற ஒரு இடமாக இருத்தல்.

2.2 இலங்கையில் மனிதர்கள் வாழ்ந்துள்ளனர் என்ற வரலாறுக்கு பொருத்தமான விஷேடத்துவமுடைய ஒரு நடத்தை செயலாக, விஷேடமான புலமைச் சொத்து சார்ந்த ஒரு முன்மாதிரியாக, இனிமை வாய்ந்த அழகியல் மைய கற்பனை ஆக்கமாக அல்லது தனித்துவமான தொழில் நுட்ப பாவனையை பிரதிபலிக்கக் கூடிய ஒரு இடமாக இருத்தல்.

2.3 1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருள் பாதுகாப்பு கட்டளை சட்டம் மற்றும் அதனகத்து பின்னர் அதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் என்பவற்றின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்குறித்த 2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஒரு இடமாக இருத்தல்.

**3. கலை/வரலாற்று விழுமியம் வாய்ந்த சுற்றாடல்**

3.1 ஏதாவது ஒரு காலப் பகுதிற்குரிய, அழகியல் உணர்வையும் மற்றும் பிரத்தியேகத் தன்மையையும் ஏற்படுத்தும் இலங்கையின் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற மிகவும் உன்னதமான, ஆக்கபூர்வமான எண்ணக்கருவாக, □கற்பனை ஆக்கமாக, தொழில் நுட்பத் திறன்கள் போன்ற அம்சங்களை நேரடியாக பிரதிபலிக்கும் ஒரு கட்புல வெளியீடாக இருத்தல்.

3.2 இலங்கையின் ஏதாவது ஒரு விஷேடமான இனத்திற்கு சொந்தமான, இலங்கையின் மரபுரிமையாக ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ள, அந்த இனத்தின் தனித்துவத்தை பிரதிபலிப்பதற்கு துணையாக அமைகின்ற ஒரு கட்புல சொத்தாக இருத்தல்.

3.3 மேற்குறித்த 3.1 மற்றும் 3.2 ஆகியவற்றின் மூலம் விவரிக்கப்பட்டுள்ள தகவு திறன்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற மற்றும் 1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருள் பாதுகாப்பு கட்டளை சட்டம் மற்றும் அந்த சட்டத்தின் திருத்தங்கள் என்பவற்றின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ள உரிய கட்டளைகளுக்கு இணங்க ஒரு கட்புல சொத்தாக இருத்தல்.

**4. கலைப்பொருட்கள் (நிலையான)**

4.1 இலங்கை மக்களின் தனித்துவமான சிந்தனை போக்குகள் மற்றும் சமூகக் கட்டமைப்புகள் என்பவற்றை புரிந்து கொள்ளக் கூடிய, இந்த ஆவணத்தின் 3.1, 3.2 மற்றும் 3.3 ஆம் விடயங்களின் கீழ் காணப்படும் ஏற்பாடுகளினால் விவரிக்கப் பட்டுள்ள ஏதாவது ஒரு நிறுவனத்தின் வெளியீடுகளாக அல்லது சொத்துக்களாக இருத்தல்.

**5. கலாசார நிலக்காட்சிகள்**

5.1 கலாசார ரீதியில் புரிந்து கொள்ளக் கூடிய / ஊகிக்கக் கூடிய பௌதீக அல்லது கட்புல ரீதியில் கற்பனை செய்யக் கூடிய ஒரு நிலப்பரப்பாக / ஒரு கடல் சார்ந்த இடமாக இருத்தல்.

5.2 தேசத்தின் அபிமானம், சமூக சமாதான மற்றும் சமய பரஸ்பர அம்சங்களை உள்ளடக்குகின்ற ஒரு சம்பவத்தை அல்லது சம்பவத் தொடர்களை பிரதிபலிக்கின்ற, பிரதிநிதிப்படுத்துகின்ற, அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான அளவில் செல்லுபடியாகும் சான்றுகளுடன் கூடிய ஒரு நிலப்பரப்பாக / ஒரு மேட்டுநில நீர்த்தேக்கமாக அல்லது கடல் சார்ந்த ஒரு இடமாக இருத்தல்.

**6. கையெழுத்துப் பிரதிகள்**

6.1 இலங்கையில் மனிதர்கள் வாந்துள்ளதற்கான வரலாற்றை பிரதிபலிக்கின்ற, மனிதனின் எழுத்தாக்பூர்வ அல்லது பதியப்பட்டுள்ள அல்லது வேறு ஏதாவது விதத்தில் மனித தலையீடுகள் என்பவற்றை பிரதிபலிக்கின்ற சின்னமுடைய இலங்கையின் மரபுரிமை நிர்மாண நிபுணத்துவம், கற்பனை, ஞானம் மற்றும் பயன்பாட்டு ஞானம் முதலியவற்றை குறிப்பிடுகின்ற சர்வகால முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஏதாவது யுகத்திற்குரிய விஷேடத்துவத்தை பிரதிபலிக்கின்ற ஒரு கட்புலக் கூற்றாக அல்லது அத்தயை கூற்றுக்களின் தொகுப்பாக இருத்தல்.

6.2 மேற்குறித்த 6.1 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மூலம் விவரிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற மற்றும் இலங்கையின் வரலாற்று மரபுரிமையை காரணகர்த்தவாக உறுதிப்படுத்தக் கூடிய சர்வதேச தொடர்புகளை பிரதிபலிக்கின்ற ஒரு கூற்றாக அல்லது அத்தகைய கூற்றுக்களின் தொகுப்பாக இருத்தல்.

**7. கலைப்பொருட்கள் (நிலையான)**

7.1 மேற்குறித்த 3.1, 3.2 மற்றும் 3.3 ஆம் விடயங்களின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள ஏற்பாட்டு விடயங்களுக்கு இணங்க வரைவிலக்கணப்படுத்தக் கூடிய இட ரீதியாக நகரக் கூடிய, பரிமாற்றிக் கொள்ளக் கூடிய ஒரு கட்புல கூற்றாக இருத்தல்.

**8. வரலாற்று / கலாசார ஆவணங்கள்**

8.1 இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் 1977 இன் அரசியலமைப்பின் இரண்டாம் அத்தியாயத்தில் ஒன்பதாவது உறுப்புரையில் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள உரிய கட்டளைகளின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதில் பொருள்கொள்ளப்பட்டுள்ள அந்தந்த சமயங்களுக்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆவணமாக இருத்தல்.

8.2 ஏதாவது சமூகத்திடம் இருக்கின்ற விஷேட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமூக கலாசார அல்லது கலை முதலிய தனித்துவமான ஒன்றாக அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையை பிரதிபலிக்கின்ற அல்லது / மற்றும் நினைவுச் சின்ன ஆவணமாக இருத்தல்.

8.3 இலங்கையில் மனிதர்கள் வாழ்ந்துள்ள வரலாற்றுக்குரிய விஷேடமான அல்லது நீண்டகாலம் தொடர்ந்திருக்கும் தன்மையை பிரதிபலிக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலாசார சம்பவமாக அல்லது சம்பவத் தொடர்களாக, ஒரு இடமாக, ஒரு அனுபவமாக அல்லது நபர் ஒருவர் சம்பந்தமான தகவல்களுடைய ஒரு மூலாதார ஆவணமாக இருத்தல். இலங்கையின் கலாசார

8.4 உன்னத தனித்துவத்தை பிரதிபலிக்கின்ற அழகிய இலக்கண எண்ணக்கருவாக, ஆக்கபூர்வ அழகியல் கலையாக / இன்னிசை கலாயாக / புகைப்பட மைய அல்லது இலத்திரனியல் வெளியீடாக இருத்தல்.

**9. பாரம்பரிய தொடர்பாடல் மாதிரிகள்**

9.1 சமூக கலாச்சார குழுவோன்றாக கருதக் கூடிய ஏதேனும் சமூகமொன்று தனது தொழில், திறமைகள், சமய அல்லது கலாசார செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படுகின்ற மொழி வழக்காதல்.

9.2 அன்றாட நடவடிக்கைகளில் திறம்பட ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளூர் அடையாளத்துடன் ஒரு நாட்டுப்புற மரபாக மாறுதல்.

9.3 ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்திற்கு உரிய ஒரு சமூகத்தின் நடைமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ள, இலங்கை அடையாளத்திற்கு அவர்களின் தனித்துவத்தின் தனித்துவமான பங்களிப்பைக் காட்டும் ஒரு பிரபல்யமான அல்லது பிரபல்யமற்ற பொருள்மை பிரயோகம் அல்லது மொழி வழக்காதல்.

9.4 ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு தனித்துவமான ஒப்பந்தங்கள், சமவாயங்கள் மற்றும் மரபுகளின் அடிப்படையில் பிரபலமான சொற்கள் அல்லாத தகவல்தொடர்பு நடைமுறையாக மாறுதல்

**10. கிராம் மரபணு மருத்துவ முறைகள் மற்றும் மாற்றீடுகள் (applications)**

10.1 இலங்கைக்கு, அதன் பகுதி, சமூகமொன்றுக்கு அல்லது தலைமுறைக்கு தனித்துவமான எந்தவொரு மருத்துவ அறிவின் நடைமுறை, சிகிச்சை விளைவு, சிகிச்சை பயன்பாடு அல்லது சிகிச்சை பயன்பாடு மற்றும் அந்த பாரம்பரியத்தின் அடையாளத்தை பிரதிபலிக்கின்றமை.

10.2 இலங்கைக்கு, அதன் பகுதி, சமூகமொன்றுக்குச் சொந்தமான மருந்துத் தாவரம், வேறு கனிமம் (அனைசயட) மற்றும் உயிரின பதார்த்தத்தை (யனெஅயட) ஒன்று சர்த்து அல்லது கலப்பாக பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மருந்து கலப்பு அல்லது மருந்து உருவாக்க முறைமையாதல். அல்லது தலைமுறைக்கு தனித்துவமான எந்தவொரு இலங்கையின் மருத்துவ கலவை அல்லது மருந்து உருவாக்கம், ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் சொந்தமான ஒரு மருத்துவ ஆலை,

10.3 இலங்கை மருத்துவ பாரம்பரியம் அல்லது ஒரு குறிப்பிட்ட தலைமுறைக்கு குறிப்பிட்ட தொழில்நுட்ப முறையின் ஒரு குறிப்பிட்ட நோயறிதல் முறை அல்லது பயன்பாடாக இருக்க வேண்டும்

10.4 இலங்கை சுதேச மருத்துவம் அல்லது ஒரு அரிய கையேடு அல்லது துண்டுப்பிரசுரம் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட மூலங்களைக் கொண்ட சிறப்பு அச்சிடப்பட்ட புத்தகங்கள் இருக்க வேண்டும்

10.5 அல்லது ஒரு குறிப்பிட்ட மருத்துவ தலைமுறையின் தனிப்பட்ட அடையாளத்தை பிரதிபலிக்கும் பழக்கவழக்கங்கள் தொடர்ச்சியான பாரம்பரியம் அல்லது க .ரவத்தை பறைசாற்றும் சன்னாஸ் துதபாத் போன்ற ஒருவித வரலாற்று ஆவணமாக இருப்பதுமேலே உள்ள

10.6 10.1, 10.2 மற்றும் 10.3 பிரிவுகளில் வெளிப்படுத்தப்படாத இலங்கை சுதேச மருத்துவ முறையின் தனித்துவமான அம்சங்களை வெளிப்படுத்தும் வேறு எந்த நாட்டுப்புற மருத்துவம் அல்லது பிற கலாச்சார நடைமுறை / நடைமுறையாக இருத்தல்.

**11. மனநல சிகிச்சைகள் (non-intrusive)**

11.1 இலங்கையர்களுக்குரிய பாரம்பரிய அறிவு, அணுகுமுறைகள், திறமைகள் மற்றும் கலைக் கோட்பாடுகள் (வசன வரிகள்) மனித சமுதாயத்தில் வாழ்க்கையின் அதிர்வு, உருவாக்கப்பட்ட கால கட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, இது ஒரு நோக்கமான விளக்கக்காட்சியாக அமைதல்.

11.2 மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வு: (trance) ஒரு நாட்டுப்புற கலாச்சார செயல்திறன் இருப்பது சமநிலைத்தன்மையை ஆக்க உதவுகின்றது.

11.3 வாழ்க்கையை பாதிக்கும் இயற்கை மற்றும் சமூக ஆபத்துக்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட பாரம்பரிய இலங்கையின் வாழ்க்கை முறையின் கருத்தையும் தர்க்கத்தையும் பிரதிபலிக்கும் ஒரு நடைமுறையாக இருத்தல்.

**12. இடை கலாச்சார சகவாழ்வின் மாதிரிகள்**

12.1 ஒரு கலாச்சார அம்சங்களை வகைப்படுத்தும் மற்றும் அத்தகைய கலாச்சார கூறுகளின் பாதுகாப்பிற்கும் வளர்ப்பிற்கும் பங்களிக்கும் ஒரு நடைமுறையாக இருத்தல்.

12.2 வெவ்வேறு சமூக கலாச்சார மற்றும் பொருளாதார சூழல்களில் வாழும் மக்கள் அல்லது சமூகங்களுக்கிடையில் சகவாழ்வு, ஒற்றுமை, பங்கேற்பு மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் பாரம்பரியமாக பராமரிக்கப்படும் மதிப்புகள் மற்றும் நடைமுறைகளின் தொகுப்பைக் குறிக்கும் ஒரு நடைமுறை.

**13 உணவு பாதுகாப்பு நடைமுறைகள்**

13.1 இலங்கைக்குச் சொந்தமான கலாச்சாரத்தின் பாரம்பரிய உணவுப் பாதுகாப்பு, பாதுகாத்தல், பாதுகாத்தல், திருத்துதல் அல்லது நுகர்வு தொடர்பான எந்தவொரு உள்ளூர் அல்லது பிராந்திய அடையாளத்தின் அறிவு அல்லது நடைமுறை

13.2 எந்தவொரு சமூகத்திற்கும் அல்லது சமூகத்திற்கும் பழங்காலத்தில் இருந்து இலங்கை மக்களின் வாழ்க்கை மற்றும் சமூகத்திற்கு தனித்துவமான உணவுப் பாதுகாப்பு, பாதுகாத்தல், பாதுகாத்தல், திருத்துதல், நுகர்வுக்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய கருவி அல்லது பிற உடல் வளங்களாகயிருத்தல்.

13.3 இலங்கை கலாச்சார அடையாளத்துடன் உணவுப் பாதுகாப்பு, பாதுகாத்தல், பாதுகாத்தல், திருத்துதல் அல்லது நுகர்வு ஆகியவற்றின் இலக்கிய, நடத்தை, சடங்கு அல்லது தகவல்தொடர்பு வெளிப்பாடாதல்.

**14. சுற்றுச்சூழல் முகாமைத்துவ மனோபாவம்**

14.1 சுற்றுச்சூழல் நட்பு கூட்டாண்மை: சுதந்திரமான சூழலைப் பேணுவதை நோக்கமாகக் கொண்ட ஒருமித்த கொள்கைகளை ஊக்குவிக்கும், பராமரிக்கும், பயன்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் சிந்தனை மற்றும் நடைமுறையின் ஒரு பாரம்பரியமாக இருத்தல்.

14.2 மேலே உள்ள பிரிவு 1 இல் வெளிப்படுத்தப்பட்ட ஒரு பாரம்பரியத்தின் நிலையான சமூகத்தை அடுத்தடுத்த சமூகத்திற்கு மாற்றுவதற்கான முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.

**15. மானிடவியல் நினைவுகள்**

15.1 ஒரு அடையாளக் குழு அதன் அடையாளத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக ஒரு கலாச்சாரக் குழுவால் வலியுறுத்தப்பட்ட அல்லது ஏற்கனவே பராமரிக்கப்பட்ட ஒரு நினைவு அடிப்படையிலான வெளிப்பாடாயிருத்தல்.

**16. சுய வெளிப்பாடு முறைகள்**

16.1 ஆளுமையை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக தொகுக்கப்பட்டுள்ளது, உள்ளார்ந்த கலாச்சார பரிமாணத்துடன், மனித உடலை ஒரு காவியாகப் பயன்படுத்தி ஒரு சொற்களற்ற தொடர்பு.

**17. ஆட்களுக்கிடையேயான உறவுகள் பற்றிய ஒப்பந்தங்கள்**

17.1 தனிப்பட்ட ஆளுமைக்கு பரஸ்பர மரியாதையைப் பேணுவது பற்றிய வாய்மொழி மற்றும் சொல்லாத செயலாக இருத்தல்.

17.2 பரம்பரை குடும்ப மரபுகளின் முக்கியத்துவம் பற்றி பொது மரியாதையின் வெளிப்பாடாக இருத்தல்.

17.3 நடைமுறை: நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் மதிப்பீட்டு மரபுகளை பராமரிக்க உதவும் ஒரு நடைமுறை.

17.4 மரபுகள்: (customs) மற்றும் ஒழுக்கங்கள்: (manners) தனிப்பட்ட கௌரவத்தை மீறாத ஒரு அறிக்கை

**18 பாரம்பரிய தொழில்நுட்ப பயன்பாடுகள்**

18.1 ஒரு சிறந்த பயன்பாடு, பயன்பாடு, கட்டமைப்பு அல்லது நடைமுறை, இது அன்றாட நடவடிக்கைகள் மற்றும் வாழ்வாதாரங்களின் செயல்திறனை மேம்படுத்துகிறது மற்றும் மரபு ரீதியான அறிவு அல்லது அறிவு முறையைப் பயன்படுத்துவதன் மூலம் அதன் சமூக-பொருளாதார நன்மைகளை மேம்படுத்துகிறது.

18.2 மேலே உள்ள பிரிவு 10.1 இல், ஒரு குறிப்பிட்ட பயன்பாடு, பயன்பாடு, உள்ளமைவு அல்லது நடைமுறைக்கு வடிவமைக்கப்பட்ட திறமையான கருவி, சாதனம், சாதனம் அல்லது உள்ளமைக்கப்பட்ட சூழலாதல்.

**19. உங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்வதற்கான அணுகுமுறைகள்**

19.1 உங்களைச் சுற்றியுள்ள உலகைக் கவனித்தல்,விசாரணை, விவரிக்க, விளக்கக்காட்சி அல்லது பங்கேற்புக்காக சில சமூகம், மக்கள் குழு அல்லது ஒரு ஒரு நபரால் தொடர்ந்து, இலங்கை அடையாளத்தை பிரதிபலிக்கும் ஒரு பாரம்பரிய விளக்கம், முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடைமுறை அல்லது வடிவமைப்பாதல்.

**20. வளத்தை இயக்குதல்: (resource harvesting) மற்றும் பயன்பாட்டு படிவங்கள்**

20.1 வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழலுக்கு இடையிலான சமநிலையை பராமரிக்கவும் பராமரிக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு பாரம்பரிய மூலோபாயம், அறிவாற்றல், பயன்பாடு அல்லது நடைமுறை.

20.2 இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு நுகர்வோர் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்தங்களுடன் இணங்குதல் ஒரு பாரம்பரிய மூலோபாயம், அறிவாற்றல், பயன்பாடு அல்லது வள அணிதிரட்டல் மற்றும் பயன்பாட்டின் நடைமுறையாக இருத்தல்.

20.3 ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது குழுவிற்கு இடையில் ஒரு பாரம்பரிய அடிப்படையில் பின்பற்றப்படும் ஒப்பந்தங்கள், மரபுகள் அல்லது ஒப்பந்தங்களால் வெளிப்படுத்தப்படும் ஒரு மூலோபாயம், அறிவாற்றல், பயன்பாடு அல்லது நடைமுறையாதல்.

**21. அனுபவம் வாய்ந்தவை: (transcendental) மற்றும் வேற்று (extra-terrestrial) அறிவு**

21.1 எந்த சமூகமும்,அவரது குழுவின் உறுப்பினர்களின் உடல் / மன அசாதாரணங்களை போக்க பரம்பரை நோக்கம், இலங்கையில் உள்ளார்ந்த கலாச்சார பரிமாணங்களில் உருவான ஒரு அனுபவ தொடர்பு நடைமுறை அல்லது பயன்பாடாதல்.

21.2 நேர உணர்வும் நேரடி உணர்வும் கண்ணுக்கு தெரியாதவை நேரத்தை கணிப்பதற்கான இயற்கை வளங்களின் அடிப்படையில் கட்டப்பட்டது. இது ஒரு கற்பனையான கட்டமைப்பு, ஒரு நடத்தை சமரசம், ஒரு ஏற்பாடு அல்லது சிதைந்த இலங்கை அடையாளத்தை பிரதிபலிக்கும் ஒரு அறிவாற்றல் வெளிப்பாடு.

**22. இயற்கை பௌதீக பாரம்பரியம்**

22.1 பௌதீக தாக்கங்கள் காரணமாகஇயற்கை நிலைமைகளில் தனித்துவமான மாற்றங்கள் காரணமாக தனித்துவமான உயிரியல், சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மதிப்புள்ள இடமாகயிருத்தல்.

**23. உயிரியல் பல்வகைமையை பிரதிபலிக்கும் ஆபத்தான தாவர இனங்கள்**

23.1 சர்வதேச சிவப்பு தரவு புத்தகத்தில் (IUCN) சேர்க்கப்பட்ட தாவர இனமாக இருப்பது.

23.2 பாதுகாக்கப்பட்ட தாவர இனமாக சட்டப்பூர்வமாக அடையாளமிடப்பட்ட உள்நாட்டில் ஆபத்துக்குள்ளான தாவர இனமாக இருத்தல்

23.3 .வேறு சில சர்வதேச ஒப்பந்தங்களால் வர்த்தகம் மற்றும் ஏற்றுமதியால் தடைசெய்யப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட தாவர இனமாக இருக்கின்றமை.

**24. உயிரின பல்வகைமை ரீதியாக ஆபத்துக்குள்ளான உயிரினங்கள்**

24.1 சர்வதேச சிவப்பு ஏட்டில் (IUCN) சேர்க்கப்பட்ட உயிரின பல்வகைமையொன்றாக இருத்தல்.

24.2 பாதுகாக்கப்பட்ட இனமாக சட்டப்பூர்வமாக பெயரிடப்பட்டதுடன் உள்ளூரில் ஆபத்தான உயிரினமாக இருக்கின்றமை.

24.3 வேறு சில சர்வதேச ஒப்பந்தங்களால் வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி போன்றவற்றுக்கு தடைசெய்யப்பட்டு ஒரு இனமாக இருக்கின்றமை.

**25. இலங்கைக்குச் சொந்தமான பயோமா**

25.1 தனித்துவமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் கலப்பு அலகு என அடையாளம் காணக்கூடிய ஒரு நிலப்பரப்பு சுற்றுச்சூழல் அமைப்பு.

25.2 தனித்துவமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் கலப்பு அலகு என அடையாளம் காணக்கூடிய நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்பு.

25.3 ஒரு பகுதிக்கு தனித்துவமான புவி இயற்பியல் மற்றும் காலநிலை பண்புகளுக்கு ஏற்ற தாவர மற்றும் விலங்கின சமூகங்களைக் கொண்ட சுற்றுச்சூழல் அலகு.

**26. இலங்கைக்குச் சொந்தமான தனித்துவமான சூழல் ரிசார்ட்ஸ்**

26.1 தனித்துவமான பல்லுயிர் கொண்ட காடுகள், காடுகள், தரிசு நிலங்கள், ஈரநிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களின் அமைப்பாகயிருத்தல்.

26.2 உயிரியல் மற்றும் அழகியல் மதிப்பின் சுற்றுச்சூழல் அமைப்பாகயிருக்கின்றமை.

**27. இலங்கைக்கு தனித்துவமான பௌதீக வளங்கள்**

27.1 இலங்கைக்குச் சொந்தமான பாறை மற்றும் / அல்லது கனிம படிவங்கள்

**28. இலங்கையின் புவியியல் வரலாற்றை பிரதிபலிக்கும் எடுத்துக்காட்டுகள்**

28.1 வெவ்வேறு புவியியல் காலங்களை குறிக்கும் ஒரு பாறைப் படிவம் மற்றும் / அல்லது மண் பகுதி.

**29. உலகளாவிய உயிரியல் பரிணாம வளர்ச்சியில் இலங்கையின் நிலப்பரப்பைக் குறிக்கும் புதைபடிவ வைப்புகளைக் கொண்ட பாறைகள்**

29.1 புதைபடிவ எச்சங்கள் மற்றும் / அல்லது உயிரியல் பரிணாம வளர்ச்சியின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் வைப்புத்தொகை கொண்ட இடமாகயிருத்தல்.

**30. தற்போது வெளிநாட்டினருக்கு சொந்தமான இருக்கும் இலங்கை பாரம்பரிய சொத்துக்கள்**

30.1 கலாச்சார சொத்துக்களின் சட்டவிரோத போக்குவரத்து தடுப்பதற்கான, 1970 யுனெஸ்கோ சாசனத்தின் விதிகளின்படி நிறுவன கட்டமைப்புகள் மற்றும் இராஜதந்திர விதிமுறைகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட ஒரு சொத்தொன்றாகும்.

# சர்வதேச செய்திகள்

## இராணுவ சதிப்புரட்சியை எதிர்த்து:

# மியன்மாரில் இரண்டாவது நாளாக ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்



மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சியை நிராகரித்தும் அந்நாட்டு அரசியல் தலைவி ஆங் சான் சூச்சியை விடுதலை செய்யக்கோரியும் மிகப்பெரிய நகரான யங்கோனில் இரண்டாவது நாளாக நேற்றும் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சூச்சியின் ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சியின் நிறமான சிவப்பு நிற பலூன்களை ஏந்தியபடி "எமக்கு இராணுவ சர்வாதிகாரம் தேவையில்லை! ஜனநாயகமே தேவை!" என்று கோசமெழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாகச் செயன்றனர்.

பெப்ரவரி 1ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிரான அடையாளமாக மாறியிருக்கும் மூன்று விரல்களைக் காட்டும் அடையாளத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் காண்பித்தனர். வாகனத்தை செலுத்தியவர்கள் அதன் ஹோர்னை ஒலிக்கச் செய்ததோடு அதில் இருந்த பயணிகள் ஆங் சான் சூச்சியின் புகைப்படங்களையும் சுமந்திருந்தனர்.

"ஜனநாயகத்தை பெறும் வரை நாம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வோம். இராணுவ சர்வாதிகாரம் ஒழிக" என்று 37 வயது ஆர்ப்பாட்டக்காரரான மியோ வின் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பின் போது கைது செய்யப்பட்ட சூச்சி எங்கே உள்ளார் என்பது இன்னும் தெரியாதுள்ளது.

மௌலாமின் மற்றும் மண்டலாய் ஆகிய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

மியன்மாரில் இணையதளங்கள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் முடக்கப்பட்டபோதும் ஆர்ப்பாட்டங்களின் சில புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் போடப்பட்டுள்ளன.

மக்கள் ஒன்றுதிரள்வதை தடுக்க பேஸ்புக், ட்வட்டர் மற்றும் இன்ஸ்டர்கிராம் சமூகதளங்களை தடுத்திருக்கும் இராணுவம் தொலைபேசி சேவைகளுக்கும் தடங்கலை கொண்டுவந்துள்ளது.

இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் அங்கு 160க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டிருப்பதாக மியன்மாருக்கான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் தோமஸ் அன்ட்ரூஸ் தெரிவித்துள்ளார்.

"சிவில் எதிர்ப்பு செயற்பாடுகளை செயலிழக்கச் செய்யும் முயற்சியில் ஜெனரல்கள் ஈடுபட்டுள்ளனர். அனைத்து இணைய இணைப்புகளையும் துண்டிப்பதன் மூலம் அதனை வெளியுலகுக்கு தெரியாமல் செய்ய முயன்று வருகின்றனர்" என்று அன்ட்ரூஸ் நேற்று வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒரு வாரத்தில் மியன்மாரில் சிவில் ஒத்திழையாமை போராட்டம் வலுத்து வருகிறது. மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்களும் தமது பணியை தொடர்வதை மறுத்து வருகின்றனர். ஒவ்வொரு இரவும் மக்கள் வீதிகளில் இறங்கி வீட்டு சமையல் பாத்திரங்களில் ஒலி எழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இராணுவ ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிராக சர்வதேச அளவிலும் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன. மியன்மார் மீதான தடைகளை மீண்டும் கொண்டுவருவது பற்றி அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மிருகக்காட்சி சாலையிலிருந்து தப்பிய 2 புலிகளால் பரபரப்பு



இந்தோனேசியாவின் போர்னோ தீவில் உள்ள மிருகக்காட்சி சாலையில் இருந்து தப்பிச் சென்ற இரு சுமத்ரா புலிகள் அந்த மிருகக் காட்சி சாலை ஊழியர் ஒருவரை அடித்துக் கொன்றுள்ளன.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு ஒன்றில் தனது கூடு திறந்துகொண்டதை அடுத்து சுமார் 18 மாதங்களான இந்த இரு பெண் புலிகளும் தப்பியுள்ளன.

இதில் சகதிக்குள் சிக்கிக்கொண்ட ஒரு புலி கடந்த சனிக்கிழமை மீண்டும் பிடிக்கப்பட்டது. மற்றைய புலி அபாயகரமான முறையில் நடந்துகொண்டதால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்தப் புலிகள் தப்பிச்சென்ற நிலையில் அவைகளின் கூட்டுக்கு அருகிலேயே 47 வயதான ஊழியரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவரது உடலில் கடித்த காயங்கள் மற்றும் கீறல்கள் இருந்துள்ளன.

திறக்கப்பட்ட அந்தக் கூண்டுக்கு அருகில் குரங்கு மற்றும் நெருப்புக் கோழியின் உடல்களும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வத்திக்கானின் முக்கிய பதவி: முதல்முறை பெண் நியமனம்



ஆயர்களின் ஆலோசனை சபைக்கு நேருதவிச் செயலாளராக முதல்முறை பெண் ஒருவரை பாப்பரசர் நியமித்துள்ளார்.

இவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸைச் சேர்ந்த அருட்சகோதரி நதாலி பெக்குவார்ட் அந்த சபையில் வாக்குரிமை அளிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். இந்த சபையானது ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் தொடர்பில் பாப்பரசருக்கு ஆலோசனைகள் வழங்குகிறது.

பெக்குவார்ட் 2019 தொடக்கம் இந்த ஆலோசனை சபையில் ஒரு ஆலோசகராக பணியாற்றி வந்துள்ளார். "கதவு ஒன்று திறக்கப்பட்டிருப்பதை இந்த நியமனம் காட்டுகிறது" என்று ஆலோசனை சபையின் செயலாளர் நாயகம் கருதினால் மரியோ கிரேச் தெரிவித்தார்.

நிர்வாக அமைப்பு மற்றும் பலிபீடத்திற்கு பெண்களை அனுமதிப்பதற்கு திருச்சபை சட்டத்தில் பாப்பரசர் உத்தியோகபூர்வ மாற்றங்களை கொண்டுவந்து ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திலேயே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக வத்திக்கான் நிதிச் செயற்பாடுகளை கண்காணிக்கும் சபைக்கு ஆறு பெண்களை பாப்பரசர் கடந்த ஆண்டு நியமித்திருந்தார்.

# கொவிட்-19: உலகை எச்சரித்த மருத்துவருக்கு நினைவஞ்சலி



கொவிட்–19 தொற்றைப் பற்றி முதலில் எச்சரிக்கை விடுத்த மருத்துவருக்கு என்றும் கடமைப்பட்டிருப்பதாக சீனாவின் வூஹான் நகர குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வைரஸ் தொற்று அடையாளம் காணப்படும் முன்னரே அதுகுறித்து எச்சரித்தார் கண் மருத்துவர் லீ வென்லியாங். நோய்த்தொற்றைப்பற்றி வதந்திகள் பரவுவதாக பொலிஸாரால் முதலில் கண்டிக்கப்பட்டார் லீ.

34 வயது மருத்துவர் கடந்த ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி நோய்த் தொற்றால் காலமானார். அவரின் மரணத்தைத் தொடர்ந்து பலர் ஆழ்ந்த துக்கத்தை வெளிப்படுத்தினர். இணையத்தில் பலர் தங்கள் கோபத்தையும் வெளிப்படுத்தினர்.

'சீனாவின் வீரர்' என்று நோய்ப்பரவல் நிபுணர் ஒருவரால் பெயர்சூட்டப்பட்டார் லீ.

ஆனால் அரசாங்கம் நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடியவர்களை அங்கீகரித்தபோதும் லீயை அந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை.

வூஹான் நகரில் வாழ்க்கை கிட்டத்தட்ட வழக்கநிலைக்குத் திரும்பினாலும் மக்கள் லீயின் செயல்களை நினைவுகூர்ந்து வருகின்றனர்.

# ஐ.எஸ் குழுவால் கொல்லப்பட்ட 104 யாசித்திக்கள் நல்லடக்கம்



வடக்கு ஈராக்கில் 2014 இல் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) குழு கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட யாசிதி சமூகத்தின் 104 பேரின் இறுதிக் கிரியை இடம்பெற்றுள்ளது.

மனிதப் புதைகுழிகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட இவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு நின்வாஹ் மாகாணத்தில் சின்சார் மலைக்கு அருகில் இருக்கும் கோச்சோ கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

யாசித்திக்கள் வசிக்கும் பிரதேசங்களை கைப்பற்றிய ஐ.எஸ் குழு அந்த மக்களை படுகொலை செய்ததோடு பெண்கள் மற்றும் சிறுவர்களை அடிமையாக நடத்தி கற்பழிப்புகளில் ஈடுபட்டது.

இந்த சமூகத்தின் மீது ஐ.எஸ் இனப்படுகொலையில் ஈடுபட்டதாக ஐ.நா குற்றம்சாட்டியது.

இதில் கொல்லப்பட்ட 104 பேரும் ஆண்களாவர்.

2014 ஒகஸ்ட் மாதம் ஐ.எஸ் இந்த படுகொலையை நடத்தியதாக ஆவணப்படுத்தல்களுக்கான யாசிதி அமைப்பின் தலைவர் கைரி அலி இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

## நாஜி கூட்டுப் படுகொலை:

# 95 வயது பெண் மீது குற்றச்சாட்டுகள் பதிவு



நாஜி வதை முகாம் ஒன்றில் படைத்தலைவராக பணியாற்றிய 95 வயதான பெண் ஒருவர் மீது கூட்டுப் படுகொலைக்கு உடந்தையாக இருந்ததாக வடக்கு ஜெர்மனியில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இர்ம்கார்ட் எப் என்று ஊடகங்களால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் அந்தப் பெண் தற்போது ஹம்பார்க் நகருக்கு அருகில் உள்ள பராமரிப்பு இல்லம் ஒன்றில் வசித்து வருகிறார். 10,000க்கும் அதிகமான சம்பவங்கள் குறித்து அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது கிடன்ஸ் என்று அழைக்கப்படும் நகருக்கு அருகில் இருக்கும் கொடிய வதை முகாமில் அவர் பணியாற்றியுள்ளார். இந்த முகாமில் இரண்டாம் உலகப் போர் காலத்தில் சுமார் 65,000 கைதிகள் உயிரிழந்துள்ளனர். 1939 ஆம் ஆண்டு நிறுவப்பட்டிருக்கும் இந்த வதை முகாமில் 1944 ஜூனில் நச்சு வாயு பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1945 மே மாதத்தில் சோவியட் துருப்புகளால் இந்த முகாம் விடுவிக்கப்பட்டுள்ளது.

# பலஸ்தீனத்திற்கு ஆதரவாக சர்வதேச நீதிமன்றில் தீர்ப்பு



சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், பலஸ்தீன வட்டாரங்கள் 'தனது நீதி அதிகார வரம்புக்கு உட்பட்டவை' எனத் தீர்ப்பளித்துள்ளது. அதன் மூலம், இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் போர்க் குற்றங்கள் குறித்த புலனாய்வை நடத்தும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பலஸ்தீன மேற்குக் கரை, ஜெரூசலம், காசா உள்ளிட்ட பகுதிகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வரம்புக்குள் அடங்கும்.

பலஸ்தீன அதிகாரசபை, சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பினராக நீடிக்கிறது. ஆனால், இஸ்ரேல் அப்படி இல்லை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிராகரித்த இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அது "தெளிவான யூத எதிர்ப்புவாதம்" என்று கண்டித்தார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முடிவு, அதிக அக்கறைக்குரியது என அமெரிக்கா குறிப்பிட்டது.

இஸ்ரேல், சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பு நாடாக இல்லை. ஆகவே, அதன் அதிகாரம் இஸ்ரேலைக் கட்டுப்படுத்தக் கூடாது என அமெரிக்கா குறிப்பிட்டது.

# கியூபாவில் அதிக தனியார் வர்த்தகங்களுக்கு அனுமதி



கியூபாவின் வரலாற்றில் முதல் முறையாக பொருளாதாரத்தில் மிகப் பெரிய சீர்திருத்தமாக, தன் நாட்டின் பெரும்பாலான தொழில்களில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கியூபாவில் 127 வகையான தொழில்களில் மட்டுமே தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி இருந்து வரும் நிலையில், அது தற்போது 2,000க்கும் மேற்பட்ட தொழில்களாக அதிகரித்து அனுமதி வழங்கப்படுவதாக கியூபாவின் தொழிலாளர் துறை அமைச்சர் மார்டா எலெனா பிடோ கூறினார்.

இதன் மூலம், மிகக் குறைவான தொழில்துறைகள் மட்டுமே அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடை மற்றும் கடந்த ஆண்டு ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றால் கியூபா பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கம்யூனிச நாடான கியூபாவின் பொருளாதாரம் 11 வீதம் சரிவை சந்தித்தது. இது கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய சரிவாகும். இந்த சூழலில் அங்கு அடிப்படை பொருட்களுக்கு பற்றாக்குறை உள்ளது.

# இந்தோனேசியாவில் சிவப்பு நிற வெள்ளம்



பத்திக் தொழிற்சாலை ஒன்று வெள்ளத்தில் சிக்கியதால் இந்தோனேசிய கிராமம் ஒன்றில் வெள்ள நீர் சுவப்பு நிறமாக மாறியுள்ளது.

மத்திய ஜாவாவின் ஜெங்கோட் வீதிகளில் வெள்ளநீர் பரவிய போது அதில் பத்திக் தொழிற்சாலையின் சாயம் கலந்துவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இரத்துச் சிவப்பில் மாறிய வெள்ளத்தின் படங்கள் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டுள்ளன. பகிரப்படும் புகைப்படங்களால் வதந்தி பரவிவிடுமோ என்று ஒருவர் அச்சம் தெரிவித்தார்.

பெக்கலோங்கன் என்ற இந்த ஊர் பத்திக் துணி உற்பத்திக்குப் பிரபலமானதாகும்.

பெக்கலோங்கன் பேரிடர் நிவாரணத் தலைவர் டிமாஸ் அர்கா யுதா, பகிரப்பட்ட புகைப்படங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தினார்.

இந்தப் பகுதியில் மற்றொரு ஊரில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளம் பத்திக் தொழிற்சாலை சாயத்தால் பச்ச நிறமாக மாறியதாக ஊர் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்தாவில் பொழிந்த அதிதீவிர மழையால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக 43 பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது. இந்தோனேசியாவில் அடிக்கடி மழை வெள்ளம் ஏற்படுவது என்பது இயல்பான ஒன்று.

## முன்னோர் வழிபாட்டுக்கு மிகவும் சிறந்த நாள்

# அமாவாசை!

சாதாரணமாக இறந்த ஆவிகள் சந்திரனின் ஒளிக் கற்றையில் உள்ள அமிர்தத்தை சாப்பிடும். அதுதான் அதற்கு உணவு. அமாவாசையன்று சந்திரனின் ஒளிக்கற்றை ஆவிகளுக்குக் கிடைக்காது. அதனால் ஆவிகள் உணவுக்குத் திண்டாடும். பசி தாங்க முடியாமல் ரத்த சம்பந்தமுடைய வீடுகளுக்கு வரும்.

நம்மை யாராவது நினைத்துப் பார்க்கிறார்களா? நமக்குத் தர்ப்பணம், படையல் செய்கிறார்களா என்று பார்க்கும். எனவே அமாவாசை அன்று கண்டிப்பாக நாம் நம் பித்ருக்களுக்கு தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

வீடு வாசல் இல்லாத ஏழைகளுக்கு அமாவாசையன்று அன்னதானம் செய்ய வேண்டும். ஒவ்வொரு அமாவாசையன்றும் தங்களால் இயன்ற அளவு உணவை அன்னதானம் செய்யலாம். அமாவாசை பிதுர் தர்ப்பணம் மற்றும் அன்னதானம் ஆகியவற்றைக் குல தெய்வம் இருக்கும் இடத்தில் செய்வது நல்லது. முடியாதவர்கள் தங்கள் இஷ்ட தெய்வம் இருக்கும் இடத்தில் செய்யலாம். வீட்டிலும் செய்யலாம்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் அன்னதானம் செய்ய முடியாதவர்கள் தை, ஆடி, புரட்டாசி அமாவாசையில் அன்னதானம் செய்ய வேண்டும்.

தானங்கள் தருவது அவரவர் வசதியைப் பொறுத்தது. அன்னதானம் சாதமாகவோ, இட்லியாகவோ இருக்கலாம். ஆனால் எள்ளு சட்னி அல்லது எள் உருண்டை கண்டிப்பாக இருக்க வேண்டும். எதுவும் செய்ய முடியாமல் இருப்பவர்கள் ஒரு பசு மாட்டிற்கு ஒன்பது வாழைப்பழங்கள் அமாவாசை அன்று கொடுக்க வேண்டும்.

மறைந்த முன்னோர்களின் இறந்த திதி வருடா வருடம் வரும், அன்று கட்டாயம் தர்ப்பணம் செய்ய வேண்டும். தர்ப்பணத்திற்கு கறுப்பு எள்தான் பயன்படுத்த வேண்டும். கீழ்க்கண்ட பெயர்களை சொல்லி தர்ப்பணம் செய்ய வேண்டும். உங்கள் தாயாரின் தகப்பனார் மற்றும் தாயார், உங்கள் தகப்பனாரின் தகப்பனார் மற்றும் தாயார் உங்கள் தாயாரின் தாத்தா பாட்டி உங்கள் தகப்பனாரின் தாத்தா பாட்டி உங்கள் தாயாருடைய தகப்பனாரின் தாத்தா பாட்டி உங்கள் தகப்பனாருடைய தகப்பனாரின் தாத்தா பாட்டி இப்படி நமது தாய்வழி, தந்தை வழி மறைந்த முன்னோர்களுக்கு கட்டாயம் தர்ப்பணம் செய்தல் வேண்டும். மேலும் உங்கள் ரத்த சம்பந்தப் பட்ட உறவுகள் இறந்திருந்தால் சேர்த்துக் கொள்ளலாம். உங்கள் தகப்பனாருடன் பிறந்தவர்கள் இறந்திருந்து அவர்களுக்கு குழந்தைகள் இல்லாமல் இருந்தால் சேர்த்துக் கொள்ளலாம்.



தர்ப்பணத்தை எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். ஆற்றில், கடலில், அருவியில், கிணற்றடியில், நமது பூஜையறையில், ஹாலில் எங்கு வேண்டு மானாலும் செய்யலாம். மனம் சுத்தமாக இருக்க வேண்டும். அவ்வளவுதான். தர்ப்பணம் செய்வது பற்றி தங்களுக்கு முறைகள் தெரிந்திருந்தால் தாங்களே செய்து கொள்ளலாம்.

முதலில் தர்ப்பணம் செய்யும் நாள் அன்று காலை சாப்பிடக் கூடாது. மதியம் சாப்பிடலாம். கத்திரிக்காய், வாழைக்காய் கட்டாயம் இடம்பெற்றிருக்க வேண்டும். வெங்காயம், பூண்டு, மாமிசம் உண்ணுதல் கூடாது. மிளகு சேர்ப்பதும் நன்மையைத் தரும். பச்சரிசி உண்ண வேண்டும். இரவு சாதம் சாப்பிடுதல் கூடாது. இட்லி, தோசை, சப்பாத்தி சாப்பிடலாம்.

முதலில் யாருக்கு திதியோ அவருக்கு தர்ப்பணம் செய்தல் வேண்டும். உதாரணமாக திதி உங்கள் தந்தையாருக்கு என்றால் முதலில் உங்கள் தந்தைக்கு தர்ப்பணம் செய்தல் வேண்டும். பின் தந்தை வழியில் உள்ளவர்களுக்கு. பின் தாய் வழியில் உள்ளவர்களுக்கு, செய்தல் வேண்டும். தை அமாவாசையன்று, 'பித்ரு' எனப்படும் முன்னோருக்கு தர்ப்பணம், சிரார்த்தம் முதலானவை செய்யப்பட வேண்டும். அன்று தீர்த்தங்களில் எள்ளை விட வேண்டும். வாழைக்காய் உள்ளிட்ட சில காய்கறி வகைகளைப் படைக்கின்றனர். விளக்கு முன் பெற்றவர்களின் படங்களை வைத்து உணவு படைத்து பூஜை செய்ய வேண்டும்.

காகங்களுக்கும், ஏழைகளுக்கும் உணவளிக்கின்றனர். நம் முன்னோர் தங்கியிருக்கும் இடம், 'பிதுர் லோகம்' எனப்படும். அங்கே, 'பிதுர் தேவதைகள் இருக்கின்றனர்.

நம் உறவினர் ஒருவர் இப்போது பசுவாகப் பிறந்திருந்தால் நாம் அனுப்பும் பொருள் வைக்கோலாகவும், குதிரையாக பிறந்திருந்தால் கொள்ளாகவும். யானையாக பிறந்திருந்தால் கரும்பு, தென்னை ஓலை என ஏதோ ஒரு வடிவமைப் புக்கு மாற்றப்பட்டு, நாம் தர்ப்பணம் செய்யும் பொருள் போய் சேர்ந்து விடும். இதை சேர்க்கும் வேலையை, 'பிதுர் தேவதைகள்' செய்கின்றனர்.

இதற்காகவே, இவர்களை கடவுள் நியமித்திருக்கிறார். இறப்புக்கு முன் நம் பெற்றோருக்கு எத்தனையோ சேவை செய்கிறோம். அது இறப்புக்கு பின்னும் தொடர வேண்டும்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)



23

அதனையும் பக்தி பூர்வமாகச் சிவனுக்கென்றே கடலில் மீளவிட்டு விடுவதனால் தம் ஏவலர்களுடன் தாமும் பசி பட்டினியால் தளர்ந்து வாடும் நிலை யெய்தியபோதும் அவர்தம் தொண்டுநிலையில் தளர்ந்திலர். இவரது இத்தொண்டுறுதியின் அழுத்தத்தை இன்னுஞ் சற்று ஏறவிட்டுக் காணும் திருவுளச் செயலாக ஒருநாள் அவயவங்களெல்லாம் நவரத்தினங்களாலமைந்த பொன்மீனொன்று முன்னைய தனிமீனுக்குப் பதிலாக அவர் வலையில் அகப்படுவதாயிற்று. சூரியப் பிரகாசமாக விளங்கும் அவ்வற்புத மீனைக் கண்டதும் பேரானந்தமுற்றவராய் இத்தகைய அரிய மீன் சிவனுக்கே உரித்தாந் தகுதியுள்ளது எனக் கொண்டு, "சென்று சேர்க சிவன்கழற்கே" எனக் கூறிக்கரையெற்றி மீளும் அலையோடு மீளுமாறு அதனைத் தள்ளி விட்டருளினார். சோதனை இனிப்போதும் எனத் திருப்தியுற்றவர்போல் சிவபெருமான் அப்பொழுதே ஆகாயத்தில் இடபாரூடராய்த் தோன்றி அவர்க்குச் சிவலோகப் பெருவாழ்வு தந்தருளினார்.

இந்நிகழ்ச்சி அவர் புராணத்தில், "ஆன நாளொன்றி லவ்வொரு மீனுமங் கொழித்துத் தூநிறப்பசுங் கனகநற் சுடர்நவமணியால் மீனுறுப்புற அமைந்துல கடங்கலும் விலையாம் பான்மை அற்புதப் படியதொன் றிடுவலைப் படுத்தார்" "என்று மற்றுளோரியம்பவு மேவுசீர்த் தொண்டர் பொன்திரள் சுடர் நவமணி பொலிந்த மீனுறுப்பால் ஒன்றும் மற்றிது என்னை ஆளுடையவர்க்காகும் சென்று பொற்கழல் சேர்கெனத் திரையொடுந் திரித்தார்" "அகிலகோகமும் பொருள் முதற்றா மெனுமளவில் புகலுமப்பெரும் பற்றினைப் புரையற வெறிந்த, இகலில் மெய்த்திருத் தொண்டர் முன் இறைவர்தாம் விடைமேல் முகில்விசும்பிடை அணைந்தனர் பொழிந்தன முகைப்பூ" என வரும்.

பற்றும் பற்றுக்கள் யாவினுக்குந் தலைப்பற்றாகப் பொருட் பற்றையே பற்றும் பாங்குள்ள இவ்வுலகில் அதனைத் துச்சமாக மதித்துத் துடைத்தெறிந்தவர் என இந்த நாயனார் மகிமையை மேல் இறுதிச் செய்யுளில் சேக்கிழார் நாயனார் போற்றிப் புனைதல் குறிப்பிடத்தகும்.

மறத்தொழில் எனவே மதிக்கப்படும் வலைத்தொழிலுள்ளுஞ் சிவ தொண்டின்சீலம் விளக்கமுற நின்றவாறும் தம்மவருடனான தமது சீவனோபாயமே கேள்விக்குரியதாயிருந்த கட்டத்தில் உலகமெலாம் விலைபோகக்கூடிய பொன்மீன் கிடைக்கவும் அத்தகைய உயர்பொருள் ஆவசியமாகச் சிவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டாக வேண்டுமென்ற பக்தி வைராக்கியசீலம் புலப்பட நின்றவாறும் இந்த நாயனாரின் தொண்டுறுதி விசேடங்களாக அறிந்து கடைப்பிடிக்கத்தகும். **(தொடர்)**

தொகுப்பு:
**கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**






உடப்பு அருள்மிகு ஸ்ரீவீரபத்திர காளியம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஸ்ட மகா கும்பாபிஷேக பெருவிழா அண்மையில் இடம்பெற்றது.இதன் போது பலர் கலந்து கொண்டு அம்மனின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.

## ஹம்ஸ யோகம் - 06



பிரணாயாமத்தில் சங்கல்பம் என்பது சாதகனின் இச்சாசக்தியினதும் மன ஏகாக்கிரசக்தியினதும் கூட்டு ஆற்றலாகும். பலவிதமான மந்திரங்கள், யந்திரங்கள், தெய்வ ரூபங்கள் ஆகியன மனதின் இந்தசக்தியை அதிகரிப்பதற்காக பரிந்துரைக்கப்படுகின்றன. மந்திர ஜெபமும் அந்த மந்திரத்திற்குரிய தேவதையினைத் தியானிப்பதும் மன ஒருமைப்பாட்டினை அதிகரித்து சாதகனை தியானத்திற்குச் செலுத்தும். ஒரு சாதகன் பிரணாயாமம் செய்யும் போதுதான் தெய்வ பிராணசக்தியில் மூழ்கி இருப்பதாகவும் ஒவ்வொரு மூச்சின் போது அந்த பிராணனைதனக்குள் உறிஞ்சுவதாகவும் பாவனை செய்யவேண்டும்.

நம்பிக்கை, சிரத்தை ஆகிய இரண்டு பண்புகளும் மிக சக்தி வாய்ந்தகாந்த ஆற்றல்களாகும். அவை இரண்டும் உணர்வுச் சக்தியின் அதிசக்தி வாய்ந்த ஆற்றல்களாகும். இதுபோல் உணர்ச்சிகளும் மிக ஆற்றலுள்ள சக்திகளாகும். இந்த ஆற்றல்களை நவீன அறிவியல் தற்போது ஆராய்ந்து உறுதிப்படுத்தியுள்ளது. தத்துவாசிரியர்களும், உளவியலாளர்களும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை சேதனம் அல்லது உணர்வு என்ற ஆற்றலின் அடிப்படையிலேயே செயல்படுகின்றன. பிராணன், ஸ்தூல உடலின் செயல்கள் அனைத்தும் இந்தசேதன உணர்வு ஆற்றலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன. இதுவே ஒருவனின் ஆளுமையில் உயிர்ப்பு, அமைதி, சிறப்பு என்பவற்றின் அடிப்படையாகும்.

ஒருவனது அகத்தில் காணப்படும் அதீத ஆசையும், அவன் ஏற்கனவே ஏற்படுத்திக் கொண்ட அனுபவங்களும் அவனது சங்கல்ப சக்தியால் தூண்டப்பட்டு மனதில் எண்ண அலைகளாகவும், மூளையில் இரசாயனத் தாக்கமாகவும், உடலில் செயலாகவும் வெளிப்படுகின்றன. இதனால் உடலினதும் மனதினதும் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் கூடிய செய்கைகளே, ஒருவன் நல்ல காரியமோ தீய காரியமோசெய்வதற்குரிய அடிப்படைகளாகவும் அதன் விளைவுகளைத் தீர்மானிக்கும் காரணிகளாகவும் அமைகின்றன. ஒருவனது அகப்பண்பிற்கும், உணர்ச்சிகளுக்கும், எண்ணங்களுக்கு அமைய, செயலின் விளைவு ஆபத்தாகவோ, பலனுடையதாகவோ நன்மையானதாகவோ அமைகிறது. சுருக்கமாக ஒருவனால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ செய்யப்படுகின்ற செயல்களின் விளைவுகள் அவனது சங்கல்ப சக்தியின் அவனது அகத்தில் ஆழத்தில் அவன் விரும்பும் உத்வேகத்தினதும், மன எண்ணத்தின் அடிப்படையிலுமே நடைபெறுகிறது.

ஒருவனது சங்கல்ப சக்தியின் ஆற்றலேஅவனது வாழ்வு உயர்வை நோக்கிச் செல்லப்போகிறதா, தாழ்வை நோக்கிச் செல்லப் போகிறதா என்பதைத் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணியாகும். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையைதான் விரும்பியபடி அமைக்கக் கூடிய வல்லமையையை இந்த சங்கல்ப சக்தி தருகிறது. குழுவாகச் சேர்ந்து செய்யப்படும் சங்கல்ப சக்தி மிகச் சக்தி வாய்ந்த புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்தி ஒரு நாட்டின் தலைவிதியையே மாற்றலாம். அப்படியான சங்கல்பம் தெய்வீக எண்ணத்தினைக் கொண்டதாக இருப்பின் அது அனைத்து உயிர்களும் மகிழ்வுடன் வாழும் ஒரு சுவர்க்கமயமான சூழலை உருவாக்கும். **(தொடரும்)**

மூலம்:
**பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா**
**தமிழில்: ஸ்ரீ ஸக்திசுமனன்**

## அறநெறி அறிவுநொடி

**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**



**18189) திங்கட்கிழமைகளில் சிவனுக்கு விரதம் இருந்து அவரை வழிபடுவது என்ன விரதம் என அழைக்கப்படுகிறது?**
"சோமவார விரதம்" எனப்படுகிறது.

**18190) சந்திர பகவானின் தன்மை கொண்ட எந்த கிழமை?**
திங்கட்கிழமை

**18191) திங்கட்கிழமையை வடமொழியில் என்னவென்று அழைக்கப்படுகிறது?**
சோமவாரம் என அழைக்கப்படுகிறது.

**18192) பொதுவாக திங்கட்கிழமை யாருக்குரிய தினம்?**
சிவனுக்கு

**18193) 16 திங்கட்கிழமைகள் சிவனுக்கு விரதம் இருந்து அவரை வழிபடுவது என்னவென்று அழைக்கப்படுகிறது?**
"16 சோமவார விரதம்" எனப்படுகிறது.

**18194) சோமவார விரதம் எப்படி இருக்க வேண்டும்?**
தொடர்ந்து வரும் 16 திங்கட்கிழமைகள் சிவனுக்கு விரதம் இருப்பது சிறப்பு. திங்கள் தோறும் அதிகாலையில் துயிலெழுந்து, வீட்டின் பூஜையறையில் தோறும் அளவில் இருக்கும் சிவலிங்கத்திற்கு பூக்கள் சூட்டி, உங்கள் நெற்றியில் திருநீறு பூசிக்கொள்ள வேண்டும்.

சர்க்கரை பொங்கல், பாயசம் போன்ற உணவுகளை படைத்து, சிவனுக்கு நைவேதியம் செய்து, சிவ மந்திரங்கள், சிவ புராணம் போன்றவற்றை படித்தால் வேண்டும்.

**18195) இந்த விரதம் மேற்கொள்பவர்கள் மூன்று வேலை ஏதும் சாப்பிடலாமா?**
உண்ணாமல் இருப்பது சிறப்பு என்றாலும், வேலை, தொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் மூன்று வேளையும் உப்பு சேர்க்காத உணவை சாப்பிடலாம் அல்லது பால், பழங்கள் உண்ணலாம்.

**18196) பின்பு மாலையில் என்ன செய்யலாம்?**
கோயிலுக்கு சென்று சிவனுக்கு பால் அபிஷேகம் மற்றும் அர்ச்சனை செய்து வழிபட்டு, வீடு திரும்பிய பின்பு சிவனுக்கு நைவேத்தியம் செய்த பிரசாதங்களை சாப்பிட்டு விரதம் முடிக்க வேண்டும்.

**18197) இந்த விரதம் இருப்பதால் ஏற்படும் நன்மை என்ன?**
16 சோமவார விரதம் மேற்கொள்ளும் திருமண வயதுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சீக்கிரத்தில் திருமணம் நடக்கும். திருமணமாகி பிரிந்து வாழும் தம்பதிகள் மீண்டும் ஒன்று சேர்ந்து வாழ தொடங்குவார்கள்.





கொரோனாத் தொற்று அதிகரித்து வந்த காலப்பகுதியிலும் கண்டி பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் சிறப்பாக நடந்தேறியது. உற்சவ கால நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: புசல்லாவை தினகரன் நிருபர் ம.நவநீதன்)

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 பெப்ரவரி 8
திங்கட்கிழமை





வடக்கு மாகாணத்துக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நயினாதீவுக்கு சென்று அங்கு நாகதீப விகாரையிலும் அதனைத் தொடர்ந்து நாகபூசணியம்மன் ஆலயத்திலும் வழிபாடுகளை மேற்கொண்டார். தொடர்ந்து நாகபூசணி வித்தியாலயத்துக்கு சென்று அங்குள்ள குறைபாடுகள் தொடர்பாக பாடசாலை அதிபருடன் கேட்டறிந்துகொண்டார்.

படங்கள்: வேலணை குறூப் நிருபர்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி நகரம் வரை

# வடக்கில் உணர்வெழுச்சியாக திரண்டெழுந்த தமிழ் மக்கள்






(படப்பிடிப்பு: கே.குமணன், ஐ.சிவசாந்தன்)

## விண்ணதிர கோஷம் எழுப்பி பொலிகண்டி நகரை சென்றடைந்த பேரணி




**யாழ்ப்பாணம் குறூப், யாழ்.விசேட நிருபர்கள்**

வடக்கு, கிழக்கில் கட்டமைக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் இன அழிப்புக்கு எதிராகவும் சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமையை வலியுறுத்தியும் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரணி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உணர்வெழுச்சியுடனான பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தை சென்றடைந்தது.

தந்தை செல்வா நினைவிடம், உலகத் தமிழர் ஆராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டோர் தூபி ஆகிய இடங்களில் அஞ்சலி செலுத்தி போராட்ட பேரணி யாழ்.பல்கலைக் கழகம், நல்லூர் தீயாக தீபம் திலிபன் நினைவிடம் என்பவற்றுக்கு சென்று தொடர்ந்து பொலிகண்டி நோக்கி சென்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகிற்கு வெளிப்படுத்தும் நோக்கில், வடக்கு, கிழக்கு சிவில், சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில், பல்வேறு அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் இப்பேரணி கடந்த புதன்கிழமை பொத்துவிலில் ஆரம்பமானது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஊடாக 4 ஆவது நாளான நேற்று முன்தினம் கிளிநொச்சியை வந்தடைந்தது. தொடர்ந்து நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், நல்லூர் தியாக தீபம் நினைவுத் தூபி, நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றல் ஊடாக பேரணி பருத்தித்துறை வீதி ஊடாக வடமராட்சி மண்ணைச் சென்றடைந்தது. இப்போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களும் ஒன்றிணைந்து பேரெழுச்சியுடன் தமது வாழ்வுரிமையை சர்வதேச சமூகத்துக்கு ஒரே குரலில் எடுத்துரைக்கின்றமை சிறப்பு அம்சமாகும். பொலிசாரின் தடைகளையும் மீறி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# நீர்ப்பாசன திட்டங்களை விரிவுபடுத்தி விளை நிலங்கள் அதிகரிக்கப்படும்

வட மாகாண ஆளுநர் சாள்ஸ் தெரிவிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

நீர்ப்பாசன திட்டங்களை ஏற்படுத்தி விளை நிலங்களை அதிகரிக்கும் பல்வேறு செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர், குளம் புனரமைப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்துவிட்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு மேலும் கூறுகையில்,

நாட்டின் தேசிய உற்பத்திக்கு ஊக்கமளிக்கின்ற சிந்தனையின் வெளிப்பாடாக இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடு இது. இதற்கு முதல் அரிசியை பெருமளவில் இறக்குமதி செய்திருந்த நிலமையையும் நாம் கண்டிருக்கிறோம்.



அந்தவகையில் விவசாயப் புரட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமே இது. தற்போது மாகாண விவசாய திணைக்களத்திலே ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எமக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதனை செய்து வருகிறோம்.

இதன் மூலம் விவசாய திணைக்களத்தின் சேவைகள் மேலும் மேம்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதேவேளை விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்வனவு செய்வதற்காக பல நோக்கு கூட்டுறவு சங்கங்களிற்கு 20 மில்லியன் ரூபாயை விடுவித்துள்ளேன். அத்துடன் மேலும் நெல்லினை கொள்வனவு செய்வதற்காக 4 வீத வட்டியிலே பணத்தினை விடுவிப்பதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதனுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் வடக்கிலே அதனை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளார். இவ்வாறு நீர்ப்பாசனம் மட்டுமல்லாமால் விவசாயம், விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக மாகாண நிர்வாகமும் மத்திய அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டிருக்கிறோம். எனவே இவற்றை முழுமையாக பயன்படுத்தி அதன் பயனை அடையவேண்டும் என்றார்.

# தடுப்புச் சுவர்களை தகர்த்து உறவுப் பாலம் அமைப்போம்

யாழில் அமைச்சர் பீரிஸ்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



நாட்டில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள தடைகள் மற்றும் தடுப்புச் சுவர்களைத் தகர்த்தெறிந்து உறவுப் பாலத்தை அமைப்போம் என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

மேலும் அங்கு கூறுகையில்,

இலங்கை அரசாங்கம் எந்தவிதமான பாகுபாடுமின்றி கல்வி மற்றும் விவசாயத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தீர்மானித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியன உள்ளன. கிளிநொச்சியின் அபரிமிதமான வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளோம் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு. ஜனாதிபதியின் தொலைநோக்கு எந்தவிதமான பாகுபாடும் இன்றி கல்வித்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே. நாங்கள் உங்களோடு சேர்ந்து நடப்போம். ஒவ்வொரு அடியும் சேர்ந்து வைப்போம்.

எமது அடிப்படைச் சிக்கல் எதுவென ஆராய்ந்தால் நாங்கள் தடுப்புச் சுவர்களை அமைத்துக் கொள்கிறோம். ஒருவரோடு ஒருவர் உறவு கொள்வதற்கான பாலத்தை அமைக்கத் தவறுகிறோம். அதற்கு அடிப்படையாக மொழிப் பிரச்சினை இருக்கக்கூடும். மொழியைக் கடந்து உறவை வளர்ப்போம். மொழி ஒரு சிக்கலாக இருந்தாலும் அன்பு வழியில் வளருவோம் என்றார்.

# முள்ளிவாய்க்கால் மண் பல்கலையில்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்ட பேரணியினர் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் எடுத்து வந்த மண்ணை, யாழ்.பல்கலை மாணவர்களிடம் கையளித்தனர்.

நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இப் பேரணி, யாழ்.பல்கலைகழகத்துக்கும் சென்றனர். அங்கு பல்கலை முதல்வரால் இடித்தழிக்கப்பட்டு பின்னர் மீண்டும் அமைக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்காக இம் மண் பல்கலை மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.




# நாவலப்பிட்டியில் 15 மாணவர்கள் உட்பட 22 பேருக்கு கொரோனா

## தொற்றாளர்களோடு தொடர்பினை பேணிய 112 பேருக்கு பி.சி.ஆர்





நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நாவலபிட்டி பஸ்பாகே கோரளை பொது சுகாதார பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி வெஸ்டோல் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 07 மற்றும் தரம் 11 இல் கல்வி பயிலும் 15 மாணவர்கள், ஒரு ஆசிரியை மற்றும் நாவலப்பிட்டி பஸ்பாகே கோரளை பொது சுகாதார காரியாலயத்தில் பணிபுரியும் ஆறு பேர் உட்பட 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பஸ்பாகே கோரளை பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று 07 வெளியான பி.சி.ஆர் அறிக்கையின் ஊடாக மேற்குறிப்பிட்ட 22 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை குறித்த தொற்றாளர்களோடு தொடர்பினை பேணிவந்த 112 பேருக்கு நேற்றைய தினம் பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொண்டு மாதிரிகள் பெறப்பட்டுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தொற்றுக்கு உள்ளான 22 பேரையும் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையினை பொது சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

# வயோதிப பெண்ணின் விரலை வெட்டி மோதிரம் கொள்ளை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

83 வயதுடைய வயோதிப பெண்ணின் கைவிரலை வெட்டித் தங்க மோதிரம் ஒன்றை அபகரித்துச் சென்ற சம்பவமொன்று பலாங்கொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

பலாங்கொடை எல்லெபொல பகுதியில் தனிமையில் வாழ்ந்து வந்த இப்பெண்ணின் வீட்டினுள் இரவில் நுழைந்த இரண்டு சந்தேக நபர்கள் இக்கைங்கரியத்தை செய்துள்ளனர்.

பெண்ணின் மோதிரம் கழன்று வரும் வரை கைவிரலை வெட்டி பெண்ணை சித்திரவதை செய்துள்ள கொள்ளையர்கள், மோதிரம் கழன்றதுடன் கொள்ளைக்காக எடுத்து வந்த வாள், கத்தி ஆகியவற்றை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இப்பொருட்கள் விசாரணைகளின் போது நீதிமன்ற தடயப் பொருட்களாக பயன்படுத்தப்படும் எனவும் சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைவிரலில் வெட்டுக்காயம் ஏற்பட்ட வயோதிப பெண் படுகாயமடைந்த நிலையில் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத் தப்பட்டுள்ளார்.

# கொரோனா தொற்றாளர் ஒருவர் மரணம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

பொகவந்தலாவ கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா தொற்றாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் .

கல்லுமலை, ஹப்புகஸ்தலாவ வீதி நாவலப்பிட்டி பகுதியை சேர்ந்த 78 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான வை.எல்.பி.முபாரக் என்பவரை உயிரிழந்தவராவார்.

திடீர் சுகவீனமுற்ற குறித்த நபர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி நாவலபிட்டி வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டு குறித்த நபருக்கு வைத்தியசாலையில் வைத்து அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

சடலம் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# உலக முடிவை பார்க்க சென்றவரை காணவில்லை

லுணுகல நிருபர்

மடுல்சீமை பிட்டமாறுவ பகுதியில் உலக முடிவைப்பார்க்க சென்ற 12 பேர் அடங்கிய சுற்றுலா குழுவினரில் ஒருவர் நேற்றுமுன்தினம் (06) உலக முடிவின் பள்ளத்தாக்கில் தவறி விழுந்து காணமல் போயுள்ளார்.

நேற்று முன்தினமிரவு அப்பகுதியில் முகாமிட்ட இக்குழுவினர், பள்ளத்தாக்கில் விழுந்தவரை தேடும் பணியில் இராவணத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மடுல்சீமை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கை, சீனா ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான சீனா நட்புறவு அறக்கட்டளை ' அறம் ' கல்வி சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான கொவிட் 19 கொரோனா தொற்று பாதுகாப்பிற்கான முகக்கவசங்கள் வழங்கும் நிகழ்வு நுவரெலியா பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது. படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

# பொகவந்தலாவ தோட்டப்பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

பொகவந்தலாவ சீனாகலை, பூசாரி தோட்டபகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை மாலை வெளியான பி.சீ.ஆர் அறிக்கையின் ஊடாக மேற்படி இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதாக பொது சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தொற்று உறுதி செய்யப்பட்ட குடும்பத்தில் உள்ள நபர் ஒருவரை சுகயீனம் காரணமாக பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 31ஆம் திகதி அன்டிஜன் பரிசோதனையின் ஊடாக குறித்த நபருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார்.

உயிரிழந்த நபரோடு தொடர்பினை பேணிவந்த அவரின் மனைவி மற்றும் அவருடைய மகனுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு பேருக்கும் 01.02.2021. திங்கட்கிழமை பி.சீ. ஆர் பரிசேதனை மேற்கொள்ளப் பட்டிருந்தது இதேவேளை தொற்றுக்கு உள்ளானவர்களின் ஒருவர் பொகவந்தலாவை சென்மேரீஸ் மத்திய கல்லூரியின் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

பொகவந்தலாவ சென்மேரிஸ் மத்திய கல்லூரியினை மூடுவதா அல்லது மாற்று நடவடிக்கையினை மேற்கொள்வதா? என்பது தொடர்பில் கல்லூரியின் நிர்வாகத்தோடு கலந்துரையாடி வருவதாக பொது சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, தொற்றுக்குள்ளான இருவரையும் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.


# தரம் உயர்த்தப்பட்ட இரத்தினபுரி வைத்தியசாலைக்கு விசேட வசதிகள்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் முயற்சியால் போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட இரத்தினபுரி வைத்தியசாலை சப்ரகமுவ மாகாணத்தில் சகல வசதிகளையும் வழங்கக்கூடிய ஒரே அரச வைத்தியசாலையாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

விசேட வைத்திய ஆலோசகர் ஒருவரின் தலைமையில் தாதியர் உத்தியோகத்தர்களைக் கொண்ட பூரண செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க இந்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவு, இருதய நோய், சிறுவர், மாதர் விசேட சிகிச்சை பிரிவுகள், புற்றுநோய், சுவாச நோய் உட்பட பல நோய்களுக்கான நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய செயற்கை சுவாசம் வழங்கும் உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.



மூன்று வைத்திய நிபுணர்கள், ஒரு வைத்திய ஆலோசகர், தாதியர்கள், சிற்றூழியர்கள் என 24 மணித்தியாலங்களும் சேவைகளை வழங்கக்கூடிய வசதி வாய்ப்புகளை பெற்ற வைத்தியசாலையாக இரத்தினபுரி அரச வைத்தியசாலை வளர்ச்சியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தேயிலைத்தளிர் பையுடன் கால் இடறிவிழுந்த தொழிலாளி மரணம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை மாப்பாகல பெருந்தோட்டப்பிரிவு தொழிலாளியான லெச்சுமனன் இராஜேந்திரன் என்ற 56 வயது நபர் கடமையில் இருந்தவாறே கால் இடறி விழுந்து இறந்துள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி தொழிலாளி வழமைப் போன்று தோட்டத்தின் '07' ஆம் இலக்க ஏ பிரிவில் புளக்மலை என்ற தேயிலை மலையில் தேயிலைத் தளிர் கொய்யும் கடமையிலிருந்த வேளையிலேயே மரணமாகியுள்ளார். இவர் கொய்த தேயிலைத்தளிர் நிரப்பப்பட்ட

பையும் அவரது கரங்களில் இருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது. குறைந்தளவு தொழிலாளர்களே தேயிலைத்தளிர் கொய்யும் கடமைகளில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் தொழிலாளர்கள் தொழில் கடமைகளில் ஈடுபடும் முன் தொழிலாளர்கள் எங்கெங்கு வேலை செய்கின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் கடமைகள் எவை என்றும் தோட்டக்கள உத்தியோகஸ்த்தர் பதிவு செய்வார். ஆனால் இத்தொழிலாளி கடமைக்கு சென்று மீளத்திரும்பாதது குறித்து, தோட்டக்கள உத்தியோகஸ்த்தரோ தோட்ட நிருவாகமோ கருத்திற்கொள்ளவில்லை. தோட்ட நிருவாகம் இம்மரணத்திற்கு பதில் கூற வேண்டும் என தொழிலாளர்கள் பலரும் கருத்துக்களை தெரிவித்தனர்.

தொழிலாளி வீடு திரும்பாததால் அவரது குடும்பத்தினர் குறிப்பிட்ட தேயிலை மலைக்குச்சென்று தேடிய போது தான் கொய்த தேயிலைத்தளிர் பையுடன் இறந்து கிடப்பதைக் கண்டனர்.

இது தொடர்பான விசாரணைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# இளைஞர், யுவதிகளுக்கு பல்நோக்கு அபிவிருத்தி மூலம் நடவடிக்கை

பலாங்கொடை தினகரன் நிருபர்

உயர்கல்வி பெறுவதற்கு தகைமை பெறாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கு பல்நோக்கு அ பிவிருத்தி செயலணி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு இரத்தினபுரி மாவட்டத்துக்குரிய காரியாலயம் இரத்தினபுரி மாவட்ட செயலக காரியாலய வளவில் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொகுபோதா க மவின் தலைமையில் இராணுவத்தினரால் திறந்து வைக்கப்பட்டது.

இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்ட பின் அவர்களை அரசாங்க சேவையில் பணியாற்ற ஈடுபடுத்தப்பட உள்ளனர். அதேசமயம் இவர்களுக்கு வாராந்த சம்பளமும் வழங்கப்பட உள்ளன.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் சப்ரகமுவ மாகாணப் பணிப்பாளராக கமாண்டர் கே. ஜி. என். பி. செனவிரத்ன பணியாற்றுகின்றார். பிரதிப் பணிப்பாளராக மேஜர் கே. ஐ.எஸ்.என். வித்தான கடமையாற்றுகின்றார்.





மாத்தளை கொவுடுபெலல்ல கலைமகள் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் அதன் வெளி நாடுகளில் பணிபுரியும் அங்கத்தினரின் ஆதரவோடு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபத்தினை திறந்து வைத்து கையளிக்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், சங்கத்தின் செயளாலர் ஆர். புனிதமலர் நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்து வைத்தார். வலயக் கல்விப் பணிமனையின் கோட்ட கல்வி பணிப்பாளர் பிபி மனோகரன்,உதவிக் கல்விப் பணிப்பாளர் எச்.இ.மொனிகா கோமஸ், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். சிவஞானம் ஆகியோருடன் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள் எம்.கே.எம்.அஸ்வர்)

# முகாமையாளருக்கு கொரோனா தொற்று

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை பெலிஹுல்ஓயா உல்லாச பயணிகள் சஞ்சரிக்கும் பிரதேசத்தில் ஹோட்டல் முகாமையாளர் ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதையடுத்து அந்த ஹோட்டல் மூடப்பட்டதாக பெலிஹுல்ஓய பொது சுகாதார காரியாலய உத்தியோகத்தர்கள் நேற்று தெரிவித்தனர்.

உல்லாச பயணிகள் வந்து செல்லும் எழில்மிகு இப் பிரதேசத்தில் முதல் முறையாக இக்கொரோனா நோயாளர் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் நடத்தப்பட்ட அன்டிஜன் வைத்திய பரிசோதனையயடுத்து அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# கிழக்கின் குரல்



# திருக்கோவிலில் பாரம்பரிய முறையில் நெல் அறுவடை

அரசாங்க அதிபர் பிரதம அதிதி





**திருக்கோவில் தினகரன், காரைதீவு குறூப் நிருபர்கள்**

திருக்கோவில் பிரதேசத்தில் சேனைக்காடு விவசாய கண்டத்தில் ஹெலசுவய நிறுவனமும் தம்பிலுவில் கமநல சேவைத் திணைக்களமும் இணைந்து மேற்கொண்ட நெற்செய்கை அறுவடை விழா தமிழர்களின் பாரம்பரிய முறையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் சேனைக்காடு விவசாயக் கண்டத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர்.

அதிதிகளுக்கு மாலை அணிவித்து பாரம்பரிய முறையில் வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றப்பட்டு நெல் அறுவடை விழா ஆரம்பமானது.

இதனைத் தொடர்ந்து விநாயகபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆறுமுக கிருபாகர சர்மாவினால் சூரிய பகவானுக்கு பூஜைகள் இடம்பெற்றன .இதனைத் தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கா சம்பிரதாய ரீதியாக நெல் அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ,திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் மற்றும் அதிதிகள் நெல் அறுவடையில் கலந்து கொண்டனர்.

இவ் விழாவில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கா, மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலை வெருகலில் மர நடுகை நிகழ்வு



**தம்பலகமம் , திருகோணமலை மாவட்ட விசேட நிருபர்கள்**

திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் கல்லடி கிராமத்தில் 1000 சவுக்கு மரங்கள் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தலைமையில் நடைபெற்றது.

இதன் மூலம் பிரதேசத்தில் ஏற்படக்கூடிய கரையோர அனர்த்தத்தை குறைக்க ஏதுவாக அமையும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் வெருகல் பிரதேச செயலகம் என்பன இணைந்து இச் செயற்பாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் வெருகல் பிரதேச செயலாளர் கே.குணனாதன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ், சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் வட கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் டி.சிறீபதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுமார் ஒரு ஏக்கர் கடற்கரைப் பிரதேசம் சுற்றுவேலி அமைக்கப்பட்டு அங்கு மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

**றொட்டவெவ குரூப் நிருபர்**

கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முக்கிரியாவ பகுதியில் காட்டு யானையின் தாக்குதலினால் நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றிரவு (06) 11.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் ஹொரவ்பொத்தானை கரடிக்குளம் பகுதியைச் சேர்ந்த சாகுல் ஹமீட் சௌபர் (43 வயது) எனவும் தெரிய வருகின்றது. சம்பவம் குறித்து தெரியவருவதாவது, முக்கிரியாவ பகுதியில் வயல் காவலுக்காக இரண்டு பேர் சென்று உயரமான குடிசையில் தூங்கிக் கொண்டிருந்த போது, யானை உறங்கிக்கொண்டிருந்த நபரை இழுத்து வீசியதாகவும் மற்றையவர் தப்பிச் சென்றதாகவும் தெரிய வருகின்றது.

# காத்தான்குடியில் முடக்கப்பட்டுள்ள பகுதிகளை விடுவிக்க பரிந்துரை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடியில் முடக்கப்பட்டுள்ள பத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் விடுவிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் என்.மயூரன் தெரிவித்தார்.

நான்கு வீதிகளை தவிர ஏனைய அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் விடுவிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 4 வீதிகளை மாத்திரம் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவு கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதி தனிமைப்படுத்தப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்று கொவிட் தொற்று ஆபத்து மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 4 வீதிகளைத் தவிர அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் விடுவிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவில் இது வரை 243 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், இவர்களில் 217 பேர் குணமடைந்து வீடு சென்றுள்ளனர். 23 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 3 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் டொக்டர் மயூரன் மேலும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அதி நவீன லேசர் சத்திர சிகிச்சை

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அதி நவீன லேசர் சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம். ஜவாஹிர் தெரிவித்தார்.

வெரிகோஸ் வெயின்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பகுதியில் வலி மற்றும் வீக்கத்துடன் கூடிய எரிச்சல் மற்றும் புண் ஏற்படக்கூடிய நோயாளிகளுக்கு இரத்த உறைவு மற்றும் டீப் வெயின் துரோம்போசிஸ் போன்றநோய்களுக்கு சரியான நேரத்திற்கான சிகிச்சை இன்றியமையாததாகும் என்றார். பொதுவாக அறுவை சிகிச்சை மூலமே இச்சத்திர சிகிச்சை நடைபெறுகிறது. ஆனால் இவ் வைத்தியசாலையில் லேசர் மூலம் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இச் சத்திர சிகிச்சை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த லேசர் சத்திர சிகிச்சையை தனியார் வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்வதாக இருந்தால் பல இலட்சங்களை செலவு செய்ய வேண்டி வரும் என்றார்.

சத்திர சிகிச்சை நிபுணர்களான டொக்டர் பீ.கே.இரவீந்திரன் மற்றும் டொக்டர் எஸ்.எஸ்.ஜமீல் ஆகியோரினால் முதலாவது லேசர் சத்திரசிகிச்சை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் வைத்தியசாலையை பொறுத்தவரையில் எவ்வித தடைகளுமின்றி தொடர்ச்சியாக பல்வேறு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்துவதோடு, புதிய சேவைகளையும் எதிர்காலத்தில் மக்களுக்கு வழங்குவதற்கு முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# யானைகளால் பயிர்கள் அழிவு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் ஆற்றங்கரையோர எல்லைப் பிரதேசத்திற்கு உட்பட்ட இறால்குழி, உப்புக்காச்சிமடு, சந்தனவெட்டை மற்றும் வேதத்தீவு போன்ற கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி பயிரினங்கள் மற்றும் தென்னை என்பவற்றை யானைகள் பெரிதும் அழித்து வருவதாக தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகள் நன்னி, கங்கை, சந்தனவெட்டை, முதலைமடு போன்ற அயல் ஆற்றங்கரையை அண்டியதாக உள்ள காட்டுப் பகுதியில் இருந்து இரவானதும் ஆற்றைக் கடந்து தோட்டக் கிராமங்களுக்குள் பிரவேசித்து நாசப்படுத்தி வருவதாக தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# காத்தான்குடி கதீப்மார், இமாம்கள் சம்மேளனத்தால் நாட்காட்டி வெளியீடு

**புதிய காத்தான்குடி விசேட நிருபர்**

காத்தான்குடி கதீப்மார், இமாம்கள் சம்மேளனத்தின் 25 வருட நிறைவை முன்னிட்டு வெள்ளி விழா கொண்டாட்ட வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கதீப்மார், இமாம்கள் சமூகத்தின் அச்சாணியாக இருந்து இறை பணியாற்றி வருகின்றனர்.

இவர்களின் குடும்ப வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் காத்தான்குடி கதீப்மார், இமாம்கள் சம்மேளனம் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது.

இதன் 25 வருட நிறைவை முன்னிட்டு ஞாபகார்த்த வெளியீடாக 2021 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் வெளியீட்டு வைபவம் காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பரின் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கதீப்மார், இமாம்கள் சம்மேளன தலைவர் மௌலவி ஏ.எல். ஆதம் லெப்பை பலாஹி, மூத்த துணைத் தலைவர் மௌலவி ஏ.ஜி.எம். அமீன் பலாஹி, சம்மேளன செயலாளர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா பலாஹி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பிறைக் கலண்டர் மஸ்ஜித்கள் சமய, சமூக நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

# நெல்லை கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் தற்போது நெல் அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில், விளைச்சல் குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் கந்தளாய், கிண்ணியா, முள்ளிப்பொத்தானை, தம்பலாகாமம், சூரியபுர, வட்டுக்கச்சி மற்றும் ஜயந்திபுர போன்ற பகுதிகளில் அறுவடை செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் கந்தளாய் குளத்தில் வான் கதவுகள் திறந்துள்ளமையால் அறுவடைக்கு தயாராக இருந்த வேளாண்மைகள் அழிவடைந்துள்ளதாகவும், தற்போது ஒரு ஏக்கருக்கு இருபது மூடைகள் தான் விளைச்சல் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



நீர்ப்பாசன செழுமை வேலைத் திட்டத்தின் திருகோணமலை மாவட்ட பிரதான நிகழ்வு நேற்றுமுன்தினம் (06) சேருவாவில மங்கள வெவயில் நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள இக்குளத்தின் நிர்மாண வேலைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். படம்;முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்



சம்மாந்துறை ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் கி.செல்வராசாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அவரது பாரியார், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலெட்சுமி செல்வராசா மற்றும் வலயத்தில் உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. படம்;மணல்சேனை நிருபர்

# பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் முகமாக அட்டாளைச்சேனையில் மர நடுகை நிகழ்வு

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரபினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத் திட்டம் நேற்று அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

லக்கி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இம்மரம் நடுகை நிகழ்வில், கழகத்தின் தலைவரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ், பொருளாளர் யு.எல்.முனாப், அமைப்பாளர் எம்.எல்.அன்சார், மௌலானான பேக்கரி உரிமையாளர் தையுப் மற்றும் கழக அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், மரங்களை நட்டு வைத்தனர்.



'மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடத்திற்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இவ்வேலைத் திட்டம் பொத்துவில் பிரதேசத்தில் கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரபினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

வீடுகள், பொது இடங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள்,வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# கடலுணவுகளை கொண்டு செல்ல புகையிரதத்தில் குளிரூட்டி வசதி

## அமைச்சரவையில் பிரஸ்தாபிப்பதாக டக்ளஸ் தெரிவிப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்லும் புகையிரதத்தில் கடலுணவுகளை கொண்டு செல்வதற்கான குளிரூட்டி பெட்டியை இணைப்பது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில், நீர் வேளாண்மை தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளக் கூடிய வேலைத் திட்டங்கள் மற்றும் புரெவிப் புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது பொருளியல் ஆய்வாளர் அகிலன் கதிர்காமநாதனால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

கடலுணவுகளை ஏற்றுவதற்கான குளிரூட்டிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. குளிரூட்டி வசதியை புகையிரதத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடப்படும்.

அதேபோன்று கடற்றொழிலாளர் சங்கங்கள் இரண்டு இருப்பதனால் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இரண்டு அமைப்புக்களையும் இணைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம்.



மேலும் கிராமிய கடன் திட்டம் தொடர்பாக பொருளியல் ஆய்வாளர் கலாநிதி அகிலன் போன்றவர்களுடன் கலந்துரையாடி சிறந்த பொறிமுறையை நடைமுறைப் படுத்துவோம் என்றார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினருடன் ஆனந்தசங்கரி பேச்சு



பரந்தன் குறூப் நிருபர்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி கிளிநொச்சியில் போராட்டம் நடத்தி வரும் மக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி சந்தித்து கலந்துரையாடினார். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக நடைபெற்று வரும் இப் போராட்ட இடத்துக்கு நேரில் சென்று அம் மக்களை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது அவர்களை முன்வைத்த பிரச்சினைகளை கவனமாக செவிமடுத்த அவர் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் அறிவுறுத்தினார்.

# பெருந்தோட்ட கம்பணிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு சந்தரப்பம்

## பா.உறுப்பினர் ரமேஸ்வரன் தெரிவிப்பு

ஹட்டன் விசேட நிருபர்.

1000 ரூபா சம்பள உயர்வு கோரி மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்க நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளருமான எம். ரமேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தோட்டத் தொழிலாளர்களின் அடையாள வேலை நிறுத்தப் போரட்டத்திற்கு அனைத்து பிரிவினர்களும் ஆதரவு வழங்கியுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் உள்ள நகரங்களில் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி நுவரெலியா மாவட்டத்திற்கு வெளியிலும் இந்த போராட்டம் கண்டி, மாத்தளை, கேகாலை, பதுளை, களுத்துறை உள்ளிட்ட பல மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பொலிசார் மூவருக்கு கொரோனா

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. வவுனியா பயங்கரவாத தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என 20ற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்றிருக்கின்றமை அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து வவுனியாவில் கடமையாற்றும் பல பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அவை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் மேலும் 3 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

# விவசாயிகளுக்கு வலுச் சேர்ப்பதே எமது பணி



நாடு பூராகவும் பரந்து விரிந்து கிடக்கின்ற ஆறுகள், குளங்கள், கால்வாய்களை சீரமைப்பதன் மூலம் அத்துறை சார்ந்த செயற்றிட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைக்கு கொண்டு வந்து நாடெங்கும் சௌபாக்கியத்தையும், செழுமையையும் உண்டாக்குவதே எமது பணியாகும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா பெரிய தம்பனை ஆலடிக் குளம் புனரமைப்பு அங்குராப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் உரையாற்றுகையில்,

தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்ற போது அதன் பெரும்பாகம் விவசாயம், நீர்ப்பாசனம், நீர் மின்வலு துறைகளின் பங்களிப்பு ஆகிய வெற்றிகரமான செயற்றிட்டங்கள் மூலம் கிடைக்க பெறுகின்றன.

இதற்காக நாடு பூராகவும் பரந்து விரிந்து கிடக்கின்ற ஆறுகள், குளங்கள், கால்வாய்களை சீரமைப்பதன் மூலம் அத்துறை சார்ந்த செயற்றிட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலம் நாடெங்கும் சௌபாக்கியத்தையும், செழுமையையும் உண்டாக்குவதே எமது பணியாகும். இதன் மூலம் எமது நாட்டின் முதுகெலும்பாக செயற்படுகின்ற விவசாயிகளுக்கு வலுச் சேர்ப்பதே இதன் பின்னணியாகும் என்றார்.


மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

**மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்மாண பிரிவிற்கான வெற்றிடங்கள்**

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நிர்மாணப் பிரிவில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொறியியலாளர் (சிவில்) - 01 பதவி**

- ஆட்சேர்க்கப்படும் வகுப்பு: (ஒப்பந்த அடிப்படையில்)
- சம்பளம் - பேசித் தீர்த்துக்கொள்ளலாம்
- ஆரம்பத்தில் ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு ஆட்சேர்க்கப்படுவர். தேவைப்பாட்டின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படலாம்.
- தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் நிர்மாணத் துறையில் குறைந்தபட்சம் 15 வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இதில் 10 வருட காலம் கட்டிட நிர்மாணத்துறையில் சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) - 01 பதவி**

- ஆட்சேர்க்கப்படும் வகுப்பு: (ஒப்பந்த அடிப்படையில்)
- சம்பளம் - 45,000.00
- ஆரம்பத்தில் ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு ஆட்சேர்க்கப்படுவர். தேவைப்பாட்டின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படலாம்.
- தகைமைகள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் NDT (சிவில்) / NCT (சிவில் - முழு நேரம்) தேர்ச்சி மட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

அளவுப்பத்திரத்தைத் தயாரித்தல், கட்டமைப்பு திட்ட வரைபடம் தொடர்பான புரிந்துணர்வு, அளந்து மட்டப்படுத்தல் உட்பட கட்டிட நிர்மாணத் துறையில் குறைந்தபட்சம் 15 வருட சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**பொது நிபந்தனைகள்:**

I. இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்.
II. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு மத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
VI. அரச அல்லது நியதிகள் சட்டச்சபையில் கடமையாற்றுபவராயின் நிறுவனத்தின் தலைவரினூடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
V. மத்திய மாகாணத்தில் வதியும் விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.
VI. நிர்மாணப் பிரிவின் கீழ் தற்போது செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்காக நீங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவீர் என்பதுடன் அந்தச் செயற்றிட்டங்கள் நிறைவடைந்தவுடன் உங்கள் ஒப்பந்த சேவைக்காலமும் நிறைவுறும்.

சேர்த்துக் கொள்ளப்படும் முறை – கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

மேற்காணும் தகைமைகளை உள்ளடக்கி விண்ணப்பதாரர்களால் தயாரித்துக் கொள்ளப்பட்ட சுயதரவு விபர ஆவணங்களை 2021-02-22ஆம் திகதிக்கு முன் பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

**பொது முகாமையாளர் / செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**மத்திய மாகாணம்.**
**தொலைபேசி: 081-2201378**



**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்**

**சுற்றுலாத்துறை அமைச்சு**

சுற்றுலா மற்றும் ஏற்பாட்டியல் துறைகளில் மனிதவள மேம்பாட்டுக்கான கல்வியை வழங்கும் இலங்கையின் முதன்மை நிறுவனமே இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

**வெற்றிடம்**

**பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வித் துறைசார்)**

SLITHM இன் கொழும்பு மற்றும் ஏனைய மாகாண வளாகங்களில் கல்விசார் நடவடிக்கைகளுக்கு பிரதிப் பணிப்பாளர் நாயகமே (கல்வித் துறைசார்) பொறுப்பாகவிருப்பார். SLITHM இன் சகல கல்விசார் நடவடிக்கைகளிலும், அதன் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுகையிலும் பணிப்பாளர் நாயகம் / பிரதம நிறைவேற்றதிகாரி, தலைவர், முகாமைத்துவ சபையினர் ஆகியோருக்கு பொறுப்புச் சொல்பவராகவும், இருப்பார்.

**தகைமைகளும் அனுபவமும்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தான பொருளாதாரம் / நிர்வாகம் / சுற்றுலா கல்வி போன்ற துறைகளிலான இளங்கலை பட்டம்.

**உடன்**

வணிக நிர்வாகம் / சுற்றுலா / பொருளாதாரம் / மேலாண்மை போன்ற துறைகளிலான பட்டமேற்படிப்பு (முதுநிலை) தகைமைகள்

**அத்துடன்**

பொது, கூட்டாண்மை நிறுவனம் அல்லது நியதிச் சபையில், அல்லது பிரபலமான தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" 18 வருடங்கள் பணியாற்றிய அனுபவம்.

**அல்லது**

2. வணிக நிர்வாகம் / சுற்றுலா / பொருளாதாரம் / மேலாண்மை ஆகியவற்றில் முதுகலை உடன் SLITHM இன் முழு பட்டதாரி.

**அத்துடன்**

பொது, கூட்டாண்மை நிறுவனம் அல்லது நியதிச் சபையில், அல்லது பிரபலமான தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" 20 வருடங்கள் பணியாற்றிய அனுபவம்.

**வயது:**
35 க்கும் 55 வயதுக்குமிடைப்பட்டவராயிருத்தல்.

**சம்பளம்:**
சம்பள அளவுத் திட்டம்: HM 1-3 பிரிவு ரூ. (86, 865/= - 15 x 2,270/= - 120,915/=)

ஆரம்ப சம்பளப் படிநிலை: 86,865/= + முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருப இல. 02/2016 இத்துக்கமைய, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும். ஒவ்வொரு மாதத்துக்கும் வாகனக் கொடுப்பனவுக்காக ரூ 50,000/= உம், 120 லீற்றர் பெற்றோலும், தொழில்முறை கொடுப்பனவாக ரூ 3,000/= உம், தொலைபேசி கொடுப்பனவாக ரூ 5,000/= உம் வழங்கப்படும்.

**பொதுத் தகவல்கள்:**

**ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கான பங்களிப்பு**

- ஊசேநி - அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் 10% பங்களிப்பினையும் தொழில்தருனர் 15 % பங்களிப்பினையும் வழங்குவார்.
- ஊநநி - அடிப்படைச் சம்பளத்தில் தொழில்தருனர் 3% பங்களிப்பினை வழங்குவார்.
- ஊழியருக்கும் அவர் / அவளது குடும்பத்தவர்களுக்கும் கவர்ச்சிகரமான சுகாதர மருத்துவ காப்புறுதி காப்பீடு

கல்விசார் தகைமைகள், வேலை அனுபவம் போன்றவை தொடர்பான அனைத்து சான்றிதழ் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத சிபாரிசுதாரர்கள் இருவரினது பெயர்களுடன் முழு விபரங்களைக் கொண்ட சுய விபரக் கோவையை, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியைக் குறிப்பிட்டு, பதிவுத் தபால் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு **2021 பெப்ரவரி 19ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்**
**இல 78, காலி வீதி, கொழும்பு 03.**

**விசாரணை:- 0112 208 360**



**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**2021 பெப்ரவரி 10ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 40,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09121E146 | LKA18221H138 | LKA36422B117*** | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 7,000 | 5,000 | 28,000 | 40,000 |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் ** | | | 5.05 | |

ஏல விற்பனைத் திகதி : 2021 பெப்ரவரி 10
தீர்ப்பனவுத் திகதி : 2021 பெப்ரவரி 12
வழங்கப்படும் திகதி : 2021 பெப்ரவரி 12
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2021 பெப்ரவரி 10, செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்
** 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்வுகளின் விளைவு வீதங்கள் ஏலத்தில் 364 நாள் முதிர்வினைக் கொண்ட மட்டத்திற்கு கீழ் தீர்மானிக்கப்படும்.
*** வங்கி விடுமுறை நாளொன்றில் முதிர்ச்சி வருகின்றவிடத்து திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளுக்கு புதிய விடுமுறை விதிமுறை ஏற்புடையதாகும் அதாவது 2022 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும், கொடுப்பனவுகள், உடனடியாகத் தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்**
**பொதுப்படுகடன் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## அற்றோணி தத்துவத்தை இரத்து செய்தல்

அவுஸ்திரேலியா, முரும்பீனா VIC 3136, பிரிஸ்பேன் வீதி, இல. 1/23 இல் வசிக்கும் ஷியாமினி வஜிரபிரபா விக்ரமரத்ன கன்கந்த (கடவுச் சீட்டிலக்கம் N 6158302) ஆகிய நான் கொழும்பு 05, பூர்வாராம வீதி, இல. 86 இல் வசித்த தற்போது கண்டி, குருதெனிய, இலுக்மோதர, இல. 294 இல் வசிக்கும் மாலதி பத்திரென்னஹலாகே சிந்ரா பெரேரா கன்கந்த (தேசிய அடையாள அட்டை இல. 545563754 V) இற்கு வழங்கிய நுகேகொட, தெல்கந்த மேல்மாகாண வலய அலுவலகத்தில் 2017 ஜூலை 07ஆம் திகதி 3637ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் 2017 மே மாதம் 25ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் சட்ட ஆலோசகர் மற்றும் வழக்கறிஞரான மது வர்ணகுலசூரிய அவர்களின் முன் அவுஸ்திரேலியாவில் நிறைவேற்றப்பட்ட அற்றோணி தத்துவத்தினை இரத்துச் செய்து செயலிழக்கச் செய்ததாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் மேற் குறிப்பிடப்பட்ட அற்றோணி தத்துவம் நடைமுறையிலற்றதென்றும் அது செல்லுபடியாகா தென்றும் ஆகையால் மேற்குறிப்பிடப்பட்ட அற்றோணி தத்துவக்காரரினால் எனது பெயரில் செய்யும் எந்தச் செயல் அல்லது நடவடிக்கை தொடர்பாக நான் வகைகூறுவதில்லையெனவும் மேலும் அறியத்தருகின்றேன்.

**ஷியாமினி வஜிரபிரபா விக்ரமரத்ன கன்கந்த**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2020ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு-05.**

2021ஆம் ஆண்டு சனவரி மாதம் 29ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ. 885.07** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## 1964 இலக்கம் 28ன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : மீரி/பி.செ/கா/3/2019/04
காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/7/2018/எச்டபிள்யூ/439

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2020.12.28ஆம் திகதிய 2208/02 இலக்க அரசாங்க வர்த்மானியைப் பார்க்கவும்

**உப அட்டவணை**

மாகாணம் : மேல்

மாவட்டம் : கம்பஹா

பிரதேச செயலாளர் பிரிவு : மீரிகமை

| ஆ.வ.இலக்கம்/கடத்திரள் இலக்கம் | துண்டு இல | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 510234/2/16 | 19 | 0.6419 | அம்பலன்வத்தை | இல.31, பஹல போக்கலகம |
| 510276/01/03 | 07 | 0.2441 | இந்திபரப்பே | இல.40ஏ, இந்திபரப்பே |
| 510276/02/6 | 23 | 1.0324 | இந்திபரப்பே | இல.40ஏ, இந்திபரப்பே |
| 510281/01/8 | 02 | 0.0557 | சியம்பலாகொடை | இல.40ஏ, இந்திபரப்பே |
| 510223/01/26 | 26 | 0.5484 | ஹிரிவல | இல.40டீ, ஹிரிவல |
| 510230/01/15 | 60 | 0.9736 | கனேகொடை | இல.31, பஹல போக்கலகம |
| 510224/01/13 | 02 | 0.0237 | யாப்பாலன | இல.40, கனேகொடை |
| 510226/01/13 | 03 | 0.0073 | ஹிரிவலமுல்லை | இல.40டீ, ஹிரிவல |
| 510234/01/5 | 24 | 0.7654 | அம்பலன்வத்தை | இல.31, பஹல போக்கலகம |

**டப்ளிவ்.பி.பிரசாத் இந்திக**
**பிரதேச செயலாளர்,**
**மீரிகமை**

**மீரிகமை பிரதேச செயலாளர் காரியாலயம்**
**2020................**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பிரதேச சபை - வெலிமடை

1. கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறான நிர்மாணிப்புகளுக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| நிர்மாணிப்பின் பெயர் | தேவைப்படும் தரம் | ஒப்பந்தம் | தேவைப்படும் விலைமனுப் பிணை | | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | பிணை (ரூ) | செல்லுபடிக்காலம் | |
| வெலிமடையிலுள்ள உத்தேச வெளிப்புற மேடை மற்றும் வர்த்தகக் கட்டிடம் | கட்டிடம் தொடர்பாக சீ-7 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் | 06 மாதங்கள் | 90,000/- | 2021 மே 18ஆம் திகதி | 1,500/- |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைக் கோரல் ஊடாக விலைமனுக் கோரல் நடாத்தப்படுவதுடன் ஊவா மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்துகொண்டுள்ள விலைமனுதாரர்களுக்காக அது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் நிர்மணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடனான (சீடா), மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக கட்டிட நிர்மாணிப்புத்துறையில் பதிவைக் கொண்டிருக்கவும் வேண்டும்.
4. '1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின்' ஏற்பாடுகள் மூலம் இந்த விலைமனு நிர்வகிக்கப்படுகின்றது. அதனால், விலைமனுக்களுடன் பொது ஒப்பந்தப் பதிவாளரினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை விலைமனுதாரர் சமர்ப்பிக்க வேண்டியதுடன் இத் தேவையைப் பூர்த்தி செய்யாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக் கோரும் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்பாடுகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. 5ஆம் பிரிவில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்களை, வெலிமடை பிரதேச சபைத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் (தொ.பே. 057-2245973, மின்னஞ்சல் - pswelimada@gmail.com) வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை விலைமனுக் கோரும் ஆவணங்களை பரீட்சித்துப் பாக்கலாம்.
7. வெலிமடை, பிரதேச சபைத் தலைவரிற்கு ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம், 2021 பெப்ரவரி 8ஆம் திகதி முதல் 2021 மார்ச் 01ஆம் திகதி வரை, 9.00 மணி முதல் 15.00 மணி வரை, ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். கொடுப்பனவு முறையானது ரொக்கப்பணமேயாகும்.
8. விலைமனுக்கள், 2021 மார்ச் 02ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், வெலிமடை பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத் திறப்பில் கலந்துகொள்ள முன்வரும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில், விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் அவை உடனடியாகத் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள், அவை சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்திற்குப் பின்னர் 77 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும், இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்படும் அல்லது அட்டவணையில் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைவாக நிர்மாணிப்பு உத்தரவாத நிதியத்திடமிருந்து (CGF) பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையொன்றையோ கொண்டிருத்தல் வேண்டும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**பிரதேச சபை, வெலிமடை**
**057-2245973**
**2021 பெப்ரவரி 02ஆம் திகதி**

## கமத்தொழில் அமைச்சு
## மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை

JEDB

## பலகை மரங்களை விற்பனை செய்வதற்கான பெறுகை அறிவித்தல்

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹோப், போப்பிட்டி மற்றும் லுல்கந்தர பெருந்தோட்டங்களில் வெட்டுவதற்காகவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள இயூகலிப்டஸ் மரங்கள் 279 தொகையை விற்பதற்கா விலைமனுக் கோரப்படுகின்றது.

| பெருந்தோட்டம் | பகுதி | துறை இலக்கம் | கட்டி இலக்கம் | மரங்களின் வகை | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| லுல்கந்தர | லுல்கந்தர | 1 | | கலப்பு இயூகலிப்டஸ் | 55 |
| லுல்கந்தர | லுல்கந்தர | 2/4 | | கலப்பு இயூகலிப்டஸ் | 21 |
| லுல்கந்தர | லுல்கந்தர | 3 | | கலப்பு இயூகலிப்டஸ் | 96 |
| போப்பிட்டி | போப்பிட்டி | 1AB/8/2 | | கலப்பு இயூகலிப்டஸ் | 67 |
| ஹோப் | கீழ் பகுதி | 14A | I | கலப்பு இயூகலிப்டஸ் | 40 |

விலைமனு விண்ணப்பங்களை, உரித்தான தோட்ட அலுவலகங்களிலிருந்தோ அல்லது கொழும்பு 02, வொக்ஷோல் லேனில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலிருந்தோ, ரூ. 2500/- மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணத்தைச் செலுத்தி, 2021.02.09 முதல் 2021.02.22 அன்று பி.ப. 3.00 மணி வரையான வார வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2021.02.23 அன்று பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது இது தொடர்பாக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படலாம். விலைமனுக்கள் அன்றைய தினமே குறித்த நேரத்தில் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவருக்கு அச் சந்தர்ப்பத்தில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை,**
**55/75, வொக்ஷோல் லேன்,**
**கொழும்பு 02.**
**தொலைபேசி: 0115733791**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள் ளது) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6149 (EL) | Toshiba DC Contactor Tips | 250,000.00 | 3,500.00 | 09-03-2021 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6129 (EL) | Skew Motor for Yard Cranes | 35,000.00 | 1,000.00 | 09-03-2021 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/20/PT/13/52 | Fuel Injectors for Cummins 855 Engines - 12 Nos. | 18,000.00 | 1,000.00 | 02-03-2021 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/02/53 | Lubricant (12600 Litters HC 32 Lanka) | 36,000.00 | 1,000.00 | 02-03-2021 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/17/054 | 1500 Mtrs of Cloth Drill for Year 2021 | 15,000.00 | 1,000.00 | 02-03-2021 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/02/54 | Lubricant (12600 Litters HC 46 Lanka) | 36,000.00 | 1,000.00 | 03-03-2021 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/02/55 | 22464 Litters Engine Oil for Caterpillar C-15 Engine 3E 9840 | 140,000.00 | 3,500.00 | 03-03-2021 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/02/57 | 100 Nos. Roller Bearings 21318E | 25,000.00 | 1,000.00 | 04-03-2021 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/09/055 | Steel Materials to Renovate Steel Bridge at Passenger Terminal | 35,000.00 | 1,000.00 | 04-03-2021 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும் படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2021 பெப்ரவரி 08ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு - 01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2370443**

# விலைமனுக் கோரல்

## ராகம கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் உணவகச் சேவையை நடாத்திச் செல்வதற்காக விலைமனுக்கோரல் வருடம் 2021/ 2022

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 2021/ 2022 வருடத்திற்காக உணவகச் சேவையை நடாத்திச் செல்வதற்காக அனுபவம் மற்றும் தகைமைகளைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இந்த வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக் கோரப்படுகின்றது. இது தொடர்பாக,

i. விபாயார பெயர்ப் பதிவுச் சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ii. நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக ஆகக் குறைந்தது அண்ணளவாக மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

02. இந்த ஒப்பந்தம் தொடர்பாக மீளளிக்கப்படாத ரூ. 1,000.00 வீதம் கட்டணமொன்றை வைத்தியசாலையின் சிறாப்பரிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பொது 172 பற்றுச் சீட்டு மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை வைத்தியசாலை கணக்காளரிற்குச் சமர்ப்பிப்பதன் மூலம், 2021.02.08 முதல் 2021.03.01 வரையான சாதாரண அலுவலக தினங்களில், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இந்த வைத்தியசாலை பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனு விண்ணப்பங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், 2021/ 2022 தொடர்பாக உணவகச் சேவையை வழங்குவதற்காக எனக் குறிப்பிட்டு, 2021.03.02 அன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில், “தலைவர் பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, ராகம” என்ற முகவரிக்கு அனுப்பப்படவோ அல்லது அந்த முகவரியிலேயே பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ வேண்டும்.

04. விலைமனு ஆவணங்கள் இரண்டு பிரதிகளைக் கொண்டதாக மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிடப்பட்டு, வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, அவை மீண்டும் தனி தபாலுறையொன்றினுள் சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. விலைமனு திறக்கப்படுவது, 2021.03.02 அன்று மு.ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படுவதுடன் அச் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்க்கு அல்லது அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்குக் கலந்து கொள்ளலாம்.

06. தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்ததன் பின்னர், ஒரு நபருக்குப் பெற்றுக்கொள்ள முடிவது ஒரு விலைமனு ஆவணம் மாத்திரமேயாகும்.

07. இது தொடர்பான மேலதிக தகவல்களை, 011-2951239 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**ராகம.**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு அலுவலர்களை நியமனம் செய்வதற்கான விண்ணப்பம் கோரல் அறிவித்தல்

2019.09.12 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 28/2019 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வெற்றிடம் நிலவுகின்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) இரண்டு பதவிகளுக்காகத் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1ஆம் வகுப்பு 1ஆம் தரத்தின் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. அடிப்படைத் தகைமைகள்**

I இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பு 1 ஆம் தரத்தின் அலுவலரொருவராக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 3 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் இந்த மூன்று வருட காலத்தினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 03 வருடங்களினுள் எவ்விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்பட்டிராதிருத்தல் வேண்டும்.

03. மேலேயுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள அலுவலர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றின் மூலம் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவதோடு அங்கு காட்டுகின்ற திறமைகளுக்காக புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கமைய புள்ளிகள் வழங்கப்படும். (புள்ளிகள் வழங்கும் திட்டம் www.ird.gov.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.)


04. மேற்குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள அலுவலர்கள் www.ird.gov.lk என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமொன்றை சரியாகப் பூரணப்படுத்தி 2021.02.21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் அல்லது நேரடியாக எடுத்துவந்து கீழேயுள்ள முகவரியில் கையளித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பிவைக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பணிப்பாளர் (தகவல் மற்றும் தொழில்நுட்பம்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்” எனக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதோடு தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்.

**திகதி 2021.02.08**

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**அ. பெட்டி - 515, கொழும்பு 02.**
**தொலைபேசி இல - 011-2135450/ 011-2135453**
**தொலை நகல் - 011-2338639**
**மின்னஞ்சல் - herath hurcaird.gov.lk**

BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE




# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2021ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு-05.**

2021ஆம் ஆண்டு சனவரி மாதம் 29ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ. 898.63** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## 1964 இலக்கம் 28 உடைய காணி சுவீகரிப்பு (திருத்தம் செய்யப்பட்டது) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460ஆம் அத்தியாயம்)

### 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி மேற்படி பிரிவின் பிரகாரம், சுவீகரிக்கப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2209/10 இலக்கம் மற்றும் 2021.01.04 திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலைப் பாருங்கள்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | ஹக்மண |
| கிராம சேவகர் பிரிவு | : | இலக்கம் 295, கோங்கல கிழக்கு |
| காணியின் பெயர் | : | கோங்கலயாய, மொட்டடுமுரே |
| திட்டவரைபட இல | : | அ.க.பி. 187 |
| துண்டு இலக்கம் | : | 221, 222, 223, 224, 225, 226, 227 |
| கோவை இலக்கம் | : | HAK/LAN/1/15 |
| முகவரி | : | பிரதேச செயலாளர் அலுவலகம், ஹக்மண. |

**திகதி 2021 பெப்ரவரி 01**

**பீ.எஸ். ரன்ஜித்த**
**பிரதேச செயலாளர்,**
**ஹக்மண.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 2020/2021 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதி கைநூலை அச்சிடல் மற்றும் வழங்கல்

**(ஒப்பந்த இல. UGC/Admin/3)**

01. பின்வரும் தொகைகளிலான பல்கலைக்கழக அனுமதி கைநூல்களை அச்சிட்டு மற்றும் வழங்குவது தொடர்பாக, பிரசித்தி பெற்ற அச்சகங்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பாக, திணைக்களப் பெறுகைக் குழுத்தலைவர் அழைக்கின்றார்.

| மொழி மூலம் | | தொகை |
|---|---|---|
| 01. சிங்களம் | - | 80,000 |
| 02. தமிழ் | - | 20,000 |
| 03. ஆங்கிலம் | - | 5,000 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

03. ஆர்வங்காட்டும் தகுதியுள்ள விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்களை, 011-2685183 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிர்வாக பிரதி செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 3.00 இடையே, கொழும்பு 07 வோர்ட் பிரதேசம், இல. 20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிர்வாகப் பிரிவில் விலைமனுக்கோரும் ஆவணங்கள் மற்றும் மாதிரிகளை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. தேவைப்படும் தகைமைகள்

i. மூன்று (03) வருட வியாபாரப் பதிவுடன் ஒப்செட் அச்சக வசதியைக் கொண்டுள்ள அச்சகங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

ii. உபயோகிக்கப்படும் பேப்பர் மற்றும் பிரிஸ்டல் போர்ட் என்பன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வேண்டப்படும் ஏனைய அனைத்து விலைமனுக் கோரும் நிபந்தனைகளையும் (A4 பேப்பர் - 80GSM, பிரிஸ்டல் போர்ட் - 250GSM) தரச்சிறப்பு மட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. இந்த வேலையை மேற்கொள்வதற்காக உத்தேச ஒப்பந்தப் பெறுமதியின் 50% செயற்பாட்டு மூலதனக் கொள்ளளவை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும். (விலைமனுதாரர்களுக்கான வங்கி வசதிகள் பற்றிக் குறிப்பிடும், இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்படும் வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதமொன்றினால் அல்லது 03 வருட காலப் பகுதிக்கான, கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கைகள் மூலம் இது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

iv. குறித்த விலைமனுதாரர், நடைமுறையிலுள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பிரகாரம், தமது அச்சகமானது சம்பளங்கள், ஊசேநி, ஊநிதி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் உரித்தான ஆவணங்களை விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

v. கடந்த 2 வருட காலப் பகுதியில் வெற்றிகரமாய் பூர்த்தி செய்யப்பட்ட, நிகரான தரத்தையுடைய அச்சு வேலைகளின் நான்கு (04) மாதிரிகள் (ஆகக்குறைந்தது 100 பக்கங்களை கொண்ட புத்தகங்களை அச்சிடுதலைக் கொண்டிருக்கும்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

vi. நவீன தொழில்நுட்பவியல் மற்றும் குறித் நேரத்தில் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தேவைப்படும் அச்சகத்தின் பௌதிக சூழல் காணப்படுவதை விலைமனுதாரர் உறுதிப்படுத்த வேண்டும். (அச்சடிப்பதற்காக விலைமனுதாரரினால் உபயோகிக்கப்படும் அச்சு இயந்திரங்களின் விபரம் விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும்)

05. மீளளிக்கப்படாத கட்டணமான ரூ. 5,000/-ஐ (ஐயாயிரம் ரூபாய்) செலுத்தப்பட்டமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பதன் மூலம், 2021 பெப்ரவரி 8ஆம் திகதி முதல் 2021 பெப்ரவரி 24ஆம் திகதி வரையான வேலை நாட்களில், மு.ப. 9.30 மற்றும் பி.ப. 3.00 இடையே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிர்வாக பிரதி செயலாளரிடமிருந்து, ஆர்வங்காட்டும் விலைனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனுக் கோரும் ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிற்கு ரொக்கப்பணத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06. விலைமனுகள், 2021 பெப்ரவரி 25ஆம் திகதி, பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுக்கள், கொழும்பு - 07, வோர்ட் பிரதேசம், இல. 20, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு செயலக புதிய சபை அறையில், 2021 பெப்ரவரி 25ஆம் திகதி மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத் திறப்பில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

08. அனைத்து விலைமனுக்களும், விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 90 நாட்களைக் கொண்ட காலமொன்றிற்குச் செல்லுபடியாகும், 2020.10.28 திகதியிடப்பட்ட, பெறுகை வழி காட்டல்குறிப்பு 5.3.11 இற்கான இணைப்பு 36 மூலம் குறித்துக் காட்டப்பட்டவாறான, முகவரொருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட, ரூ. 200,000/- (இரண்டு இலட்சம் ரூபா மாத்திரம்) ஒரு மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையொன்றினால் இணைக்கப்படல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சிறாப்பரிற்கு ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

09. எந்தவொரு விலைமனுவையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்வசம் வைத்துள்ளதுடன் எவ்வகையிலும் ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் கடப்பாடு அதற்கில்லை.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோர்ட் பிரதேசம்,**
**கொழும்பு 07.**
**2021 பெப்ரவரி 06.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

**எனது இல:- 3/1/81/2014**
**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல.:- 4-3/2/2014/A/194**

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2188/32ஆம் இலக்க 2020.08.13ஆம் திகதியின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : குருணாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ரிதீகம |
| சிறு பிரிவு | : இஹல விசிதெகே கிழக்கு கோறளே |
| கிராமம் | : லிஹிணிவெஹெர |
| காணியின் பெயர் | : ஹொரலொன் கொல்ல வத்த |
| ஆரம்ப வரைபட இல | : க.தி.இல. 420151, வலயம் இல. 03 மற்றும் தாள் இல 03 |
| துண்டு இல | : 514 மற்றும் 515 |

............................................................
**பிரதேச செயலாளர்/ காணி எடுத்தற் உத்தியோகத்தர் ரிதீகம**

**2021.01.26**
**ரிதீகம பிரதேச செயலகம்**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 39(அ)(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம்:- DER/LAN/LAQUI/A1/05**
**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு கோவை இலக்கம்:- LD/05/2010/VE/74**

ஒரு பொது விடயத்திற்காக அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் 39(அ)(1)ஆம் பிரிவின் கீழ் உரித்து நீக்கம் செய்யும் அறிவித்தல் 2092/17 இலக்க 2018.10.09 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலகப் பிரிவு | : தரணியகலை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இலக்கம் 14ஈ தரணியகலை தெற்கு |
| கிராமத்தின் பெயர் | : தரணியகலை தெற்கு |
| காணியின் பெயர் | : பலாதெணிய வத்த |
| வரைபட இலக்கம் | : KE/DRN/2010/149 |
| காணித்துண்டு இலக்கம் | : 01, 02 |

மேலதிக விபரங்களிற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**ஐ.கே.ஆர்.எஸ். பண்டார மெனிகே,**
**பிரதேச செயலாளர்,**
**தரணியகலை.**

**2021.01. மாதம் 08 ஆம் திகதி**
**தரணியகலை பிரதேச செயலகத்தில்.**

it's what you want
www.adz.lk



Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

## அற்றோணி தத்துவத்தை இரத்து செய்தல்

அவுஸ்திரேலியா, முரும்பீனா VIC 3136, பிரிஸ்பேன் வீதி, இல. 1/23 இல் வசிக்கும் ஷியாமினி வஜிரபிரபா விக்ரமரத்ன கன்கந்த (கடவுச் சீட்டிலக்கம் N 6158302) ஆகிய நான் நாவல, கொஸ்வத்த வீதியில் 4ஆம் ஒழுங்கையில் இல. 08 இல் வசித்த தற்போது கண்டி, குருதெனிய, இலுக்மோதர, இல. 294 இல் வசிக்கும் மாலதி பத்திரென்னஹலாகே சிந்ரா பெரேரா கன்கந்த (தேசிய அடையாள அட்டை இல. 545563754 V) இற்கு வழங்கிய பத்தரமுல்ல பதிவாளர் நாயக திணைக்களத்தில் 2013 ஏப்ரல் 02ஆம் திகதி 2975 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் 2013 மார்ச் 19ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் சட்ட ஆலோசகர் மற்றும் வழக்கறிஞரான மது வர்ணகுலசூரிய அவர்களின் முன் அவுஸ்திரேலியாவில் நிறைவேற்றப்பட்ட அற்றோணி தத்துவத்தினை இரத்துச் செய்து செயலிழக்கச் செய்ததாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் மேற் குறிப்பிடப்பட்ட அற்றோணி தத்துவம் நடைமுறையிலற்றதென்றும் அது செல்லுபடியாகா தென்றும் ஆகையால் மேற்குறிப்பிடப்பட்ட அற்றோணி தத்துவக்காரரினால் எனது பெயரில் செய்யும் எந்தச் செயல் அல்லது நடவடிக்கை தொடர்பாக நான் வகை கூறுவதில்லையெனவும் மேலும் அறியத்தருகின்றேன்.

**ஷியாமினி வஜிரபிரபா விக்ரமரத்ன கன்கந்த**

## அற்றோணி தத்துவத்தை இரத்து செய்தல்

அவுஸ்திரேலியா, முரும்பீனா VIC 3136, பிரிஸ்பேன் வீதி, இல. 1/23 இல் வசிக்கும் ஷியாமினி வஜிரபிரபா விக்ரமரத்ன கன்கந்த (கடவுச் சீட்டிலக்கம் N 6158302) ஆகிய நான் கொழும்பு 05, பூர்வாராம வீதி, இல. 86 இல் வசித்த தற்போது கண்டி, குருதெனிய, இலுக்மோதர, இல. 294 இல் வசிக்கும் மாலதி பத்திரென்னஹலாகே சிந்ரா பெரேரா கன்கந்த (தேசிய அடையாள அட்டை இல. 545563754 V) இற்கு வழங்கிய நுகேகொட, தெல்கந்த மேல் மாகாண வலய அலுவலகத்தில் 2018 பெப்ரவரி 16ஆம் திகதி 905ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் 2018 பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் சட்ட ஆலோசகர் மற்றும் வழக்கறிஞரான மது வர்ணகுலசூரிய அவர்களின் முன் அவுஸ்திரேலியாவில் நிறைவேற்றப்பட்ட அற்றோணி தத்துவத்தினை இரத்துச் செய்து செயலிழக்கச் செய்ததாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் மேற் குறிப்பிடப்பட்ட அற்றோணி தத்துவம் நடைமுறையிலற்றதென்றும் அது செல்லுபடியாகா தென்றும் ஆகையால் மேற்குறிப்பிடப்பட்ட அற்றோணி தத்துவக்காரரினால் எனது பெயரில் செய்யும் எந்தச் செயல் அல்லது நடவடிக்கை தொடர்பாக நான் வகை கூறுவதில்லையெனவும் மேலும் அறியத் தருகின்றேன்

**ஷியாமினி வஜிரபிரபா விக்ரமரத்ன கன்கந்த**

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
### 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல. **KIDS/LND/01/ACQ/06**

காணி அமைச்சின் குறிப்பு இல. **4-3/11/2015/TR/85**

கிரியெல்ல விதாதா வள நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழுள்ள விசாரணை தொடர்பாக அறிவித்தல் ஒன்று 7ஆம் பிரிவின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2020.10.13 ஆம் திகதிய 2197/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

01. மாகாணம் :- சப்ரகமுவ மாகாணம்
02. மாவட்டம் :- இரத்தினபுரி
03. பிரதேச செயலாளர் பிரிவு :- கிரியெல்ல
04. கிராம உத்தியோகத்தர் பிரிவு :- இடங்கொட
05. கிராமம் :- கிரியெல்ல
06. ஆரம்ப வரைபட இல :- இ.கி.வ 182, பிற்சேர்க்கை 39, தாள் 36
07. துண்டு இல : 742, 743, 744
08. விஸ்தீரணம் :- 0.0026, 0.1497, 0.0050 ஹெக்டயார்

**பிரதேச செயலாளர்/காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் கிரியெல்ல**

**2021.01.22**
**கிரியெல்ல பிரதேச செயலகம்.**

### காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல.28 இன்
### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : மீரி/பி.செ/கா/3/2019/04
காணி அமைச்சின் குறிப்பு இல: : 4-3/7/2019/எச்டபிள்யூ/97

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2020.12.01ஆம் திகதிய 2204/06 இலக்க அரசாங்க வர்த்மானியைப் பார்க்கவும்

**அட்டவணை**

மாகாணம் : மேல்

மாவட்டம் : கம்பஹா

பிரதேச செயலாளர் பிரிவு : மீரிகமை

கிராம நிலதாரி பிரிவு : இல.40சீ, திலிணகம

கிராமத்தின் பெயர் : அம்பன

(01) வரைபட இலக்கம் : க.வ.510216, தொகுதி இல.03, தாள் இல.09

துண்டு இலக்கம் : 768 - 786 (துண்டு 13)

விஸ்தீரணம் : 0.5264 ஹெக்டயார்

**டப்ளிவ்.பி.பிரசாத் இந்திக**
**பிரதேச செயலாளர் மற்றும்**
**சுவீகரித்தல் அதிகாரி,**
**மீரிகமை**

**பிரதேச செயலாளர் காரியாலயம்**
**மீரிகமை**
**2020................**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**.·.பெமியொலொஜி (பிவீடி) எல்டிடீ**
பதிவு முகவரி: இல. 326/A/7, இட்ட கார்ட்ன், பலன்வத்த, பன்னிப்பிட்டி
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2021.01.05
பதிவிலக்கம்: பிவீ 00232733

**கம்பனி செயலாளர்**

Repeat Your ad For Better Offers

### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட உத்தரவாத கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**புரொப்பஷனல்ஸ் வித்தவுட் போர்டர்ஸ் லங்கா (கரண்டி) லிமிட்டட்**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.25

பதிவிலக்கம்: ஜீஎல் 00226336

பதிவு முகவரி: **இல. 276, ரொபர்ட் டீ அல்விஸ் மாவத்தை, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ.**

**கம்பனி செயலாளர்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடன் இல. மற்றும் தலைப்பு** | **3698/ 3699-SRI:** விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம். |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **STHRD/SB - E12:** இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்தின் பொது அளவீடுகள் பௌதிகவியல் ஆய்வுகூடம் - 1ஆம் வருடம் (பௌதிகவியல் 2) தொடர்பாக, ஆய்வுகூட உபகரணத்தின் பெறுகை. |
| **விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரம்** | 2021.03.10 அன்று 13.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. கல்வி அமைச்சின் கீழாக, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டத்தை (STHRD செயற்றிட்டம்) நடைமுறைப்படுத்தும் செலவினங்களுக்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கு 145 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிற்குச் சமமான நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியுதவியின் ஒரு பகுதியைப் பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ADB இன் தகுதியுள்ள மூல நாடுகளிலிருந்தான விலைமனுதாரர்களுக்கு இந்த விலைமனுக்கோரல் திறக்கப்பட்டுள்ளது.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம். தொழில்நுட்பவியல் பீடத்தின் 1ஆம் வருட (பௌதிகவியல் 2) பொது அளவீடுகள் பௌதிகவியல் ஆய்வுகூடம் தொடர்பான ஆய்வுகூட உபகரணங்களின் ("குறித்த பொருட்கள்") பெறுகை STHRD/SB - E12 தொடர்பாக, தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் ("குறித்த கொள்வனவுக்காரர்"), விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் சார்பாக, பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த பெறுகையானது, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்தின் 1ஆம் வருடம் (பௌதிகவியல் 2) பொது அளவீடுகள் பௌதிகவியல் ஆய்வுகூடம் தொடர்பான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகையை உள்ளடக்கியதாகும். குறித்த நிறைவுறும் காலம் ஒப்பந்தம் கைச்சாத்திடும் தினத்திலிருந்து 84 நாட்கள்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றுவதற்கு குறித்த விலைமனுதாரர் பின்வரும் முக்கிய தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - பிரிவு 6இல் விபரிக்கப்பட்டுள்ள வழங்கல் வீச்சிற்கு நிகரான சிக்கல்மிகு மற்றும் தன்மையுடன் கூடிய, பின்வரும் அட்டவணையின் நிரல் 2இல் குறிப்பிடப்பட்டுள்ள, பெறுமதியையுடைய, ஒவ்வொரு ஒப்பந்தங்களிலும் ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களில், கடந்த மூன்று வருட காலப்பகுதிக்குள் ஒரு பிரதான ஒப்பந்தக்காரராக பணிபுரிந்து வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களாக பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுவரும் ஒப்பந்தங்களுக்காக, விலைமனுதாரரினால் பொறுப்பேற்கப்பட்ட மொத்தக் கொடுப்பனவுக்காக கணக்கிடப்பட்ட பின்வரும் அட்டவணையின் நிரல் 3இன் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

இந்த விலைமனுக் கோரலில் பங்குபற்றுவதற்குத் தேவைப்படும் முக்கிய தகைமைகள்.

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| லொட் இலக்கங்கள் மற்றும் விபரக் குறிப்பு | ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இரூ) | சராசரி வருடாந்த நிதிப்புரள்வின் பெறுமதி (இரூ) |
| லொட் 1 - பௌதிக கருவிகள் | 4.40 மில்லியன் | 10.92 மில்லியன் |
| லொட் 2 - அளவையியல் கருவி - 1 | 5.90 மில்லியன் | 14.56 மில்லியன் |
| லொட் 3 - அளவையியல் கருவி - 2 | 3.00 மில்லியன் | 7.28 மில்லியன் |
| லொட் 4 - அளவையியல் கருவி - 3 | 1.50 மில்லியன் | 3.64 மில்லியன் |
| லொட் 5 - FEA Simulation மென்பொருள் | 3.00 மில்லியன் | 7.28 மில்லியன் |
| லொட் 6 - மின்சார உபகரணம் | 5.90 மில்லியன் | 14.56 மில்லியன் |
| லொட் 7 CAM மென்பொருள் | 3.00 மில்லியன் | 7.28 மில்லியன் |

4. ADB இன் பொருட்களின் பெறுகை ஒற்றை படிநிலை - ஒரு தபாலுறை நடைமுறைக்கமைவாக திறந்த போட்டி ரீதியான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக் கோரும் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறான தகுதியுள்ள நாடுகளிலிருந்தான அனைத்து விலைமனுதாரர்களுக்கும் அது திறக்கப்பட்டுள்ளது.
5. மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக் கோரும் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கவும் விலைமனுதாரர்கள் பின்வரும் அலுவலரை தொடர்புகொள்ள வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
**செயற்றிட்ட அமுலாக்கப் பிரிவு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித**
**வளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல் ஓயா, இலங்கை.**
**ZIP குறியீடு : 70140**
**தொலைபேசி : 045-2280081**
**பெக்ஸ் : 045-2280081**
**மின்னஞ்சல் : sposb_sthrd@mohe.gov.lk**

- ஒரு முன்னோடி விலைமனுக் கூட்டம், 2021.02.17 அன்று 10.30 மணிக்கு, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடம், சபை அறையில் நடைபெறும்.

6. "இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்தின் 1ஆம் வருட (பௌதிகவியல் 2) பொது அளவைகள் பௌதிக ஆய்வுகூடம் தொடர்பாக, ஆய்வுகூடஉபகரணத்தின் பெறுகை: STHRD/SB" தொடர்பாக, விலைமனுக் கோரும் ஆவணங்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆவணத்திற்குமான மீளளிக்கப்படாத கட்டணமான 5,000/- (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப்பணமாகவோ அல்லது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், STHRD செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் பெயரிலான ஒரு வங்கி வரைவு மூலமாகவோ அல்லது பெலிஹுல் ஓயா இலங்கை வங்கிக் கிளையில் பராமரிக்கப்படும் 0083695474 கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்வதன் மூலமாகவோ செலுத்தப்படுவதன் மூலம், தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான ஒரு விலைமனுக் கோரும் ஆவணத்தைக் கொள்வனவு செய்துகொள்ளலாம். குறித்த விலைமனுக் கோரும் ஆவணங்கள், 2021.03.09 வரையான வார நாட்களில் 15.30 வரை வழங்கப்படும். விலைமனுக்களை இழப்பது அல்லது தாமதமாகி அனுப்புவது தொடர்பாக பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாட்டாது.
7. விலைமனுக்கோரும் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறான ஒரு விலைமனுப் பிணையுடன் 2021.03.10 அன்று 13.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழேயுள்ள முகவரிக்கு உங்கள் விலைமனுவை அனுப்பிவையுங்கள்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**STHRD செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.**
**பெலிஹுல் ஓயா, இலங்கை.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென இரண்டு பிரதிகளில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகள் வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முறையே மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிக்கப்பட்டு முத்திரை பொறிக்கப்படல் வேண்டும். இரண்டு தபாலுறைகளும் ஒரு தனிதபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான ஒப்பந்த ID குறிக்கப்படல் வேண்டும்.

8. விலைமனுத் திறப்பில் கலந்துகொள்ள முன்வரும் விலைமனதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரம் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.**
**பெலிஹுல் ஓயா, இலங்கை.**

**ZIP குறியீடு : 70140**

**திகதி : 2021.02.08**

### மேல் மாகாண சபை
### விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு - (மேல் மாகாணம்)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஹோமாகம, மாவட்ட விவசாயப் பயிற்சி நிறுவனத்தில் எட்டு பொலிடெனல்கள் (Polytunnels) மற்றும் இரண்டு நிழல் வீடுகளை (Shade Houses) (முழுமையான / அரை தானியங்கி) வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்

01. ஹோமாகம, மாவட்ட விவசாயப் பயிற்சி நிறுவனத்தில் எட்டு பொலிடெனல்கள் (**Polytunnels**) மற்றும் இரண்டு நிழல் வீடுகளை (**Shade Houses**) (முழுமையான / அரை தானியங்கி) வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதற்கு இரட்டைக் கடித உறை முறைமையின் கீழ் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விவசாய அமைச்சின் (மேமா) செயலாளரின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
02. தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமைத் தகுதித் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - கடந்த ஐந்து வருடங்களில் இதற்கு நிகரான வேலைகளில் உள்ள அனுபவம்
    - நிதி ஸ்திரத்தன்மை மற்றும் கொள்ளளவு (ஆவண ரீதியான சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2021 பெப்ரவரி 12ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவை வைப்பு சகிதம் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் விவசாய அமைச்சிலிருந்து (மேமா) ஆவணங்களைக் கொள்வனவு செய்யுமாறும் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர். பதிவு செய்து கொண்டுள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.
04. ஹோமாகம, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் 2021 பெப்ரவரி 15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் தளப் பரிசீலனைகள் இடம்பெறும். பங்குபற்றும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.
05. பத்தரமுல்ல, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, மேல் மாகாண சபை, விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சிற்கு 2021 பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் விலைக்கோரல்களை தனித்தனியாக நகல் பிரதிகளாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன்பின் தொழில்நுட்ப விலைக்கோரல்கள் உடன் திறக்கப்படும்.
06. விலைமனுக்கள் 2021 மே மாதம் 31ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
07. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
08. உங்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களை விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 011-2092660, கையடக்கத் தொ.பே. 077 3751689)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு,**
**மேல் மாகாண சபை,**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**தொ.பே. 011-2092660**

### மகாவலி வலயங்களிலுள்ள குடியேற்றங்களில், கால்வாய் மற்றும் பொது உட்கட்டமைப்பு மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## இலங்கை மகாவலி அதிகார சபை

# விலைமனு அறிவித்தல்

பின்வரும் வேலைகள் தொடர்பாக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, 2021.03.02 அன்று 11.00 மணி வரை, இலங்கை மகாவலி அதிகார சபை (MASL) திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் சார்பாக, கொழும்பு 10, டி. பீ ஜாயா மாவத்தை, இல. 500, 9ஆம் மாடி, இலங்கை மகாவலி அதிகார சபை, பணிப்பாளர் நாயகத்தால் பொறுப்பேற்கப்படும்.

| இல. | ஒப்பந்த இல. | வேலை விபரம் | பதிவிற்காகத் தேவைப்படும் சீடா துறை மற்றும் தரம் | விலைமனுக் கோரும் ஆவணத் தொகுதி யொன்றிற்கான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டடணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | PDG/TS/ CON/ HW/ GA/ GABION/ 06 | பேராதனை பூங்கா முடிவு தொடக்கம் கெட்டம்பே விஹாரை நோக்கி, மகாவலி ஆற்றின் வலதுகரையோரமாக, கேபியன் சுவர் மற்றும் மணிசரிவு தடுப்புச் சுவரை நிர்மாணித்தல். (பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ. 156.35 மில்லியன் மற்றும் ஒப்பந்தக் காலம் 365 நாட்களாகும்) | நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு நிர்மாணிப்பு தொடர்பாக சீ3 அல்லது சீ2 தரம் | 25,000.00 |

மேற்படி அட்டவணையில் வேலைகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள சீடா பதிவு திட்டத்தின் கீழாக, குறித்த துறையில் தேவைப்படும் தரத்தை கொண்டுள்ள விலைமனுதாரர்கள், ஒப்பந்தத்தின் பெறுமதி ரூ. 5 மில்லியனிற்கும் மேற்படும் போது 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்துகொண்டவர்கள் மாத்திரம், விலைமனுக்கோருவதற்கு தகைமை பெறுகின்றனர்.

2021.01.11 திகதியிடப்பட்ட, பொது நிதியியல் சுற்றுநிருப இலக்கம் 03/2020(i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

கொழும்பு 10, டி.பீ. ஜாயா மாவத்தை, இல. 500, 3ஆம் மாடி, இலங்கை மகாவலி அதிகாரசபை, பிரதி பணிப்பாளர் நாயகத்திற்கு (தொழில்நுட்பச் சேவைகள்) முகவரியிடப்பட்டு, கம்பனி, நிறுவன கடிதத் தலைப்பிலான ஒரு எழுத்துருவிலான வேண்டுதலைச் சமர்ப்பித்து, ஒரு தொகுதி விலைமனுக் கோரும் ஆவணத்திற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம், 2021.02.08 முதல் 2021.03.01 வரையான வேலை நாட்களில், 9.30 மணி முதல் 15.00 மணி வரை, உத்தேச விலைமனுதாரர்களினால் விலைமனுக் கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு-10, டி.பீ. ஜாயா மாவத்தை. இல. 500, 3ஆம் மாடி, இலங்கை மகாவலி அதிகார சபை, பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (தொழில்நுட்பச் சேவைகள்) அலுவலகத்தில், 2021.02.08 முதல் 2021.03.01 வரையான சாதாரண வேலை நாட்களில், 9.30 மணி முதல் 16.00 மணி வரை விலைமனுக் கோரும் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், ஒப்பந்தத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, 2021.03.02 அன்று 11.00 மணிக்கு முன்னர், கொழும்பு 10, டி.பீ. ஜாயா மாவத்தை, இல. 500, 9ஆம் மாடி, இலங்கை மகாவலி அதிகார சபை பணிப்பாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

விலைமனுதாரர்கள் அல்லது இரண்டிற்கு (02) மேற்படாத அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத் திறப்பில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2689651, 011-2687475 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம், இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்பச் சேவைப் பிரிவை தயவு செய்து தொடர்புகொள்ளுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை.**

## நிர்மாண செயற்றிட்டம் தொடர்பில் விலைமனு கோரல்

### மாவட்டச் செயலகம் - கேகாலை

01. கேகாலை மாவட்டச் செயலகத்தின் பெறுகைக் குழுவினால் பின்வரும் நிர்மாணங்களுக்காக CIDA பதிவு சகிதம் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2021-03-01ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரங்கள் | மதிப்பிடப்பட்ட வேலையின் பெறுமதி (ரூ. மில்.) | வேலை நிறைவு செய்யப்பட வேண்டிய காலம் (மாதங்கள்) | CIDA தரம் (2021ஆம் வருடத்தில் செல்லுபடியாதல் வேண்டும்) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) | கேள்விப் பிணை முறி (மீளளிக்கப் படும்) |
|---|---|---|---|---|---|
| 01. புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் படிநிலை VI | 20.05 | 08 மாதங்கள் | C-6 மற்றும் C-5 | ரூபா 2,000.00 | ரூபா 200,500.00 |
| 02. தெரணியகல பிரதேச செயலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் படிநிலை V | 25.05 | 08 மாதங்கள் | C-5 மற்றும் C-4 | ரூபா 2,000.00 | ரூபா 200,500.00 |
| 03. மாவட்டச் செயலக A கூட்ட மண்டபம், அரச அதிபரின் உத்தியோகபூர்வ அறை மற்றும் கணக்கிடல் பிரிவை விஸ்தரித்து மேம்படுத்துதல் | 13.00 | 07 மாதங்கள் | C-6 மற்றும் C-5 | ரூபா 2,000.00 | ரூபா 130,500.00 |

02. I. தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள், அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் 2021ஆம் வருடத்திற்கான CIDA பதிவின் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும். VAT வரிக்கான பதிவு உள்ளதாயின் VAT வரி செலுத்தல்கள் செயற்பாட்டில் உள்ளன என்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

II. விலைமனுதாரர் கடந்த 05 வருட காலத்தினுள் அரச, உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அரை அரச நிறுவனங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்குச் சமமான பெறுமதி சகிதம் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய நிர்மாணமொன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (இதற்கு இயைபுடைய சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

03. மதிப்பீட்டுப் பெறுமதியின் 1/5 அல்லது அதற்கு மேற்பட்ட கடன் வசதியை தமது நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ள இயலும் என்பதற்காக இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. விலைமனுதாரரினால் மேற்குறிப்பிடப்பட்ட செயற்றிட்டத்திற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மாவட்டச் செயலகத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவைச் செலுத்தி (ஒரு செயற்றிட்டத்திற்கு) 2021-02-10ஆம் திகதி முதல் 2021-02-25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இயைபுடைய மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை மாவட்டச் செயலகத்தின் பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 035-2223112)

05. சகல விலைமனுதாரர்களும் தமது விலைமனுப் பிணை முறியை அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றின் வங்கிப் பிணை முறியாக அல்லது இந்த அலுவலகத்தின் சிறாப்பரிடம் ரொக்கப் பணமாக வைப்புச் செய்வதன் மூலம் சமர்ப்பிக்கலாம்.

06. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய செயற்றிட்டத்தின் பெயரை குறிப்பிட்டு, முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு, 2021-03-01ஆம் திகதி பி.ப. 4.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாவட்டச் செயலகத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். அந்த நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே பி.ப. 4.15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம். பொருத்தமான ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மாவட்ட பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மஹிந்த எஸ். வீரசூரிய,**
**மாவட்டச் செயலாளர் / அரச அதிபர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்டச் செயலகம், கேகாலை.**
**2021-02-08**

### கமத்தொழில் அமைச்சு

## அகற்றப்பட்ட வாகனங்களின் விற்பனைக்கான விலைமனுக்கோரல்

01. கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்யும் நோக்கில் **2021.02.22 ஆம் திகதி வரை** விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| இலக்கம் | வாகனத்தின் பதிவு இலக்கம் | வகை |
|---|---|---|
| 01 | 32 - 3902 | மிட்சுபிசி பெஜிரோ ஜீப் வண்டி |
| 02 | PB - 8219 | மைக்ரோ டபல் கெப் வண்டி |
| 03 | PB - 8218 | மைக்ரோ டபல் கெப் வண்டி |
| 04 | PB - 8223 | மைக்ரோ டபல் கெப் வண்டி |
| 05 | KR - 1208 | சார்வலட் வகை மோட்டார் கார் வண்டி |

02. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வாகனங்களை **2021.02.08** ஆம் திகதி தொடக்கம் **2021.02.19** ஆம் திகதி வரை காரியாலய நாட்களில் **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00** மணி வரை கமத்தொழில் அமைச்சின் வளாகத்தில் பரீட்சித்துக்கொள்ள முடியும்.

03. மனுதாரர்களினால் விலைமனுக்களை முன்வைக்க எதிர்பார்க்கும் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக மீள் செலுத்தப்படாத கட்டணமான **ரூபா. 1,000** ஐ கமத்தொழில் அமைச்சின் முதலாம் மாடியில் அமைந்துள்ள சிறாப்பருக்கு செலுத்த வேண்டும். குறித்த பற்றுச்சீட்டை அதே மாடியில் அமைந்துள்ள பெறுகை பிரிவுக்கு **2021.02.08** ஆம் திகதி தொடக்கம் **2021.02.19** அம் திகதி வரை காரியாலய நாட்களில் **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00** மணி வரை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை, செயலாளர், கமத்தொழில் அமைச்சு, "கொவிஜன மந்திரய", 80/5, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு **2021.02.22 பி.ப 02.00** மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது கமத்தொழில் அமைச்சின் முதலாம் மாடியில் அமைந்துள்ள பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுக்களை சேகரிப்பதற்கான பெட்டியில் இட வேண்டும். மனுக்கோரல் நேரம் நிறைவடைந்ததன் பின் கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இடும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"அகற்றப்பட்ட வாகனங்களின் விற்பனை - 2021"** மற்றும் வாகனத்தின் பதிவு இலக்கம் ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.

06. மனு ஆவணத்தில் வாகன இலக்கத்தின் முன்னால் குறிப்பிட்டுள்ள மீள் செலுத்தப்படாத கட்டணத்தை ஒவ்வொரு வானகத்திற்கும் வேறு வேறாக கமத்தொழில் அமைச்சின் சிறாப்பருக்கு செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை மனு ஆவணத்துடன் முன்வைக்க வேண்டும்.

07. மனுக்களை ஏற்றுக்கொள்ளல் **2021.02.22** ஆம் திகதி **பி.ப 02.00** மணியுடன் நிறைவடைவதுடன் உடனடியாக கமத்தொழில் அமைச்சின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் F - 30 மனுக்கள் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட எழுத்து மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள முடியும்.

08. மேல் குறிப்பிடப்பட்ட வாகனங்களின் விற்பனை தொடர்பில் இறுதி முடிவுகளை எடுக்கும் உரிமை கமத்தொழில் அமைச்சின் செயலாளரை சார்ந்ததாகும்.

**செயலாளர்**
**கமத்தொழில் அமைச்சு**

## பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

### வட மத்திய மாகாணம்

வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் 2021ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்படும் வீதி பராமரிப்பு வேலைகளுக்காக கீழேயுள்ள வகுதி கீழாக பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | பெறுகை இலக்கம் | வகுதி | விலைமனுப் பிணை | | மீளளிக் கப்படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| | | | பெறுமதி (ரூ) | செல்லுபடி யாகும் தினம் | |
| 01 | NCP/PRDA/ Bitumen Sprayer/2021/01-A | தாருடன் தாரைத் தெளிக்கும் இயந்திரமொன்றை (Bitumen Sprayer) வாடகைக்கு வழங்கல் மற்றும் தாரைத் தெளிக்கும் சேவையைப் பெற்றுக் கொள்ளல். (மின்னேரிய, நொச்சியாகம, மரதன் கடவள) | 93,600.00 | 2021.06.15 | 3,500.00 |
| 02 | NCP/PRDA/ Bitumen Sprayer/2021/01-B | தாருடன் தாரைத் தெளிக்கும் இயந்திரமொன்றை (Bitumen Sprayer) வாடகைக்கு வழங்கல் மற்றும் தாரைத் தெளிக்கும் சேவையைப் பெற்றுக்கொள்ளல் (அநுராதபுரம், ஹொரொவப்பொத்தான) | 93,700.00 | 2021.06.15 | 3,500.00 |
| 03 | NCP/PRDA/ Emulsion/2021/02 | திரவ தாரை வழங்கல் (CSS 01, CRS 01, MC 30) | 56,000.00 | 2021.06.15 | 2,500.00 |
| 04 | NCP/PRDA/Sign Board/2021/03 | வீதி சமிக்ஞை கம்பங்களைத் தயாரித்து வழங்கல் | 40,000.00 | 2021.06.01 | 1,500.00 |
| 05 | NCP/PRDA/Hot Bitumen/2021/04 | சூடான தாரை வழங்கல் (HOT Bitumen) | 100,000.00 | 2021.06.15 | 3,500.00 |
| 06 | NCP/PRDA/Single Cab/2021/05 | 2WD Single Cab வண்டிகள் 5ஐ வாடகைக்கு வழங்கல் | 9,000.00 (வாகன மொன்றிற் காக) | 2021.05.18 | 1,500.00 |
| 07 | NCP/PRDA/ Tipper/2021/06 | 01 கியூப் கொள்ளளவையுடைய 8 டிப்பர் வண்டிகளை வாடகைக்கு வழங்கல் | 12,500.00 (வாகன மொன்றிற் காக) | 2021.05.18 | 1,500.00 |
| 08 | NCP/PRDA/Road Marking/2021/07 | வீதியை அடையாளமிடல் (Thermoplastic Road Marking) | 95,000.00 | 2021.06.15 | 3,000.00 |
| 09 | NCP/PRDA/Cut Back/2021/08-A | Cut Back வழங்கல் (அநுராதபுரம், ஹொரொவப்பொத்தான, நொச்சியாகம, மரதன்கடவள.) | 94,000.00 | 2021.06.15 | 3,500.00 |
| 10 | NCP/PRDA/Cut Back/2021/08-B | Cut Back வழங்கல் (சேவாகம, மின்னேரிய, மன்னம்பிட்டி) | 84,000.00 | 2021.06.15 | 3,000.00 |

01. இந்த செயற்பாடுகள் தொடர்பான விலைமனு விண்ணப்பங்களை, அநுராதபுரம், எச்.பீ சேமசிங்ஹ மாவத்தையில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலகத்திலிருந்து, 2021.02.08 முதல் 2021.03.01 வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 15.00) மீளளிக்கப்படாத வைப்பை நிறுவனத்திற்கு ரொக்கப்பணமாகச் செலுத்தியதன் பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

02. இந்த பெறுகை தொடர்பான விலைமனு திறக்கப்படும் தினம் தொடக்கம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில், வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் குறித்த தொகை பொது முகாமையாளர் பெயரில் இலங்கை வங்கிக் கணக்கு இலக்கமான 0001472049 என்ற கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, பற்றுச்சீட்டு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டு, NC100 பற்றுச்சீட்டைப் பெற்று அது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விண்ணப்பங்கள், விலைமனுக்களுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, உரித்தான அனைத்து ஆவணங்களினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, மீண்டும் அவை தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான இலக்கம் மற்றும் வகுதி சரியாகக் குறிப்பிடப்பட்டு, 2021.03.02 அன்று மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரில் வந்து அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும்.

04. இது தொடர்பான ஒரு முன்னோடி விலைமனுக் கூட்டம், 2021.02.22 அன்று மு.ப. 10.00 மணிக்கு எச்.பீ. சேமசிங்ஹ மாவத்தையில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.

05. விலைமனுப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்பட்டு முடிவடைந்தவுடன் உடனடியாக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு கலந்து கொள்ளலாம்.

06. இது தொடர்பான மேலதிக தகவல்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

07. இந்த விலைமனுக் கோரல் மற்றும் கையளிக்கப்படல் தொடர்பாக பெறுகைக் குழு கொண்டுள்ள தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (வ.ம.மா)**
**எச்.பீ. சேமசிங்ஹ மாவத்தை,**
**அநுராதபுரம்.**
**தொலைபேசி இலக்கம்: 025-2222505**





For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
+94 112429341
Hotline 1949

ஹம்பாந்தோட்டை - கதிர்காமம் வரை

# 25,000 பனை மரங்களை நடுவதற்கு நடவடிக்கை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரை 25,000 பனை மரங்களை நடுவதற்கு பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.பனை தொடர்பான உற்பத்திகளை அதிகரித்து கிராமிய பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்தோடு இவ் இரண்டு பிரதேசங்களிலும் பனை மரங்களை நடக்கூடிய சகல பிரதேசங்களையும் இனங்கண்டு பனை மரங்களை நடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனூடாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரவிலை மற்றும் திஸ்ஸமகாராமை ஆகிய பிரதேசங்களில் பனை கைத்தொழிலில் ஈடுபடும் தொழில் முயற்சியார்களை கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஹம்பாந்தோட்டை வீரவிலை பிரதேசத்தில் பனை மரச் செய்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்ததோடு கடந்த நல்லாட்சி அரசாங்க ஆட்சிக்காலத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 230 ஏக்கர் பனைச் செய்கை முற்றாக அழிக்கபட்டதினால் பனை கைத்தொழிலில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள் மூலப் பொருளினைபெறுவதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். இதனால் இப் பிரதேசங்களில் மீண்டும் பனைச் செய்கை பண்ணப்படவுள்ளது.

# சென்னையில் இந்திய பாரம்பரிய மருத்துவ ஏற்றுமதி கருத்தரங்கம்

நம் இந்திய பாரம்பரிய மருத்துவர்கள், மருந்து வகைகள் கொரோனா பேரிடர் காலத்தில் முக்கிய பங்காற்றியது அனைவருக்கும் தெரிந்ததே. இந்நிலையில் நம் பாரம்பரிய இயற்கை மருத்துவ வகைகள் உலக நாடுகளுக்கு தெரியப்படுத்துவது நம் கடமையாகும்.

இந்நிலையில் உலகத் தமிழ் வர்த்தக சங்கம், இந்திய மருத்துவ ஹோமியோபதி இயக்குனரகம், தேசிய சித்த மருத்துவம், மத்திய சித்த ஆராய்ச்சி நிறுவனம் அவர்களின் வழிகாட்டுதல் படி இந்திய பாரம்பரிய மருத்துவ ஏற்றுமதி கருத்தரங்கம்

'INDIAN TRADITIONAL MEDICINE EXPORT CONFERENCE' (ITMEC) மார்ச் 13ம் திகதி சென்னையில் நடைபெற உள்ளது. நிகழ்வில் மத்திய ஆயுஷ் செயலாளர், மற்றும் வர்த்தக அமைச்சக முதன்மை செயலாளர், தமிழ்நாடு அரசின் சுகாதாரத் துறை முதன்மை செயலாளர், இந்திய மருத்துவ இயக்குனரகம் போன்றவர்களை அழைத்து நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் சித்த மருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோபதி, யுனானி போன்ற மருந்து மற்றும் மருத்துவர்கள் பயனடையும் வகையில் கருத்தரங்கு நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் டெலி மெடிசன்(Tele Medicine), வெல்லனஸ் சென்டர் (Wellness Centre), ஸ்மார்ட் கிளினிக் (Smart Clinic) பாரம்பரிய மருத்துவம்



மருத்துவ வகைகளை ஏற்றுமதி, சித்த மருத்துவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு போன்றவைகளை உள்ளடக்கிய கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் பல்வேறு நாட்டு தூதர்கள், துணை தூதர்கள், அம்பாசிடர்கர்கள், வர்த்தக ஆணையாளர்கள், இந்தத் துறையில் முதலீடு செய்ய சிறு முதலீட்டாளர்கள் போன்றவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் தென்னிந்தியாவில் முன்னணி மருந்து நிறுவனங்கள் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் அரங்கம் அமைத்து காட்சிப்படுத்த உள்ளன என உலகத் தமிழ் வர்த்தக சங்கம் செல்வகுமார் தெரிவித்தார்.

# மேல் மாகாணத்தில் 1,406 பேர் கைது

மேல் மாகாணத்தில் மேற் கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 681 சந்தேகநபர்கள் உட்பட 1,406 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் (06) காலை 06.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரையான காலப் பகுதியில் இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 44 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

# சகவாழ்வு என்பது தேர்தலை குறிக்கிறது அது இன,மத பேதமின்றி கிடைத்த வரம்

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய

(அஷ்ரப் ஏ சமத்)





சகவாழ்வு என்பது தேர்தலினைக் குறிக்கின்றது. மரணமும் தேர்தலும் நிச்சயமாக நடக்கும் இரு விடயங்கள் என முன்னாள் தேர்தல் ஆணையாளரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஊடகவியலாளர் எம். ஜே பிஸ்ரின் மொஹமத் எழுதிய "சகவாழ்வியம் " எனும் நூல் வெளியீட்டு வைபவம் கொழும்பு தமிழ்சங்கத்தில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மகிந்த தேசப்பிரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நூலின் முதற்பிரதியை எம்.ஆர் பௌன்டேசனின் தலைவர் ஜகீன் பெரோஸ் மொஹமட் பெற்றுக் கொண்டார்.

இங்கு உரையாற்றிய மகிந்த தேசப்பிரிய

சகவாழ்வு என்பது தோ்தலினைக் குறிக்கின்றது. இலங்கையில் வாழ்ந்த பிரஜைகளுக்கு முதன் முதலில் வாக்களிக்கும் உரிமை 1931ஆம் ஆண்டே கிடைக்கப் பெற்றது. தற்பொழுது 90 வருடங்களாக தேர்தல் வாக்களித்து வருகின்றோம். இந்த நாட்டில் இரண்டே இரண்டு நிகழ்வுகள் அவசியமாக நடைபெறும். ஒன்று தேர்தல் .மற்றது மரணம் தற்பொழுது கொரோனாவும் வந்துள்ளது. ஜாதி மதம் நிறம் மொழி என்ற வித்தியாசம் பாராமால் மனிதனுக்கு கிடைத்துள்ள ஒரு வரம் தோ்தலாகும். அனுராதபுரத்தில் தமி்ழ் பேசும் முஸ்லிம்களும் சிங்களம் பேசும் பௌத்தர்களும் சகவாழ்வுடன் வாழுகின்றனர். அங்கு பிறந்து வாழ்ந்த பிஸ்ரின் சகவாழ்வினைக் கற்றுக் கொண்டதன் விளைவாகவே அந்த அனுபவங்களை வைத்தே அவர் சகவாழ்வியம் என்ற நூலைப் பகிர்ந்து கொள்கின்றார். இந்த வெள்ளவத்தை தமிழ் சங்க மண்டபத்தில் அபாயா, சாரி, தேசிய உடுப்பு , நீண்ட காற்சட்டை அணிந்து ஒரு குடையின் கீழ் சகல இன மத நிற வித்தியாசமின்றி மூவினங்களை சார்ந்தவர்களும் இங்கு கூடியிருக்கின்றோம். இதுவே சகவாழ்வு .ஆனால் நம்மில் இன்னும் சிலர் இன ,மத நிற குல என பிரிந்து நின்று வாழ்கின்றார்கள். நாம் இந்த நாட்டில் சமாதானமாக வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொறு மதமும் அன்பு சாந்தி சமதானத்தினையே நமக்கு போதிக்கின்றது. இஸ்லாம் மதம் பிஸ்மில்லா இர் ராஹூமான் இர்ராஹிம் என்ற குர் ஆன் ஆரம்ப வசனத்தில் இருந்தே , ஆரம்பிக்கின்றது.

இதில் சகவாழ்வு அடங்கியிருக்கின்றது. எனவே பிஸ்ரின் எழுதிய இந்த சகவாழ்வியம் என்ற நூல் எழுதி வெளியிட்டமைக்காக அவரை நான் பாராட்டுகின்றேன் என்றார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் எம்.எம். மொஹமட், கொழும்பு பல்கலைககழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பரீனா ருசைக், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஜே.எம். அஸ்ரப் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

கொரோனாவினால் உயிரிழந்த

# இருமாத குழந்தையின் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா அன்பளிப்பு



கொரோனா தொற்றினால் உயிரிழந்த வெலிகம பிரதேசத்தை சேர்ந்த இரு மாத குழந்தையின் குடும்பத்திற்கு வெலிகம நகரசபை உறுப்பினர் எம். எம் அஷ்பாக் அஹமதின் முயற்சியினால் இரு இலட்சம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவரின் வேண்டுகோலின்படி வெலிகம நகரசபை தலைவர் ரெஹான் ஜயவிக்ரமவும் அவருடைய கொழும்பு மற்றும் இலங்கையில் வேறு பகுதிகளில் இருக்கும் சமூக வலைத்தள நண்பர்களும் இணைந்த இதனை அன்பளித்துள்ளனர்.



இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெலிகம நகர சபை உறுப்பினர் அஷ்பாக் கடந்த ஜனவரி 14 ஆம் திகதி வெலிகம மலபலாவ புதிய தெருவில் வசிக்கும் முஹம்மத் என்னும் 2 மாத வயதுடைய குழந்தை நோய்வாய்பட்டு மாத்தறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிர் இழந்தது. பின்னர்பீசீஆர் பரிசோதனையில் அக்குழந்தைக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் அறிவித்தனர். குழந்தையின் சடலம் உறவினர்களிடம் வழங்கப்படவில்லை.பின்னர் அக்குழந்தையின் சடலம் தகனம் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவுவது குறித்து நகர சபை தலைவருடன் கலந்துரையாடினேன்.எனது வேண்டுகோளை ஏற்று பாதிக்கப்பட்ட அக்குழந்தையின் குடும்பத்திற்கு நகரசபை தலைவர் ரெஹான் ஜயவிக்ரமவும் அவருடைய சமூக வலைத்தலை நண்பர்களுடன் இணைந்து அக்குழந்தையின் குடும்பத்திற்கு ரூபா 2 லட்சம் வழங்கினார்கள்.இதற்கான நகர சபை தலைவருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் என்றும் அவர் கூறினார். (பா)

# ஹிந்தி மொழி சேவையின் முன்னாள் பணிப்பாளர் ஜமால்தீன் காலமானார்



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் முன்னர் இயங்கி வந்த ஹிந்தி மொழி சேவைக்கான முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற முகம்மது ஜமால்தீன் தனது 89வது வயதில் நேற்று முன்தினம் காலமானார். மன்னார் எருக்கலம்பிட்டி பிறப்பிடமாக கொண்ட இவரது ஜனாஸா நேற்று முன்தினம் தெஹிவளை ஜும்மா பள்ளிவாசலில் தொழுகைக்காக வைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

# கொள்ளையர்கள் மூவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

மிக நீண்ட காலமாக பாரிய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த கொள்ளையர்கள் மூவரை கெகிராவ பொலிசார் கைது செய்துள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய அண்மையில் கெகிராவ மஹ எலகமுவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது சந்தேக நபர்கள் மூவரை கெகிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் கைது செய்துள்ளனர்.கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு வெள்ளவத்தை மற்றும் கெகிராவ, கெகிராவ மஹ எலகமுவ பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிரதான சந்தேக நபர் வெள்ளவத்தை பகுதியை சேர்ந்தவர் என்பது பொலிசார் நடத்திய மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. பொலிசார் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலா துறையினூடாக 3 பில்லியன் வருவாயை ஈட்டுவதற்கு திட்டம்

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்



எதிர்காலத்தில் சுற்றுலா துறையினூடாக மூன்று பில்லியன் வருவாயை ஈட்டுவதற்கு திட்டமிட்டுள்ளோம் என சுற்றலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கதெரிவித்தார்.

மத்தளை ராஜக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு முதல் தடவையாக 165 சுற்றலாப் பயணிகளுடன் கஸகஸ்தான் நாட்டிலிருந்துவருகை தந்த எயார் அஸ்டானா விமானத்தினை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகவிலாளர்கள் முன் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இங்குதொடாந்தும் உரையாற்றும் போதுதெரிவித்ததாவது, மத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையத்திற்கும் சுற்றுலாத் துறைக்கும் மிகவும் முக்கியமான தினமாகும். இன்றுமுதல் தடவையாக இங்குவருகை தரும் எயார் அஸ்டான விமானம் எதிர்காலத்தில் வாரத்தில் ஆறு நாட்கள் மத்தளை விமானநிலையத்திற்கு வருகை தரவுள்ளது.

கொவிட் 19 கொறொனாதொற்றிற்கு, மத்தியிலும் நாம் எமது நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரநடவடிக்கை எடுத்தோம். இதற்காக விமானநிலையங்களை திறந்தோம். இந்த திட்டத்திற்கு அமைவாக இந்தவிமான சேவை வாரத்தில் ஒருநாள் இங்குவருகை தரவுள்ளது. இந்தவிமான சேவை மாலைதீவுசுற்றுலாப் பயணிகளுக்கு திறந்து விடப்பட்டதும் வாரத்தில் ஒருநாளே வருகை தந்தது. தற்பொழுது வாரத்தில் ஆறு நாட்கள் மாலைதீவிற்கு வருகைதருவதோடு எதிர்காலத்தில் எமது நாட்டிற்கும் வாரத்தில் ஆறு நாட்களுக்கு மத்தளைக்கு வரவழைப்பதற்கும் நாமும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதனூடாக கூடுதலான சுற்றுலாப் பயணிகளுக்கு எமதுநாட்டிற்கு வருகை தருவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்காக விமானநிலையம் திறந்தவிடப்பட்டதிலிருந்து எமது நாட்டிற்கு இதுவரை 2500 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது ஆரம்பம் மரதிரமே இதனை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.. நாட்டிலுள்ளசகல பிரதேசங்களிலும் புதியசுற்றலா பிரதேசங்களை இனங்கண்டு ஊக்குவிக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

# தெற்கில் 2940 பேருக்கு கொரோனா

(வெலிகம தினகரன் நிருபர்)



தென் மாகாணத்தில் இதுவரை 2940 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக தென் மாகாண கொரோனா தொற்றுத் தடுப்பு மத்திய நிலைய அதிகாரி சாமர மஹரகமே தெரிவித்தார்.

இவர்களுள் காலி மாவட்டத்தில் 1570 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 1046 பேரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 324 பேரும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், இதுவரை 1907 பேர் பூரண சுகம் பெற்று வீடு திரும்பியுள்ளனர். இவர்களுள் காலி மாவட்டத்தில் 1058 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 648 பேரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 201 பேரும் அடங்குவர். இதுவரை, தென் மாகாண காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டம் அடங்கலாக 88281 பீ.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலிமாவட்டத்தில் 40165 பரிசோதனையும் மாத்தறை மாவட்டத்தில் 27539 பரிசோதனைகளும் , ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 20577 பீ.சீ.ஆர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தென் மாகாணத்தில் 3146 குடும்பங்களைச் சேர்ந்த7424 பேர் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹேக்கித்த கோவில் சேதவிபரம் பிரதமருக்கு அறிவிக்கப்படும்

பாபுசர்மா குருக்கள், செந்தில் தொண்டமான் நேரில் விஜயம்

(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கமைய சனிக்கிழமை காலை ஏற்பட்ட தீ காரணமாக பாதிக்கப்பட்ட வத்தளை ஹேக்கித்த





ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலை பார்வையிட வந்ததாகவும் சேதவிபரம் குறித்து பிரதமரிடம் எடுத்துக்கூறவுள்ளதாகவும் பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் பாபு சர்மா குருக்கள் தெரிவித்தார்.

அவர் நேற்று முன்தினம் மாலை அங்கு விஜயம் செய்தார்.பாபுசர்மா குருக்கள், இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வி. உமாமகேஸ்வரன் மற்றும் முன்னாள் மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் ஆகியோர்கள் கோவிலுக்கு சென்று தீயினால் எரிந்தவற்றை பார்வையிட்டனர்.

இத்தீவிபத்து காரணமாக எவருக்கும் எந்தவித ஆபத்து ஏற்படாதபோதும் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது.

கோயிலின் மேற்பகுதியிலுள்ள முதலாம் மாடி திருமண மண்டபம் முற்றாக எரிந்து சாம்பலானதுடன் இரண்டாம் மாடி மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.இந்த தீ விபத்து காரணமாக விழிபாடு இடம்பெறும் கீழ்த்தளம் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. விக்கிரகங்களுக்கோ வழிபடும் சுவாமிகளுக்கோ எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

இதனால் பக்தர்கள் எவ்வித அச்சமும் கொள்ளத்தேவையில்லை. வழிபாடுகள் வழமைபோன்று நடைபெறுகின்றது. மக்கள் வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியும்.

குறிப்பாக தீ ஏற்பட்டவுடன் தீயணைப்பு படையினருக்கு அரங்காலவர்கள் உடனடியாக தகவல் கொடுத்ததையடுத்து அவர்கள் விரைந்துவந்து தீயை அணைத்துள்ளார்கள். இதனையிட்டு அரங்காவலர்களுக்கும் தீயணைப்புப் படையினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இங்கு முன்னாள் மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் கருத்துத் தெரிவிக்கையில், தீ காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது. இதனை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று கோவிலை புனர்நிர்மானம் செய்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவருவதாக தெரிவித்தார்.

# ஜம்இய்யதுல் உலமா சிலாபம் கிளை புதிய உறுப்பினர் தெரிவு

( புத்தளம் தினகரன் நிருபர்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் மாவட்ட பிரதேசங்களில் சிலாபம் மற்றும் மாதம்பை பகுதிகளை இணைத்து புதிதாக நிறுவப்பட்ட சிலாபம் பிரதேசக் கிளையின் தெரிவு அண்மையில் சிலாபம், சோனகத் தெரு ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது.

இதில் மாதம்பை மற்றும் சிலாபம் பிரதேசங்களிலுள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் அங்கத்துவம் பெற்ற 30 ஆலிம்கள் கலந்துகொண்டனர்.

ஜம்இய்யாவின் புத்தளம் மாவட்டக் கிளைத் தலைவர் அஷ்ஷைக் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் மற்றும் புத்தளம் மாவட்ட நிர்வாக உறுப்பினர்களும் இத்தெரிவில் கலந்து கெண்டனர். சிலாபம் பிரதேசக் கிளை நிர்வாக குழு உறுப்பினர்களும் இதன் போது தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தியன் ப்ரீமியர் லீக்

# ஏலத்துக்கு 31 இலங்கை வீரர்கள் பதிவு எதிர்வரும் 18ம் திகதி சென்னையில்

இந்தியன் ப்ரீமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலத்துக்கு, இலங்கை அணியை சேர்ந்த 31 வீரர்கள் பதிவுசெய்துள்ளதாக, ஐ.பி.எல். நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐ.பி.எல். 2021 இற்கான ஏலத்துக்கான வீரர்கள் பதிவு கடந்த 4ம் திகதியுடன் நிறைவுக்கு வந்திருந்தது. இதன்படி, ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்துக்காக பதிவுசெய்யப்பட்ட வீரர்களின் பட்டியலை ஐ.பி.எல். நிர்வாகம் வெளியிட்டிருந்தது.

இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த 31 வீரர்கள், ஐ.பி.எல். ஏலத்துக்காக பதிவுசெய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த வீரர்கள் ஏலத்துக்காக 814 இந்திய வீரர்கள் மற்றும் 283 வெளிநாட்டு வீரர்கள் என 1097 வீரர்கள் பதிவுசெய்துள்ளனர்.

தேசிய அணிகளுக்காக விளையாடிய 207 வீரர்கள் பதிவுசெய்துள்ளதுடன், தேசிய அணியில் அறிமுகமாகாத 863 வீரர்கள் மற்றும் அங்கத்துவ நாடுகளில் இருந்து 27 வீரர்களும் பதிவுசெய்துள்ளனர்.

ஐ.பி.எல். தொடரில் அணியொன்று அதிகபட்சமாக 25 வீரர்களை உள்ளடக்க முடியும். இம்முறை ஏலத்துக்கு பதிவுசெய்த வீரர்களிலிருந்து வெறும் 61 வீரர்களே அணிகளுக்காக இணைக்கப்படுவர். அத்துடன், மொத்தமாக 283 வெளிநாட்டு வீரர்கள் ஏலத்தில் பங்கெடுக்கும் நிலையில், 22 வீரர்களை மாத்திரமே அணிகளில் இணைத்துக்கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 18ம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது. இந்த வீரர்கள் ஏலம் இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**அணிகள் மற்றும் வீரர்களின் எண்ணிக்கை**

ஆப்கானிஸ்தான் – 30
அவுஸ்திரேலியா – 42
பங்களாதேஷ் – 5
இங்கிலாந்து – 21
அயர்லாந்து – 2
நேபாளம் – 8
நெதர்லாந்து – 1
நியூசிலாந்து – 29
ஸ்கொட்லாந்து – 7
தென்னாபிரிக்கா – 38
இலங்கை – 31
ஐக்கிய அரபு இராச்சியம் – 9
அமெரிக்கா – 2
மேற்கிந்திய தீவுகள் – 56
சிம்பாப்வே 2

**பதிவுசெய்துள்ள வீரர்கள்**

இந்திய வீரர்கள் (அறிமுகமானவர்கள்) – 21
வெளிநாட்டு வீரர்கள் (அறிமுகமானவர்கள்) – 186
அங்கத்துவ நாட்டு வீரர்கள் – 27
அறிமுகமாகாத, குறைந்தது ஒரு ஐ.பி.எல். போட்டியில் விளையாடிய இந்திய வீரர்கள் – 50
அறிமுகமாகாத, குறைந்தது ஒரு ஐ.பி.எல். போட்டியில் விளையாடிய வெளிநாட்டு வீரர்கள் – 2
இந்திய வீரர்கள் (அறிமுகமாகாதவர்கள்) – 743
வெளிநாட்டு வீரர்கள் (அறிமுகமாகாதவர்கள் – 68



## இலங்கை கிரிக்கெட்டின் முன்னேற்றத்துக்காக இணையும் சங்கா, முரளி, அரவிந்த, மஹானாம

இலங்கை கிரிக்கெட்டை வளப்படுத்தும் முகமாக தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவொன்றை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ (05) நியமித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களை உள்ளடக்கி இந்த குழு நியமிக்கப்பட்டள்ளது. குழுவின் தலைவராக 1996ம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றுக்கொடுத்த குழாத்திலிருந்த அரவிந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் இலங்கை அணியின் முன்னேற்றத்துக்கு காரணமாக இருந்த, முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார, முத்தையா முரளிதரன் மற்றும் ரொஷான் மஹானாம ஆகியோரும் இந்த குழுவில் பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் சபையில் நடக்கும் விடயங்கள் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தேசிய விளையாட்டு குழு ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்குவதே இந்த குழுவின் பிரதான செயற்பாடு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டை நெருக்கமாக கண்காணித்து சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டி மட்டங்களை நிலையான உயர்வுக்கு அழைத்துச் செல்லவேண்டும் எனவும் இந்த குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் வீரர்களை, இலங்கை கிரிக்கெட் சபையின் கீழ் செயற்படும் கிரிக்கெட் குழுவில் பெயரிடுவதற்கும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பரிந்துரை செய்துள்ளார். விளையாட்டுத் துறை அமைச்சர், கடந்த சில நாட்களாக விளையாட்டுத்துறையில் பல மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றார். குறிப்பாக, வீரர்களின் பிரகாசிப்புக்கு அமைய அவர்களுக்கான ஊதியம் வழங்குவது மற்றும் உடற்தகுதி, ஒழுக்கம் என்பவை தொடர்பிலும் அவதானம் செலுத்தவேண்டும் என அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் :

## புதிய உள்ளூர் கொரோனா தொற்று எதுவும் பதிவாகவில்லை – அவுஸ்திரேலியா

மெல்போர்னில் இன்று (திங்கட்கிழமை) ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டி இடம்பெறவுள்ள நிலையில் இன்று மூன்றாவது நாளாக அவுஸ்திரேலியாவில் கொரோனா தொற்று எதுவும் பதிவாகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நெறிமுறை காரணமாக, அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டியை பார்வையிட 30,000 இரசிகர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இது வழக்கத்தை விட 50% குறைவு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் கொரோனா தொற்றினை எதிர்த்துப் போராடுவதில் வெற்றிகண்ட நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியாவில், ஜனவரி மாதம் மெல்போர்னை வந்தடைந்த வீரர்கள் இரண்டு வாரம் ஹோட்டல்களில் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் 500 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்ட ஹோட்டலில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து அவருடன் தொடர்புடையவர்களுக்கு மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளியுடன் கிட்டத்தட்ட 1,200 நெருங்கிய தொடர்புகள் இருந்ததாகவும் அவர்களில் எவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என்றும் மெல்போர்ன் தலைநகரான விக்டோரியா மாநிலத்தில் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இதேவேளை கடந்த வாரங்களில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட நியூ சவுத் வேல்ஸ், குயின்ஸ்லாந்து மற்றும் மேற்கு அவுஸ்திரேலியாவில் புதிய உள்ளூர் கொரோனா தொற்று நோயாளிகள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



அவுஸ்திரேலிய பிக் பாஷ்:

## வின்ஸின் அபார ஆட்டத்தால் சிட்னி சிக்சர்ஸ் சம்பியன்

இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் வின்ஸ் குவித்த 95 ஓட்டங்களும் அவர் எடுத்த ஒரு முக்கியமான பிடியும் அவுஸ்திரேலிய பிக் பாஷ் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் சிட்னி சிக்சர்ஸ் அணி சம்பியனாக உதவின.

சிட்னி விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் வின்ஸின் அதிரடி துடுப்பாட்ட உதவியுடன் பேர்ச் ஸ்கோச்சர்ஸை 27 ஓட்டங்களால் சிட்னி சிக்சர்ஸ் வெற்றிகொண்டு மூன்றாவது தடவையாக பிக் பாஷ் சம்பியனானது.இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிட்னி சிக்சர்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 188 ஓட்டங்களைக் குவித்தது. பதிலளித்து துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் 9 விக்கெட்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. ஜனவரி 30ஆம் திகதி நடைபெற்ற தகுதிகாண் (முதலாவது அரை இறுதி) போட்டியில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸுக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 98 ஓட்டங்களைக் குவித்த ஜேம்ஸ் வின்ஸ், அதே அணிக்கு எதிரான நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் 5 ஓட்டங்களால் சதம் பெறத் தவறினார். பேர்ச் ஸ்கோர்ச்சர்ஸ் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியபோது அதிரடி ஆட்டக்காரர் மிச்செல் மார்ஷின் பிடியை மிகவும் சிரமத்துக்கு மத்தியில் ஜேம்ஸ் வின்ஸ் டைவ் பண்ணி எடுத்த பிடி ஆட்டத்தில் திருப்புமுனையாக அமைந்தது.

போட்டி சுருக்கம்

சிட்னி சிக்சர்ஸ் 20 ஓவர்களில் 188 – 6 விக்., (ஜேம்ஸ் வின்ஸ் 95, டெனியல் க்றிஸ்டியன் 20, அண்ட்றூ டய் 29 – 2 விக்., ஜய் ரிச்சர்ட்சன் 45 – 2 விக்.) பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் 20 ஓவர்களில் 161 – 9 விக்.(லியாம் லிவிங்ஸ்டோன் 45, கெமரன் பேங்ரொவ்ட் 30, ஆரொன் ஹார்ட்ல் 26, பென் ட்வாஷுய்ஸ் 37 – 3 விக்., ஜெக்சன் பேர்ட் 14 – 2 விக்., டெனியல் க்றிஸ்டின 25 – 2 விக்., சோன் அபொட் 33 – 2 விக்.) ஆட்டநாயகன்: ஜேம்ஸ் வின்ஸ், தொடர்நாயகன்: ஜொஷ் பிலிப்.



## "எப்.எஸ்.கே மியன்டாட் பிரீமியர் லீக்" கிரிக்கெட் கழகங்கள், கழக சீருடைகள், உரிமையாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு!









**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

30 வருடமாக இயங்கிவரும் சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள எப்.எஸ்.கே. மியன்டாட் பிரீமியர் லீக் கிரிக்கட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் அறிமுகமும், அதற்கான சீருடை, உரிமையாளர்கள் மற்றும் வெற்றிக் கிண்ணம் என்பன அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வுகள் கடந்த (05) மாலை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தில் கழக தலைவர் ஏ. பாயிஸ் தலைமையில் நடைபெற்றது.

சாந்தம் சலேஞ்சர்ஸ், மருதூர் வோரியர்ஸ், மாளிகா யுனைடெட், வொலி லயன்ஸ் ஆகிய நான்கு அணிகள் இச்சுற்றுத் தொடரில் மோதவுள்ளன. இதன் அணித் தலைவர்களாக முறையே ஏ.எச். முர்ஸித், ஏ. சப்னாஸ், எம்.எஸ். அன்வர் மற்றும் ஏ.எம். ஜஹான் ஆகியோரும் தெரிவாகியுள்ளனர். எப்.எஸ்.கே. மியன்டாட் பிரீமியர் லீக் கிரிக்கட் சுற்றுப்போட்டியின் கழக உரிமையாளர்களான ஆர்.எம். றினோஸ், எம்.எல். நவாஸ், யூ.கே. நஜீம் மற்றும் ஏ.எல். நாஸர் ஆகியோர் கழக சீருடைகளை அறிமுகம் செய்து வைத்ததுடன், வெற்றி கிண்ணங்களும், பரிசில்களும், லீக் சுற்றுத் தொடரின் கொடியும் இச் சுற்றுத்தொடர் குழுவினரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டு கழக லீக் சுற்றுத்தொடர் தலைவர் எஸ். எம்.அமீர், தவிசாளர் எம்.ஜே.எம். காலித் அடங்கிய பிரதான நிர்வாகிகள், மூத்த மற்றும் இளைய விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 பெப்ரவரி மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.